பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 29 புதன்கிழமை (12.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 167

## போருக்கு பிந்திய சவால்களை எதிர்கொள்ள

# இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் நிரந்தரத் தீர்வு முதலில் தேவை!

### இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா சொல்கிறார்

புதுடில்லி, மே 12

இலங்கையில் போர் முடிந்துவிட்டது. ஆனாலும் அந்த நாட்டுக்கு இன்னமும் நிறையவே சவால்கள் உண்டு. அத்தகைய சவால்களை எதிர்கொள்வதற்கு - அவற்றுக்குரிய பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கு - அந்த நாடு முதலில் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது அவசியம்.

இவ்வாறு தெரிவித்தார் இந்தியாவின் வெளிவிவகாரச் செயலாளர் நிருபமாராவ்.



புதுடில்லியில் நேற்று ஆரம்பமாகிய இலங்கை சம்பந்தமான அரசியல் புலமையாளர்களின் இரண்டு நாள் மாநாட்டை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் நிருபமாராவ் இதனைக் கூறினார்.

ஒவ்சேவர் றிசேர்ச் பவுண்டேசன் (24ஆம் பக்கம் பார்க்க)

## கிருஷ்ணாவுடன் ரணில் சந்திப்பு

புதுடில்லி, மே 12

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெளிவிவகார அமைச்சர் எம்.கே. கிருஷ்ணாவை நேற்றுச் சந்தித்துப் பல்வேறு விடயங்கள் குறித்தும் பேச்சு நடத்தினார்.

இலங்கையின் மீள்குடியமர்வுக்காக மேலும் 382 மில்லியன் டொலர் உதவியை இந்தியா வழங்கவிருப்பதாக ரணிலிடம் கிருஷ்ணா தெரிவித்துள்ளார். (அ-1)

## இலங்கையின் விசாரணைக்குழு சுயாதீனமாக இருக்க வேண்டும்!

### அமெரிக்கா வலியுறுத்து

கொழும்பு, மே 12

இலங்கையின் உள்நாட்டு மோதலின் இறுதிக் கட்டத்தில் சர்வதேச மரபுகள் மீறப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து ஆராய்வதற்காக அமைக்கப்படவுள்ள ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பக்கச்சார்பற்றவர்களாகவும், சுயாதீனமானவர்களாகவும் (24ஆம் பக்கம் பார்க்க)

## ஊடக அமைச்சுக்கு பிரதி அமைச்சர் இல்லை

கொழும்பு, மே 12

ஊடகம் மற்றும் தொடர்பாடல் அமைச்சுக்கு பிரதி அமைச்சர்கள் எவரையும் நியமிப்பதில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஊடகம் மற்றும் தொடர்பாடல் துறைசார் சகல நடவடிக்கைகளையும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேற்கொள்வார் என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க அறிவித்துள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

## வானில் ஏற்றிச் செல்லப்பட்டு தாக்கப்பட்டு மாணவி அடிகாயங்களுடன் ஆஸ்பத்திரியில்!

மந்திகை, மே 12

பருத்தித்துறை ஆத்தியடியைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவரைச் சிலர், பலவந்தமாக வானில் ஏற்றி, தாக்கிய பின்னர் பருத்தித்துறை சாரையடிப் பகுதியில் தள்ளி விழுத்திவிட்டுச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்துடன் நான்கு பேர் சம்பந்தப்பட்டுள்ளனர் என்றும், மாணவியின் வாயில் ஏதோ திராவகம் ஊற்றப்பட்டு, தாக்கப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

மாணவி கூக்குரலிடவே பலமாகத் தாக்கப்பட்டதாகவும், அவ்வேளை அங்கு சிலர் கூடியதை அடுத்து அவரைத் தள்ளி விழுத்திவிட்டு வானில் வந்தவர்கள் தப்பி ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி மகளிர் கல்லூரி ஒன்றில் உயர்தர வகுப்பு (24ஆம் பக்கம் பார்க்க)

## காயங்களுடன் மயங்கிய நிலையில் பெண்மணி வல்லைவெளிப் பற்றைக்குள்!

### அவர் மீட்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில்

அச்சுவேலி, மே 12

வல்லை வெளிப்பற்றைக்குள் காயங்களுடன் பெண்மணி ஒருவர் மயங்கிய நிலையில் காணப்படுவதாக வழிப்போக்கர் தெரிவித்த தகவலை அடுத்து, அச்சுவேலிப் பிரதேச வைத்தியசாலை அம்புலன்ஸ் மூலம் அவர் மீட்டெடுக்கப்பட்டு (24ஆம் பக்கம் பார்க்க)

## நக்ஸலைட்டுக்களைக் கையாள இலங்கையைப் போன்று நாம் இராணுவத்தினரைப் பயன்படுத்த மாட்டோம்

### அமைச்சர் சிதம்பரம் சொல்கிறார்

புதுடில்லி, மே 12

விடுதலைப்புலிகளை கையாள்வதற்கு இலங்கை அரசாங்கம் தனது இராணுவத்தைப் பயன்படுத்தியிருக்கலாம் ஆனால் நாம் நக்ஸலைட்டுக்களை கையாள்வதற்கு எமது இராணுவத்தை பயன்படுத்தப்போவதில்லை.



ஏனெனில் எம்மைப் பொறுத்தவரை அவ்வாறு செய்வது எமது தர்ம சாத்திரங்களுக்கும், நீதி நெறிகளுக்கும் ஏற்புடையது அல்ல.

இந்திய உள்துறை அமைச்சர் பி.சிதம்பரம் இப்படிக் கூறியுள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பிலும் சிங்களக் குடியேற்றத்துக்கு அரசு பல முன்னோடி நடவடிக்கைகளில் மும்முரம்

### அரியநேத்திரன் எம்.பி. சீற்றம்



மட்டக்களப்பு, மே 12

மட்டக்களப்பு மாவட்டத்தின் உயர் அரச பதவிகளுக்கு சிங்கள அதிகாரிகளை நியமித்து இங்கும் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுவருகிறது.

இது கண்டிக்கத்தக்கதும் ஏற்றுக்கொள்ள முடியாததும் ஆகும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

உங்களுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளதா! உடன் விரையுங்கள்

மதிகலர்ஸ் பிறிண்டர்ஸ்

திருமண அழைப்பிதழ் காட்சியறை

Wedding Card Show Room

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 300க்கு மேற்பட்ட பல வர்ண புத்தம்புதிய டிசைன்களுடன் எமது காட்சியறையில் உங்களுக்காக ...

இணையத்தளம் : www.mathicolours.com

15/2B, முருகேசர் லேன், நல்லூர், (முத்திரைச்சந்தி) யாழ்ப்பாணம்.

தொ.இல : 021 2229285, 0777 222524

## ஆஸ்திரேலியா சென்ற அகதிகள் அனர்த்தம்

# அருகில் கப்பல் ஏதும் உண்டா எனத் தேடிச்சென்ற ஐவரே கடலில் மூழ்கிப் பலியாகினர் என்று தெரிவிப்பு

கொழும்பு, மே 12

ஆஸ்திரேலியாவை நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை அகதிகளின் படகில் எரிபொருள், உணவு போன்றவை முற்றாகத் தீர்ந்துபோயிருந்தன என்றும் அருகில் வேறு கப்பல் ஏதாவது தென்படுகிறதா எனப் பார்ப்பதற்காகவே உயிர்காக்கும் அங்கியுடன் ஐவர் கடலில் குதித்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

படகிலிருந்த ஏனைய 59 இலங்கையர்களையும் மீட்ட எம்.வி.பொஸ்டொன் ஜா கப்பலின் தலைமை மாலுமியான ஒலெக் செச்சுலியன் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட இலங்கையர்கள் 20 நாள்களாக கடலில் தத்தளித்தனர் என்றும் கூறிய அவர் இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:-

படகில் ஒருமாத காலத்துக்குப் பின்னர் எரிபொருளும், உணவும், குடிதண்ணீரும் முற்றாகத் தீர்ந்துவிட்டமையால் அவர்கள் அடுத்தது என்ன செய்வதென்று தெரியாத நிலையில் பதற்றமடைந்திருக்கவேண்டும்.

இதன் காரணமாக இவர்கள் உயிர் காக்கும் அங்கியுடன் தெப்பமொன்றின் உதவியுடன் கடலுக்குள் குதித்தனர். ஏதாவது கப்பல் தென்படுகிறதா எனப் பார்ப்பதற்காகவே (02ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நீகனை துரிதமாக விடுவிக்கக் கோரி

# யாழ். மாநகர சபை ஊழியர்கள் நேற்று அடையாள பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், மே 12

யாழ். நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள யாழ். மாநகரசபையின் பிரதி மேஜர் துரைராஜா இளங்கோவை (றீகன்) விசாரணையைத் துரிதப்படுத்தி விடுதலை செய்யவேண்டும் என்று கோரி மாநகர சபை ஊழியர்கள் நேற்று அடையாளப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இந்தப்போராட்டம் தொடர்பாக யாழ். மாநகர மேயர் ஒப்பமிட்டு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

யாழ்ப்பாண மாநகர சபையின் பிரதி மேயர் துரைராசா இளங்கோ 10.05.2010 ஆம் திகதி யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் இருந்து வருகின்றார்.

கடந்த சில நாள்களாகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் மூலம் அநாமதேய முறைப்பாடு ஒன்று பிரதிமேயர் மீது இருந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. தற்பொழுது அவர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்திய நிலையிலும் பொதுக்கடமையை நோக்காகக் கொண்ட யாழ். மாநகரசபையின் பிரதி மேயர் என்ற வகையிலும் பொதுமக்கள் சேவையைத் தொடர்வதற்கு ஏது வாகவும் விசாரணையானது துரிதப்படுத்தப்பட்டு அவர் விடுவிக்கப்பட வேண்டும் என்ற நன் நோக்கில் யாழ். மாநகரசபை ஊழியர்கள் முன்னெடுத்த அடையாள பணிப்புறக்கணிப்பு அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவினதும், எனதும் (மேயர் திருமதி யோ.பற்குணராஜா) அறிவுறுத்தலுக்கு அமைய இன்று (நேற்று) நண்ப கல் 12 மணியுடன் கைவிடப்பட்டுள்ளது.

ஆனால் குறித்த அடையாளப் பணிப்புறக்கணிப்பானது பிரதிமேயருடைய விடுவிப்பு சம்பந்தமாக மூன்று நாள்களுக்குள் சரியான நடவடிக்கை மேற்கொள்ளப்படாத விடத்து, நிரந்தரமான பணிப்புறக்கணிப்பாக மாநகரசபையின் அனைத்துப் பணியாளர்களினாலும் மேற்கொள்ளப்படும் என்று ஊழியர்கள் அமைச்சர் முன்னிலையில் தமது நிலைப்பாட்டை முன்வைத்துள்ளனர் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை - மேயர் விடுதலை செய்யப்பட வேண்டும் எனக்கோரும் பதாதை கள் மாநகரசபையின் மேற்குப் புறவாயில்களில் நேற்று கட்டப்பட்டிருந்தன.

மாநகரசபையில் தமது அலுவல்களைச் செய்யவும் மேயரைச் சந்திக்கவும் சென்ற பொதுமக்கள் நுழைவாயிலில் வைத்து ஊழியர் ஒருவரால் திருப்பி அனுப்பப்பட்டதையும் காணக்கூடி யதாக இருந்தது, சபை அலுவலகத்தை அண்டிய பருத்தித்துறை வீதியில் படையினரும் நிறுத்தப்பட்டிருந்தனர். (ஒ-க-111-236-135)

## காணாமற்போன சிறுவன் நீதிமன்றில் நேற்று ஆஜர்

யாழ்ப்பாணம், மே 12

கடந்தவாரம் காணாமற் போனதாகக் கருதப்பட்ட மிருசுவில், விடத்தற்பளை கமலாசினி வித்தியாலய மாணவன் இன்பராசா தர்சிகன் (வயது 13) வவுனியாவிலிருந்து கூட்டிவரப்பட்டு நேற்று கொடிகாமம் பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வவுனியா சென்ற பெண்ணுடன் பிரஸ்தாப சிறுவன் சென்றதாகவும், அங்கு சென்று உறவினர் வீட்டில் தங்கியிருந்த சிறுவன் வடமராட்சியில் உள்ள தமது வீட்டாருக்கு அறிவித்ததையடுத்து தந்தை வவுனியாவுக்குச் சென்று அழைத்து வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

## வலி.வடக்குப் பிரதேசசபை; நாளை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 12

வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் வடக்கு, கிழக்கு உள்ளூர் சேவை மேம்படுத்தும் திட்டத்தின் (NELSIP) கீழ் செயற்படுத்து வதற்கான நான்காண்டுத் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வலிகாமம் வடக்குப் பிரதேச சபை பிரதேசம் எட்டுக் கொத்தணி அபிவிருத்திப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இத்திட்டம் தயாரித்தல் தொடர்பாக நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தற்போது ஆலோசனைக் குழு உறுப்பினர்களாக இருப்பவர்கள், பிரதேச சமூக நலன்விரும்பிகள், சனசமூக நிலையப் பிரதிநிதிகள், மாதர் சங்கப் பிரதிநிதிகள், கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், மயான அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் ஆகியோரை உரிய திட்ட முன்மொழிவுகளுடன் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## செம்மணி உப்பு நிறுவனத்துக்கு புதிய கட்டடம் நிர்மாணம்

நாவற்குழி, மே 12

செம்மணிப் பிரதேசத்தில் அமைந்துள்ள மாந்தை உப்பு நிறுவனத்துக்கான புதிய கட்டடம் ஒன்று கட்டி நிறைவு பெறும் நிலையிலுள்ளது.

உப்பு உற்பத்தியில் ஈடுபட்டுவரும் இந் நிறுவனம் இதுவரையில் ஓலையால் வேயப்பட்ட குடிசை அமைப்புக்களையே கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது (ஒ-121)

## இன்று தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், மே 12

நவாலி சிந்தாமணிப்பிள்ளையார் ஆலயத்தின் தேர்திருவிழா இன்று முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று 11 மணிக்கு விநாயகப்பெருமான் தேரில் ஆரோகணித்து அருள் பாலிப்பார். நாளை தீர்த்தத்திருவிழா இடம்பெறும். (ஒ-1)

## அருகில் கப்பல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு சென்றுள்ளனர்.

படகிலிருந்து மீட்கப்பட்ட எட்டுப்பேர் எமக்கு வழங்கிய தகவலின்படி உதவி தேடியே ஐந்துபேரும் சென்றமை தெரியவந்துள்ளது.

எவ்வளவு தூரம் செல்ல முடியுமோ அவ்வளவு தூரம் சென்று படகு அல்லது கப்பல் ஏதாவது தென்படுகின்றதா எனப் பார்ப்பதற்கு அவர்கள் முயன்றிருக்கவேண்டும்.

எனினும், அவ்வேளையில் அங்கு கப்பல்கள் எவையும் இருந்ததாக நான் அறியவில்லை.

மீட்கப்பட்டவர்களில் 10 மாதக் குழந்தை உட்பட 12 சிறுவர்களும் உள்ளனர்.

இவர்கள் அனைவரும் பலவீனமாகவும், களைப்படைந்தவர்களாகவும் காணப்பட்டனர்.

படகில் எரிபொருளும், உணவும் இல்லாதபோதிலும் படகு நல்ல நிலையில் இருந்தது.

ஏப்ரல் 12 ஆம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்டதாக படகில் உள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, லண்டனிலிருந்து ஏப்ரல் 30 ஆம் திகதி கிடைத்த தொலைபேசி அழைப்புமூலமாகவே குறிப்பிட்ட படகு குறித்து தாம் அறிந்ததாக ஆஸ்திரேலிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (சி)

**ENGLISH**
**Personal and Group Classes**
**By**
**P.Ainkaran** B.A.(Hons) HN Dip. in English
இல.10, ஸ்ரான்லி கல்லூரி முன்வீதி, வைரவர் கோயிலடி,
சுச்சேரி, யாழ்ப்பாணம். T.P. 0779309740

## "நீதியே நீதி வழங்கு" என்ற 11.05.2010 ஆம் திகதிய பத்திரிகைப் பிரசுரத்திற்கான விளக்கம்

11.05.2010 அன்று உள்ளூர் பத்திரிகைகளில் ''நீதியே நீதி வழங்கு'' என்ற தலைப்பில் யாழ்ப்பாண மாநகரசபையின் பெயரில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரப் பிரசுரம் ஆனது யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் அல்லது மாநகரசபையின் செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்டு பிரசுரிக்கபடவில்லை என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறித்த விளம்பரம் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதி மாநகர முதல்வரின் சேவை மீது பொதுமக்களும் சபை உறுப்பினர்களும், சபையின் ஊழியர்களும் வைத்திருந்த அதீத நம்பிக்கை மற்றும் நல்லெண்ணம் ஆகியவற்றின் நிமித்தம் எழுந்த அவர்களுடைய உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் முதல்வரால் பிரசுரிக்கப்பட்டதே தவிர, நீதியை அவமதிப்பதாகவோ அல்லது நீதித்துறைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டோ பிரசுரிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1997 இல் நீதித்துறையை மீளக்கட்டியெழுப்பும்போது அதற்குத் தடையாக இருந்த சக்தியை அதி உத்தம ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இல்லாது ஒழிப்பதற்கு உறுதுணையாக இருந்தவர்கள் எக்காலத்திலும் நீதித்துறைக்கு இடையூறாக இருக்கமுடியாது என்பதனையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அண்மையில் மாட்சிமை தங்கிய பிரதம நீதியரசர் அவர்கள் யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்தபோது நீதித்துறையைக் கட்டியெழுப்பவும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டவும், சகல மட்டத்திலும் உள்ள மக்கள் நீதியைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் நீதிநிர்வாகம் முன்னெடுத்துச்செல்லப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டதற்கு அமைவாக குறித்த 11.05.2010 ஆம் திகதிய விளம்பரம் நல்லெண்ணத்துடனும் மக்களது எண்ணத்தினை வெளிப்படுத்தும் வகையிலும், யாழ். மாநகரசபையின் மக்களின் முதல்வர் என்ற தன்மையிலும் பிரசுரிக்கப்பட்டதாகும்

திருமதி யோ.பற்குணராஜா,
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம்.

(சி/567579)

மு.செ.சரவணபவ,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.


## அமைச்சராகிறார் ஐ.தே.கட்சியின் காதர் எம்.பி.!

ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட எம்.பியான ஏ.ஆர்.எம்.காதர் இந்த மாதம் 18ஆம் திகதி நாடாளுமன்றம் கூடுவதற்கு முன் அமைச்சராவது உறுதியாகிவிட்டது என்று அவரது வட்டாரம் தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதியையும், பஸில் ராஜபக்ஷவையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சுப் பதவி ஒன்றுடன் சேர்த்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முஸ்லிம் பிரிவுத் தலைவர் பதவியும் அவருக்கு வழங்கப்படுமாம். ஐக்கிய தேசியக் கட்சியில் தற்போது அவர் அக்கட்சியின் முஸ்லிம் பிரிவுத் தலைவராகப் பதவி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

# மரண அறிவித்தல்கள்



### நல்லையா தர்மபாலன் [5ஆம் வட்டாரம், மண்கும்பான்]

5ஆம் வட்டாரம், மண்கும்பானைப் பிறப்பிடமாகவும், புலவனார் வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா தர்மபாலன் நேற்று (11.05.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2010) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர், மனைவி பரிமளகாந்தி.

### திருமதி செல்லக்கண்டு சிவஞானம்



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லக்கண்டு சிவஞானம் நேற்று (11.05.2010) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் கனகர் சிவஞானத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகர் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பவான், பாலா, றஞ்சன், வேந்தன், ரஞ்சினி, ராசி, நீதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், விக்னேஸ்வரி, சறோஜினிதேவி, கிருஷ்ணகௌரி, சண்முகலிங்கம், சபிதா, தவராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2010) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கொழும்புத்துறை துண்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (சி/567580)

தகவல்: குடும்பத்தினர்.

### செல்லம்மாள் இராஜரத்தினம்பிள்ளை



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மாள் இராஜரத்தினம்பிள்ளை நேற்று (11.05.2010) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜரத்தினம்பிள்ளையின் அன்பு மனைவியும், பத்மாசினி, பாலஸ்கந்தவேல் (பரிபாலனசபைத் தலைவர், அருள்மிகு அகிலாண்டேஸ்வரி ஆலயம், எழுத்தூர், மன்னார்), அமரர் Dr.R.விசாகேசன், கார்த்திகேயன் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப அலுவலர், கட்டடத்திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தாயாரும்; அமரர் பாலசுப்பிரமணியம், அமரர் தெய்வநாயகிஅம்மாள், விஜயவதி (ஹல்தோட்ட), அமரர் விக்கினேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2010) புதன்கிழமை பிற்பகல் 12.30மணிக்கு அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரி யைக்காக கட்டுப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பா. பாலபத்மன் (G.S)
பங்களா ஒழுங்கை, மல்லாகம். (சி/567582)

தகவல்: குடும்பத்தினர்.

### இராமசாமி சித்தானந்தன்



வைமன் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், கற்பகப் பிள்ளையார் கோயிலடி, இருபாலையை வதிவிடமாகவும் கொண்ட இராமசாமி சித்தானந்தன் நேற்று (11.05.2010) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி - நீலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பருவதம் தம்பதியரின் மருமகனும், பங்கயலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கனகசபை மற்றும் தர்மானந்தன், மகேசானந்தன், நற்குணராசா, தயானந்தன், யோகானந்தன், புவனாம்பிகை, யோகாம்பிகை, வனிதாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான அற்புதம், சிவபாக்கியம், தையல்நாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.05.2010) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இருபாலை செக்கடி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பகப் பிள்ளையார் கோயிலடி,
இருபாலை. (98079)

தகவல்: பங்கயலட்சுமி (மனைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரசமைப்புச் சீர்திருத்தம்...!

அரசமைப்புச் சட்டத்தில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தீர்மானித்து, அவற்றுக்கான யோசனைகளைத் தயாரித்துவிட்டதாக தகவல் வெளியி டப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட யோசனைகள் இன்னும் இரண்டு வாரங்களில் அமைச்சரவையில் ஆராயப்படும். அமைச்சரவை அங்கீகரித்ததும் ஜூலை மாதத்தில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமக்குரிய இரண்டாவது பதவிக் காலத்தை எதிர்வரும் நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கவுள்ளார். அதற்கு முன்னர் அரசமைப்புச் சீர்திருத்தங்கள் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படும் எனவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மிகத் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

அரசாங்கம் எதனை நினைக்கிறதோ, அது நல்லதாகவும் இருக்கலாம், மக்கள் நலனுக்கு ஊறுவிளைவிப்பனவாகவும் இருக்கலாம். அதைப்பற்றி எவரும் அலட்டிக் கொள்ளமுடியாது. அது நாடாளுமன்றில் நிறைவேற்றப்படும் என்பதில் எவரும் சந்தேகம் கொள்ளவும் கூடாது; கொள்ளவும் முடியாது. காரணம் அதற்கான அதீத வாக்குப்பலம் அரசாங்கக் கட்சிக்குச் சபையில் உண்டு. 225 உறுப்பினர்களில் 144 பேர் அரசுத்தரப்பு ஆதரவாளர்கள். ஆகையால் நாடாளுமன்றத்தின் ஊடாகச் செய்ய நினைக்கும் எந்தத் திட்டத்தையும் சட்டத்தையும் நிறைவேற்றக்கூடிய - செயற்படுத்தக் கூடிய - அதி வல்லமை அரசுக்கு உண்டு! அது ஒருபுறம் நிற்க.

அரசமைப்புக்கான சீர்திருத்தம் என்றதும் அது கடந்த 60 வருடங்களுக்கு மேலாக நீறுபூத்த வெந்தணல் நெருப்பாக நிலைத்திருக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றுக்கானதாக இருக்குமோ என்று தமிழ் மக்கள், தமிழ் பேசும் மக்கள் தமது விழிகளை அகல விரிக்கக்கூடும். அதுதான் இல்லை!!

தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவருவது உத்தேச சீர்திருத்தங்களில் முதலாவது. அதாவது இப்பொழுதுள்ள விகிதாசாரத் தேர்தல் முறையையும் முன்னர் நடைமுறையில் இருந்த தொகுதி வாரியான தேர்தல் முறையையும் கலவையாக்கிவிடுவது! அவ்வளவுதான். புதியனதாக எதுவும் இல்லை.

அடுத்தது - இரண்டாவது : நாடாளுமன்றத்தில் சட்டமூலங்களைப் பரிசீலனை செய்வதற்கான மூதவை, அதாவது மேல்சபை(செனட்) ஒன்றை நிறுவுவது. இதுவும் பழைய சங்கதிதான். வெஸ்ட்மினிஸ்ரர் ஆட்சி முறையின் ஓர் அங்கமான மூதவை முன்னர் நடைமுறையில் இருந்து சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் ஒழிக்கப்பட்டது. இப்போது அதற்கு புதுமெருகு கொடுத்து மீண்டும் புகுத்தப்படவுள்ளது. மேல்சபைக்கு - மூதவைக்கு - செனற்றுக்கு - பொதுமக்கள் வாக்களிக்கும் தேர்தல் எதுவும் கிடையாது. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின், உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கான விகிதாசாரத்தில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். இப்போதுள்ள நாடாளுமன்ற பலத்தில் அது இயற்றும் சட்டமூலங்களை அரசாங்கத் தரப்பு வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் ஏற்றி, தனது தாளத்துக்கு ஆடவைத்து மூதவையில் நிறைவேற்ற முடியும்.

மேலும், மூன்றாவதாக, இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதியாக ஒருவர் பதவி வகிக்க வகைசெய்யும் விதத்தில் அரசமைப்பில் திருத்தம் கொண்டுவருவது.

அச்சா! இதுவும் அரச தரப்பின் - ஜனாதிபதி மஹிந்தவின் அபிலாசையை - நிறைவேற்றுவதற்கான - தனது மகன் நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதியாக வருவதற்குச் செய்யப்படவுள்ள - ஓர் ஏற்பாடு என்று அரசல் புரசலாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

அதாவது மஹிந்தா மூன்றாவது தடவையாகவும் இலங்கைக் குடியரசின் நிறைவேற்று ஜனாதிபதியாக வருவதற்கு எந்தவித தடையும் இருக்கப்போவதில்லை. முதலாவது தடவையிலேயே ஒருவகை சர்வாதிகாரம் வந்துவிட்டதால் மூன்றாவது பதவிக் காலமும் அவருக்கு கிடைத்தால் ஆட்சிக்கட்டில் எப்படியிருக்கும் என்பதனை எவரும் ஊகித்துக்கொள்ளலாம்....!

அதன்பின்னர், நாமல் நாட்டின் தலைவராகிவிட்டால் இங்கு வாழும் சகல இன மக்களினதும் நிலை கற்பனைக்கும் அப்பாற்பட்டதாக இருக்கும்! சரிபோகட்டும் அது வேறு விடயம்.

அரசமைப்புச் சீர்திருத்தத்தில் இத்தனை செயற்பாடுகளுக்கும் முன்னுரிமை கொடுக்கத் தீர்மானித்துள்ள அதீத வாக்குப்பலம் - ஆசன பலம் - உள்ள அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஒரு வார்த்தைதானும் பேசாது இருப்பது ஏனோ...?

கிராம மட்டத்தில் அதிகாரப் பரவல் என்ற தீர்வு என்றும், இலங்கை முழுவதிலும் ஒரே அரசு என்ற நிலைப்பாட்டில் செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் ஏற்கனவே கூறியாச்சு; அதற்கு மேல் இனி என்ன சொல்வதற்கு உண்டு என்ற வழுவாக் கருத்துடன் அரச தரப்புச் செயற்படலாம். யார் அறிவார் பாரபரமே! பொறுத்திருந்து பார்ப்போம் என்று சொல்வதும் பொருத்தமற்றது!!

# பலாலி ஆரோக்கிய அன்னையின் திருவிழாவை 20 வருடங்களின் பின் சனியன்று நடத்த அனுமதி

## பக்தர்களை தொண்டைமானாறு சந்தியில் கூடுமாறு ஏற்பாட்டாளர் அறிவிப்பு

கொழும்புத்துறை,மே12

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள ஆரோக்கிய அன்னை ஆலயத்திற்கு சென்று திருவிழாக் கொண்டாட அப்பகுதி மக்களுக்கு பாதுகாப்பு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருவிழாத் திருப்பலி நடைபெற உள்ளதாக ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

இருபது வருடங்களின் பின்னர் இந்த ஆலயப் பகுதிக்கு செல்ல அங்கு வாழ்ந்த மக்களுக்கு அனுமதி கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கடற்கரை வீதியால் தொண்டைமானாறு ஊடாக செல்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உற்சவத்தில் பங்குகொள்ள விரும்புவோர் அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு தொண்டைமனாறு சந்நிதியில் ஒன்றுகூடுமாறு திருவிழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (1-135)

# பொதுச் சுகாதார உத்தியோகத்தர் பரீட்சையில் சித்தியடைந்த 32 பேரின் விவரம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே12

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையால் நடத்தப்பட்ட பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சித்தியடைந்த 32 பேரின் விவரம் வருமாறு-

எஸ்.வைகுந்தன், ரி.பிரணவன், ஜே.நிருபன், எம்.அருளானந்தன், என்.புவநேசன், எஸ்.கோபிநாத், வி.ஜெகந்தன், ஜே.ரூபன்துரம், ஏ.தஜீகரன், ரி.நிருசன், என்.மயூரன்,

வீ.உமாசுதன், என்.விஷ்ணுதாசன், எஸ்.கோபிநாத், ரி.ஜெயகுமார், ரி.சரண்ராஜ், ரி.சந்திரசேகர், எஸ்.சர்வானந்தன், பி.சிந்துஜன்,

எஸ்.சிவசங்கர், ரி.ராஜ்மயூரன், எஸ்.விஜிதரன், என்.சுதர்னன், எஸ்.நிரோஜன், வை.ஜெனகரன், எஸ்.மயூரதாசன், ஏ.பிரகாஷ், எஸ்.தயாபரன், பி.விஜயகுமாரன், ஏ.சந்திரன், டி.கருணாகரன், என்.சுப்பிரமணியம். (1)

## மண்டைதீவில் குடியமர்ந்தோருக்கு பண உதவி

இடம்பெயர்ந்து மண்டைதீவில் மீள்குடியமர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் 60 வயதிற்கு மேற்பட்ட நபர் ஒருவருக்கு சுவிஸ் மண்டை தீவு மக்கள் ஒன்றியம் ஆயிரம் ரூபாவும், ஒரு குடும்பத்துக்கு ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கி வருகின்றது.

மண்டைதீவு கனடா மக்கள் ஒன்றியம் அங்குள்ள வீடமைப்புத் திட்டங்களுக்கு உதவிகள் வழங்கி வருவதாகவும் தெரிகின்றது (50-111)

# யாழ். நவீன சந்தை உட்புறக் கடைகள் நேற்று நண்பகல் வேளையிலேயே திறப்பு

யாழ்ப்பாணம்,மே12

யாழ்.நவீன சந்தை உட்புறமுள்ள யாழ்.மாநகர சபையின் நிர்வாகத்திலுள்ள கடைத் தொகுதியின் நுழைவாயில்கள் நேற்று யழ் மாநகர சபையினால் திறக்கப்படாத காரணத்தால் அங்குள்ள கடைகளின் ஊழியர்கள் நுழைவாயில்களில் நீண்டநேரம் காத்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

யாழ்.மாநகர சபைப் பிரதி மேயர் றீகன் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து யாழ். மாநக சபை ஊழியர்கள் நேற்றுத் தாம் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தப்போவதாக அறிவித்திருந்தனர்.

இதனாலேயே இக்கடைகளின் நுழைவாயில்கள் திறந்துவிடப்படவில்லை எனத் தெரியவருகிறது. எனினும் பின்னர் நண்பகல் வேளையில் அப்பகுதிக்கு வந்த இராணுவத்தினரும் பொலீஸாரும் இணைந்து இந்த நுழைவாயில்களைத் திறந்து கடைகள் வழமைபோல் இயங்குவதற்கு நடவடிக்கை எடுத்தனர். (ஒ-16)

# புகையிலை கொள்வனவில் இம்முறை வியாபாரிகள் அதிகளவில் நாட்டம்

நாவற்குழி,மே12

யாழ்.குடாநாட்டின் விவசாயக் கிராமங்கள் தோறும் புகையிலை வியாபாரிகள், புகையிலைத் தரகர்கள் மிகவும் சுறுசுறுப்பாகச் செயற்பட்டு வருவதைக் காணமுடிகிறது.

இம்முறை பெரும் நிலப்பரப்புகளில் செய்கை பண்ணப்பட்ட புகையிலையின் ஒரு பகுதி ஏற்கனவே வியாபாரிகளால் பச்சையாகவே கொள்முதல் செய்யப்பட்டுவிட்டது.

தற்போது பதப்படுத்திய புகையிலைகளைக் கொள்வனவு செய்வதில் அவர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். புகையிலைகளின் தரத்திற்கேற்ப முற்பணம் கொடுக்கப்பட்டு கொள்வனவு நடைபெற்று வருகிறது.

கூடிய முதல் வைத்திருக்கும் வியாபாரிகள் தொகையாக புகையிலையைக் கொள்வனவு செய்துஒரு பகுதியைத் தென் பகுதிக்கு அனுப்பிவிட்டு மிகுதியை பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்தி வைப்பதையும் காணமுடிகிறது. (ஒ-121)

# கிளிநொச்சி வலய ஆசிரியரின் சம்பளம்

யாழ்ப்பாணம், மே 12

யாழ். மாவட்டத்தில் இணைப்புப் பெற்றுள்ள கிளிநொச்சி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான மே மாதச் சம்பளம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி வலயத்தின் கணக்காளர் அறிவித்துள்ளார்.

இந்த மாதச் சம்பளக் கொடுப்பனவுப் பட்டியலுக்குக் கையொப்பம் இடும் செயற்பாடு நாளை வியாழக் கிழமையும் மறுநாளும் காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை யாழ். மேலதிக மாகாணக்கல்விப் பணிமனையில் இடம்பெறும் என்றும் -

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் நேரில் வந்து கையொப்பம் இடும் போது வைகாசிமாத லீவு விவரத்தையும் கொண்டுவரவேண்டும் என்றும் - அவர் கேட்டுள்ளார். (1)

# முல்லை, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி அலுவலர்களுக்கான நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,மே12

முல்லைத்தீவு - கிளிநொச்சி மாவட்டங்களில் யுத்தத்தினால் பாதிப்படைந்த உள்ளூராட்சி உத்தியோகத்தர்களின் நலன்கருதி அவர்களுக்கான நடமாடும் சேவை நாளை வியாழக் கிழமை முல்லைத்தீவு பிராந்திய உள்ளூராட்சி அலுவலகத்திலும், நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி அலுவலகத்திலும் நடைபெறவுள்ளது.

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சும் உள்ளூராட்சித் திணைக்களமும் இணைந்து நடத்தும் இந்த நடமாடும் சேவை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறும்.

இந்த நடமாடும் சேவையில் உத்தியோகத்தர்களின் காணாமற்போன அல்லது அழிவடைந்த சுயவிவரக் கோவையினைப் பூர்த்திசெய்தல், இடம்பெயர்வுக் காலத்தில் வழங்கப் படாத உத்தியோகத்தர்களின் பதவியினை உறுதிப்படுத்தலும் தற்காலிக ஊழியர்களின் பதவியினை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுத்தல், இடம்பெயர்வின் போது மரணமடைந்த அல்லது காயமடைந்த உத்தியேகத்தர் விவரங்களைத் திரட்டல், அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய நட்டஈடு மற்றும் அநாதைகள், தபுதாரர் ஒய்வூதியம் பெற நடவடிக்கை எடுத்தல், விதவைகள், அநாதைகள், ஓய்வூதியம் பெறாதோரின் விவரங்களைச் சேகரித்தல் ஆகிய சேவைகள் இடம்பெறவுள்ளன என்று வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் அறிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்டவர்கள் இதில் தவறாது கலந்துகொண்டு பயன்பெறுமாறும் அவர் அறிவித்துள்ளார். (50-224)

# வன்னியில் மரக்கறிச் செய்கையில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்

யாழ்ப்பாணம்,மே12

வன்னிப் பகுதியில் அனுமதிக்கப்பட்ட இடங்களில் மரக்கறிச் செய்கையை மேற்கொள்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்தப் பிரதேசங்களில் அண்மையில் பெய்த பருவ மழையைப் பயன்படுத்தி விவசாயிகள் தமது தோட்ட நிலங்களை உழுது சீர்படுத்தி வருகின்றனர்.

பயிர்ச்செய்கையின்றிக் காணப்படும் தோட்ட நிலங்களில் அதிக புற்களும் பற்றைகளும் வளர்ந்துள்ளன. இவற்றை வெட்டித் துப்புரவு செய்து சீர்படுத்திய பின்னர் அவற்றில் மரக்கறிப் பயிர்களை நடும் நடவடிக்கையில் விவசாயிகள் மும்முரமாக ஈடு பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(50-224)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 30 | 13.05.2010 |
| | வியாழக்கிழமை |
| திதி | : சதுர்த்தசி |
| | மு.ப. 07.34 வரை |
| நட்சத்திரம் | : பரணி |
| | பி.இ. 02.47 வரை |
| சுபநேரம் | : 07.24 - 08.54 |
| ராகுகாலம் | : 01.24 - 02.54 |

அமாவாசை விரதம்

# கொழும்புத்துறை வளன்புரத்தில் புதிதாக அமைக்கப்படும் ஆலயம்

கொழும்புத்துறை,மே12

கொழும்புத்துறை வளன்புரம் பகுதியில் வாழும் கத்தோலிக்க மக்களின், வழிபாட்டிற்காக புனித சூசையப்பர் ஆலயம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது.

இப்பகுதி மக்கள் இதுவரை கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்தைத் தமது பங்குக் கோயிலாகப் பாவித்து வந்தனர். இந்த ஆலயத்தை அமலமரித் தியாகிகள் சபையினர் பொறுப்பேற்றதை அடுத்து புதிய ஆலயம் ஆயரின் அனுமதியுடன் அமைக்கப்பட்டு வருகின்றது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் புனித சூசையப்பர் ஆலய கட்டுமானப் பணிகள் யாழ்.ஆயரின் உதவியுடனும் பங்கு மக்களின் பங்களிப்புடனும் இடம்பெறுவதாக ஆலய பரிபாலகர் தெரிவித்தார். (50-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளை**

(ஆசிரியர், நடேஸ்வராக்கல்லூரி, காங்கேசன்துறை)

மண்ணில் 10.08.1889 விண்ணில் 08.05.1982

நாங்கள் உன்னை மறந்தாலும்
42ஆண்டுகள் நீ கால் பதித்த காங்கேசன்துறை
வாழ் மக்கள் உன்னை மறக்க மாட்டார்கள்.

*நிரந்தர முகவரி:*
*மகாதனை,*
(98059) *தெல்லிப்பழை.* குடும்பத்தினர்.

# புலோலி சிறுவர் கிராமத்துக்கு ஆளணி தேவை

1. மேற்றன் - தாதி மேற்பார்வையாளர் (ஆண்/பெண்)
2. ஓய்வுபெற்ற தாதிகள் (ஆண்/பெண்)
3. தாதிப் பயிற்சி பூர்த்திசெய்த அல்லது அனுபவமுள்ளவர்கள் (ஆண்/பெண்)
4. சென்.ஜோண்ஸ் அன்புலன்ஸ்/செஞ்சிலுவை சேவை பாடநெறி பூர்த்திசெய்தோர் (ஆண்/பெண்)
5. சுத்திகரிப்பாளர் (ஆண்/பெண்)
6. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்/பெண்)

இன்று (12.05.2010) புதன்கிழமை பி.ப. 2 மணிக்கும் 5 மணிக்கும் இடையில் கீழ் கண்ட விலாசத்துக்கு நேரில் வரவும்.

கொழும்பில் இருந்து வருகை தரும் எமது நிர்வாகிகளால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படும்.

**கடவுளின் சொந்தக் குழந்தைகள்,**
**140, கோயில் வீதி, நல்லூர்.**

(இ/567570)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**நாகலிங்கம் பரஞ்சோதி**

(உப்புக்கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)

தோற்றம்: 03★08★1931 மறைவு: 26★04★2006

திதி: சதுர்தசி

செந்தணல் மீதுபொன் இட்டாலும் மாறுமோ!
செங்கதிர் சூரியனை மறைத்தாலும் இருளாகுமோ!
பைந்தமிழ் ஆழமதை அளந்திட யாருளரோ!
பெற்றகடன் அடைத்திட்ட மாந்தர்களும் இங்குளரோ!
சிந்தையிலே இருக்கு மெங்கள் அப்பாவுன்
சேவைகளை சொல்லிலே அடக்கிட இயலாதப்பா!
சொந்தமெலாம் ஒருவராகியே எங்களுக்காய் வாழ்ந்தவரே!
சாதனைகள் புரிந்தவரே! மறக்குமோ! நினைவுகளை!

(98039)

*பறிஜின் டிசைன்குறாப்;*
*இல.100, அம்மன் வீதி,*
*திருநெல்வேலி மேற்கு.*

மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளைகள் - தர்மதா, நர்மதா, மிதுன்பரிசித், மேருஜன் பரதன்.

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா இராசையா (கிளாக்கர்)

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் மல்லாகம் கட்டுவன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசையா (கிளாக்கர்) நேற்று (11.05.2010) செவ்வாய்க்கிழமை காலமரகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கட்டுவன் வீதி,*
*மல்லாகம்.*

தகவல்:
நாகவேல் இராசா (மகன்).

## முடியப்பு பிலிப்



பாஷையூரைப் பிறப்பிடமாகவும் புங்கங்குளத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட முடியப்பு பிலிப் 10.05.2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இசிதோரம்மாவின் கணவரும் காலஞ்சென்றவர்களான முடியப்பு - அன்னம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான தேவசகாயம் - மத்தீனா தம்பதியினரின் மருமகனும் அருட்பிரகாசம், மரியதாஸ், காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை மற்றும் ஸ்ரனிஸ் லொஸ் ஆகியோரின் சகோதரனும் மயூறி, ராஜிவி, மேரிஅன்ரனற் ஆகியோரின் தந்தையும் றொபின்சன், வினோதன் ஆகியோரின் மாமனாரும் பிரியதர்ஷினி, பிரதீபன், மேரிறொபின்சியா, அன்ரோ நிறோஷன், ஜீசஸ் றொக்கின்சன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (12.05.2010) புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*97, புங்கங்குளம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (98076)

தகவல்:
பிள்ளைகள்.

# சாவகச்சேரி நகருக்கு 200 தொலைபேசி இணைப்பு

சாவகச்சேரி நகர்பகுதிக்கான 'ரெலிக்கொம்' நிறுவனத்தின் 'கேபிள்' தொலைபேசி இணைப்புக்கள் கடந்த 5 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றன.

முதல் கட்டமாக 200 தொலைபேசி இணைப்புகள் வழங்கும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. (ஒ-207)

# கல்வி மேம்பாட்டுப் பேரவை புனரமைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 12

யாழ். மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவை புனரமைப்புப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்விவலயக் கேட்போர் கூடத்தில் முன்னாள் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரிய தம்பி தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# சுயதொழில் கொடுப்பனவு பெற்றவர்களின் கவனத்திற்கு

நவாலி, மே 12

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சுய தொழில் கொடுப்பனவைப் பெற்ற விசேட தேவைக்குரியோரை இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு சமூக சேவைப் பிரிவுக்கு சமுகம் தருமாறு சமூக சேவைகள் உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார். (ஒ-100)

# அறை வாடகைக்கு

யாழ். நகர், வைத்தீஸ்வராச்சந்தியில் சகல வசதிகளுடைய ஓர் அறை வாடகைக்குண்டு.
தொடர்பு: இல. 77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P. 0773441329

# மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பட்டப்பின் படிப்பு தகைமையுள்ள 74 ஆம் ஆண்டு, கிரக பாவம் 6 உள்ள ஆசிரிய மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். படம், சாதகம் என்பவற்றுடன் E.mail ஊடாகத் தொடர்பு கொள்ளவும்.
thamalingamn7@gmail.com

# பௌதிகவியல்/இணைந்த கணிதம் A/L 2011, 2012 தமிழ், ஆங்கிலம்

மேற்படி பாடங்களைச் சிறப்பாகக் கற்பித்து அனுபவம் பெற்ற பட்டதாரி ஆசிரியரினால் தனிப்பட்ட முறையில் முழுப்பாடத் திட்டமும் குறுகிய காலத் தில் தாராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படும். பெற்றோர் மட்டும் தொடர்பு: மாலை 3 மணிக்குப் பின்பு. தொ.பே.0776648751

# குடாநாட்டில் கடலுணவுகளுக்கு இப்போது தட்டுப்பாடு

கொழும்புத்துறை, மே 12

யாழ்.குடாநாட்டில் கடலுணவுகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. மீன்சந்தைகளில் கடலுணவுகளின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

இறால், கணவாய், நண்டு, மீன் போன்ற கடலுணவுகள் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்படுவதால் இவற்றுக்கு இங்கு தட்டுப்பாடு நிலவுவதாக மீனவர் தரப்பில் தெரிவிக்கப் படுகின்றது.

அதேவேளை குடாநாட்டு கடலுணவுகளுக்கு தென்னிலங்கையில் அதிக விலையும், கிராக்கியும் காணப் படுவதாக கூறப்படுகின்றது. (ஒ-135)

# அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 12

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்குக் கல்வி வலயக் கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# 34 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 10 ★ 11 ★ 1962



மறைவு 09 ★ 04 ★ 2010

**திருச்செல்வம் ஜோட்ச் கமில்டன் (ரமேஸ்)**

எங்கள் குடும்பத்தின் குல விளக்கே அப்பா!
அல்லும் பகலும் அன்புடனும் பாசத்துடனும்
வளர்த்த அப்பாவே!
எம்முள்ளம் பரிதவிக்கிறது அப்பா
உம் கடமைகள் எல்லாம்
நிறைவேற்றிய கடமை வீரனே அப்பா
எம் கடமையை பாதியிலே நிறுத்தி விட்டு
பரமனிடம் சென்றாயோ அப்பா!
பாதை தெரியா பாலகர்களாய்
தவிக்கிறோம் அப்பா!
எமக்குப் பாதை காட்ட விரைந்து வருவீரோ அப்பா!

27/11, புகையிரதக்கடவை ஒழுங்கை,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள்.

(சி/567576)

# மரண அறிவித்தல்

## செல்வி மகாலிங்கம் ஜெயகௌரி



காட்டடைப்பு வீதி, காங்கேசன்துறையை நிரந்தர வதிவிடமாகவும், 186/26, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தைத் தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட செல்வி மகாலிங்கம் ஜெயகௌரி நேற்று (11.05.2010) செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் மகாலிங்கம் - பரமேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - நாகமுத்து, மயில்வாகனம் - முத்தம்மா தம்பதிகளின் அன்புப் பேர்த்தியும், சுபர்ணன் (ஜேர்மனி), ஜெயவாணி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அரியரத்தினம் - சீதா தம்பதிகளின் பெறாமகளும், மனோகரன் - ஜெயக்குமாரி, சந்திரசேகரன் - ஜெயராணி (பிரான்ஸ்), குணசேகரன், ரவிச்சந்திரன் - ஜெயாவதி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மருமகளும், கமலகாசன் (பிரான்ஸ்), ஜெனித்தா, சுயாத்தா (ஜேர்மனி), அமலராஜன் (நியூசிலாந்து) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும், பரமநாதன் அன்புக்கரன் (ஜேர்மனி), திருமதி அஜந்தன் லாவண்யா, திருமதி கஷாகரன் லோஜினி (சுவிஸ்), பிரவீனா, அபிநயா, ஆதித்யன், நிவேதன், வர்சன், நிலானி, நிவேதா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், அதிசயாவின் பெரியதாயாரும், கம்சவர்த்தனி, கஜிஷா ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (12.05.2010) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*186/26, பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (98074)

தகவல் : கி. மனோகரன் (மாமனார்)
(செயலாளர், யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம்).

# மரண அறிவித்தல்

## மயில்வாகனம் வெங்கடாசலபிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர், நிர்வாகி - அடியார் மடம், செல்வச்சந்நிதி)



வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலையின் முன்னாள் ஆசிரியரான மயில்வாகனம் வெங்கடாசலபிள்ளை நேற்று (11.05.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.05.2010) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவகுரு வித்தியாசாலையடி,*
*வல்வெட்டித்துறை.* (சி/567568)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வன்னிப் போரில் பலியான ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு 6 லட்சம் ரூபா மரணப் பணிக்கொடை வழங்கப்பட வேண்டும்

## ஆளுநருடனான சந்திப்பில் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

அச்சுவேலி,மே 12

வன்னியில் இராணுவ நடவடிக்கையின்போது மரணமடைந்த ஆசிரியர்களின் குடும்பத்தினருக்கு 'அக்கரஹாரா' காப்புறுத்திட்டத்தின் ஊடாக 6 லட்சம் ரூபா மரணக் கொடை வழங்குவதற்கு வசதி செய்யப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியுடனான சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்திக் கேட்டுள்ளது.

ஆசிரியர் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் வடக்குமாகாணத்தில் உள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்கள், வடக்கு மாகாண கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள், வடக்கு கல்வி அமைச்சு உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட கலந்துரையாடல் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இரண்டு மணி நேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைமைப்பீட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசல் ஸ்ரான்லின் இது தொடர்பாக தெரிவித்தவை வருமாறு:

வன்னிப் பெருநிலப்பரப்பில் இராணுவ நடவடிக்கையினால் உயிரிழந்த ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு 'அக்கரஹாரா' காப்புறுதித் திட்டத்தின் மரணப்பணிக்கொடை கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

சம்பவம் நிகழ்ந்து 90 தினங்களுக்கு உள்ளே மரணப் பணிக் கொடைக்கான ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். இந்த நிபந்தனையின் அடிப்படையில் வன்னியில் உயிரிழந்த ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

வடக்கு மாகாணத்தில் தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை நடைமுறைப்படுத்தவேண்டும். ஆண்டுதோறும் அந்த நடைமுறையின் பிரகாரம் ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் மேற்கொள்ள ஆவன செய்யப்பட வேண்டும்.

வன்னியில் யுத்த நடவடிக்கையின் போது இழக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள், கல்விச் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை மீளப்பெறுவதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள் உட்பட வடக்கில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 10 மாதச் சம்பள முற்பணக் கடன், இடர் உதவிக் கடன்கள் மற்றும் அரசாங்க ஊழியர்களுக்கான கடன் வசதிகள் வழங்கப்படுவதில்லை. உரிய கடன் வசதிகள் அனைத்தும் உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

யாழ்.மாவட்டத்திலிருந்து வன்னிக்கு நாள்தோறும் கடமைக்கு வந்து திரும்பும் ஆசிரியர்களுக்கான போக்குவரத்து வசதிகள் சீர்செய்யப்பட வேண்டும். ஆசிரியர்களுக்கான பயணத்திற்கு பயன்படுத்தும் பஸ்களின் எண்ணிக்கையை இரண்டில் இருந்து ஐந்தாக அதிகரிக்க வேண்டும்.

இலங்கை அதிபர் சேவை தரங்களுக்கான பதவி உயர்வுகள் அனைத்தும் உடனடியாகவழங்கப்படவேண்டும். என்ற கோரிக்கை உட்பட பல கோரிக்கைகள் இந்தச் சந்திப்பில் முன்வைக்கப்பட்டன என்றார்.

கோரிக்கைகளை ஆளுநர் அமுல் செய்தவற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளார் எனவும் கோரிக்கைகளை நிறைவு செய்வதில்தான் கலந்துரையாடலின் வெற்றி தங்கியுள்ளது எனவும் கூறினார் யோசவ் ஸ்ரான்லின். (50-11)

# வட்டுக்கோட்டைக் கூத்தைப் பாதுகாக்க இளைஞர்களின் முயற்சி மிகவும் அவசியம்

## கலை இலக்கிய விழாவில் கலாநிதி கலாமணி உரை

சங்கானை,மே 12

வட்டுக்கோட்டைக் கூத்தை அழியவிடாது பாதுகாத்து பரம்பரையாகப் பேணுவதற்கு இளைஞர்கள் முயற்சி எடுக்க வேண்டும். அத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளாவிட்டால் காலக்கிரமத்தில் இக்கூத்து மறைந்து போய்விடும்.

இவ்வாறு தெரிவித்தார்யாழ்.பல்கலைக்கழக கல்வியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தம்பியையா கலாமணி.

வலிகாமம் மேற்குப் பிரதேச கலாசாரப் பேரவை கடந்த ஆறாம் திகதி பிரதேச செயலக மண்டபத்தில் நடத்திய கலை இலக்கிய விழாவின் முதலாம் நாள் நிகழ்வில் கலந்துகொண்டு வட்டுக்கோட்டை கலாபூசணம் க.நாகப்பு எழுதிய 'வட்டுக்கோட்டை கூத்தும் கிராமியக் கலைகளும்' நூல் வெளியீட்டில் மதிப்புரை வழங்கிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், இன்றைய நவநாகரிக உலகில் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியினூடாக பல்வேறு வகையான நிகழ்வுகளை இரசித்து வருகின்றோம். ஆனால் இவ்வாறான கூத்து, கிராமிய நடனங்கள்போல் மனதிற்கு இதமாகவும், உணர்வு பூர்வமான கலையம்சங்களும் கொண்ட நிகழ்வுகள் போல் அவை அமைவதில்லை.

குதிரை ஆட்டம், பொம்மலாட்டம், காவடி ஆட்டம் என எத்தனையோ கிராமிய நடனங்கள் எம்மைப் பரவசத்தில் ஆழ்த்துகின்றன. இவற்றை நாம் மெய்மறந்து இரசிக்கின்றோம். இவற்றைப் பேணிப் பாதுகாக்காவிடில் இருந்த சுவடே இல்லாமல் எமது பாரம்பரியங்களை மறந்தவர்களாகி விடுவோம் என்றார்.

கலை இலக்கிய விழாவில் முதல் நாள் நிகழ்வுகள் வலி.மேற்குப் பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான திருமதி.தே.பாபு தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துணைத் தலைவர் கலாநிதி ஏ.என்.கிருஸ்ணவேணி மங்களவிளக்கேற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். ஆரம்ப நிகழ்வாக விருந்தினர்கள் சங்கானை பஸ் நிலையத்தில் இருந்து பிரதேச செயலக மண்டபம்வரை குதிரை ஆட்டம், செம்பு ஆட்டம், வாத்திய இசையுடன் அழைத்துவரப்பட்டனர். (50-201-29)

# சங்கானை கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் அத்தியாவசியப் பொருள்கள் இல்லை

## ஏமாற்றத்துடன் திரும்பும் நுகர்வோர்

சங்கானை,மே12

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் யாவும் அத்தியாவசிய மற்றும் பாவனைப் பொருள்கள் இன்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

மா,சீனி,மற்றும் மிளகாய் போன்ற பொருள்கள் எதுவும் அங்கு இல்லாமையால் இவற்றை வாங்க வரும் பொது மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

இது தொடர்பாகக் கிளை முகாமையாளர்களைக் கேட்டால், சங்கத்தின் விநியோகப் பகுதியில் பொருள்கள் இல்லாதபடியால் தமது கிளைகளுக்கு பொருள்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

மேலும் தமது மாதாந்த வேதனத்தை அந்தந்த மாதங்களில் பெற முடியாதவாறு சங்கம் நிதியின்றியுள்ளதாகவும் நட்டத்தில் இயங்குவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (50-29)

# பற்றிமா அன்னை திருத்தலப் பெருவிழா

யாழ்ப்பாணம்,மே 12

பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை யாத்திரைத்தலத்தின் திருவிழா நாளை வியாழக்கிழமை நடைபெறும்.

நாளை வியாழக்கிழமை முதற்திருப்பலி காலை 6மணிக்கும், திருநாள் திருப்பலி மறை மாவட்டக் குருமுதல்வர் அருட் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் அடிகள் தலைமையில் காலை 7.30 மணிக்கும், நோயாளர்களுக்கான திருப்பலி நண்பகல் 12மணிக்கும், மாலைத் திருப்பலி மாலை 4.30மணிக்கும் நடைபெறும் எனவும் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணைத் திருவிழாவும் ஆசீர்வாதமும் இடம்பெறும் எனவும் ஆலயப் பரிபாலகர் அருட்திரு.ம.யேசுரட்ணம் அடிகள் அறிவித்துள்ளார். (50-112)




# திருநெல்வேலி சந்தையின் நடைபாதைகளில் வியாபாரம் செய்வோர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே12

திருநெல்வேலி பொதுச் சந்தையின் நடைபாதைகளில் பொருள்களை வைத்து விற்போர் மீது விரைவில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது.

சந்தையின் நடைபாதைகளில் பொருள்களை வைத்து விற்பதால் போக்குவரத்துக்கு இடையூறுகள் ஏற்படுகின்றன. அத்துடன் சந்தைக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்துவரும் மக்களும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே சந்தையின் நடைபாதைகளில் பொருள்களை வைத்து விற்பனை செய்வதை உடனடியாக நிறுத்துமாறும் தவறும் பட்சத்தில் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது. (50-224)

# கைதடி முதியோர் இல்லத்தின் புனரமைப்புக்கு 20 மில்லியன் ரூபா

யாழ்ப்பாணம்,மே 12

கைதடி அரச முதியோர் இல்லத்தின் புனரமைப்புப் பணிக்கென 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் இந்த நிதியை ஒதுக்கியுள்ளதாக இல்லத்தின் அத்தியட்சகர் என்.இராஜலிங்கம் தெரிவித்தார்.

ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு இல்லத்தின் புனரமைப்புப் பணிகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், சேதமடைந்த கட்டடங்களையும் இந்த நிதியைக் கொண்டு புனரமைக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (50-224)

# நண்பகல் 12 மணிவரை செயற்பட்டுவரும் மானிப்பாய் வைத்தியசாலை

நவாலி,மே 12

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலை கடந்த 10 ஆம் திகதி முதல் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை மட்டுமே செயல்பட்டு வருகின்றது.

இவ்வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி கொக்குவில் அரசினர் வைத்தியசாலைக்கு நண்பகலுக்குப் பின்னர் பதில் கடமையாற்றச் செல்வதாலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதி 24 மணி நேரமும் தொடர்ந்து இயங்கி வருகின்றது. (50-100)



'போருக்குப் பிந்திய வடக்கு-கிழக்கின் பொருளாதார அபிவிருத்தி [illegible] அண்மையில் கலைக்கோட்டம் மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் கியூடெக்-கரித்தாஸ் நிறுவனப் பணிப்பாளர் அருட் திரு.சி.ஜே.ஜெயக்குமார் அடிகள் தலைமை உரை நிகழ்துவதனையும், வளவாளர்களாகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் வி.பி.சிவநாதன், புவியியல்துறை தகைநிலை விரிவுரையாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் கருத்துரை வழங்குவதனையும் முதல் மூன்று படங்களிலும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்:கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயாளர்களின் மருத்துவ, சுகாதார மேம்பாட்டுக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றிவரும் தாதியர்கள்

இன்றைய உலகில் சமூக, கலாசார, அரசியல் மாற்றங்களின் பின்னணியிலே பல்வேறு இன்னல்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றது. போரனர்த்தங்கள், பஞ்சம், பட்டினி இயற்கை அனர்த்தம், பொருளாதாரம் எனப் பல்வேறு நெருக்கடிகளுக்கும், அளுத்தங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

**இன்று சர்வதேச தாதியர் தினம் கொண்டாடப்படுகிறது. அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

இந்நிலைமைகளினால் நோய்களும், காயங்களும் ஏற்பட்டு உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிப்புக்கு உள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அவற்றைக் குணமாக்கிக் கொள்ளும் பட்சத்தில் வைத்திய சேவையை நாடுகின்றனர். சமகால வாழ்வியல் நிலைமைகள், மனஉளைச்சல்கள் போன்ற காரணங்களினால் பெரும்பாலான மக்கள் பாதிப்புக்குள்ளாகியிருந்தும் அவர்களுக்கு பராமரிப்பை வழங்குவதில் பெரும்பாங்கு வகித்த பல்வேறு துறைகளிலும் அனுபவம் மற்றும் நிபுணத்துவம் மிக்க வைத்தியர்கள், தாதியர்கள், வைத்தியசாலையின் மக்களின் சுகாதார மேம்பாட்டில் ஏனைய அளப்பரிய பங்காற்றிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் யாவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

இன்று ஓர் தாதியின் பங்கு வைத்தியத் துறையில் 'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாீய் நாடி வாய்ப்பைச் செயல்'

நோய் இன்னதென ஆராய்ந்து நோயின் காரணம் அறிந்து அதனைத் தடுக்கும் வழியையும் தெரிந்து உடலுக்கும் பொருத்தமான மருத்துவம் செய்யவேண்டும் என்பதே இக்குறளின் கருத்தாக அமையும்.

''உற்றான் தீர்ப்பான் மருந்து உழைச் சொல்வான் என்று அப்பால் நாற்கூற்றே மருந்து''.

நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன் மருந்தை அங்கிருந்து வேளை தவறாமல் கொடுப்பவர் என்று மருத்துவ நான்கு வகைப்பாடு உடையது என்று பொருள்.

முதலில் நோயாளி உற்றான், இரண்டாவது மருத்துவம் பார்க்கும் மருத்துவர் - தீர்ப்பான் - மூன்றாவது நோய்க்குரிய நோய் தீர்க்கும் மருந்து - நான்காவது முறையாக மருந்து கொடுக்கும் முழுநேரப் பராமரிப்பை வழங்கும் தாதியர். இவை நான்கும் ஒருங்கிணைந்தால் தான் முழுமைபெறும்.

இவ்வாறாக ஒருவருடைய நோய் குணமாவதற்கு தாதியினது பெரும் பங்கு அவசியமாகின்றது என்பதை யாரும் மறுக்க முடியாத ஒன்றாகும். தாதியச் சேவை இந்தவகையில்

1820ஆம்ஆண்டு வைகாசி மாதம் 12 ஆம் நாள் வில்லியம் எட்வேட் தம்பதியினருக்கு 2 ஆவது மகளாக புளோரன்ஸ் நைற்றிங்கேல் பிறந்தார். இத்தாலியிலுள்ள புளோறன்ஸ் என்ற இடத்தில் பிறந்தமையால் அந்நகரின் பெயரே இவருக்கு சூட்டப்பட்டது.

தாதியத்திற்கு வரையறை வகுத்து அந்த கால கட்டத்திலே தாதிய சேவையை எவருமே விரும்பாத போதிலும் நைற்றிங்கேல் மனந்தளராது உறுதியாக நின்று உயர்வுறத் தனது சேவையைச் செய்து ஒவ்வொரு வருடமும் அவர் அவதரித்த இப் புனித நாளினை நாம் ''சர்வதேச தாதியர்'' தினமாகக் கொண்டாடி வருகின்றோம்.

உலகில் உள்ள நாடு, இனம், மதம் ஆகியவற்றையெல்லாம் கடந்து, அனைத்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு துறை வைத்தியத்துறை ஆகும். அதில் - புளோரன்ஸ் நைற்றிங்கேல் காட்டிய வழியில் நின்று தாதியச் சேவையின் மகிமையை மேலும் உயர்வுறச் செய்து கொள்வதுடன் தாதியத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற பண்புகளான அன்பு, இரக்கம், பொறுமை, தன்னலமின்மை, புத்திக்கூர்மை, விரைவாக முடிவெடுக்கும் ஆற்றல், நிறைவான ஆளுமை உடைய ஒருவராக செயற்பட்டு மருத்துவத் துறையை மேலும் வளர்ச்சி அடைய எம்மால் ஆனவற்றை செய்து தாதிய சேவையை செய்வோம் என்று உறுதி பூணுவோமாக.

யாழ்ப்பாணத்தில் தாதியர்கள் பற்றாக் குறையாக உள்ள போதிலும் தாதியத்தில் கற்றுக் கொண்டதன் விளைவாக அதாவது ஓர் உயிரினை இழப்பதற்கு நாம் காரணமாக அமையக் கூடாது! எம்மால் ஆன சேவையை சமூகத்திற்கு வழங்க வேண்டும் வைத்தியசாலையில் விடுதிகளில் ஏற்படுகின்ற தாதியர் கடமை வெற்றிடங்களை மன ஒற்றுமையோடு புரிந்து கொண்டு செயற்பட்டு வருகின்றார்கள்.

இந்த நிலையில் யாழ்ப்பாணமானது பல்வேறுபட்ட காரணங்களினால் (நீர், நிலம், காற்று) சூழல் ஆனது மாசடைகின்றது. இதனால் பல நோய்கள் ஏற்பட சந்தர்ப்பம் அதிகரிக்கின்றது. இவ்வாறான செயற்பாட்டை கட்டுப்பாட்டிற்கு கொண்டு வர அத்துறை சார்ந்த மேலதிகாரிகள் கவனமெடுத்துக் கொள்ளுமாறும் சுகாதார சேவையை வழங்குகின்ற சகலரும் விழிப்பாக இருந்து செயற்பட்டுவர வேண்டுமென்றும் இதனால் சமூகத்திடையே ஏற்படுகின்ற நோய்களிலிருந்து பாதிப்புக்கு உட்படாமல் தப்பித்துக் கொள்ள முடியும் என்றும் ''தாதிய சேவை'' மேலோங்கி நின்றிட தாதியர்கள் ஆகிய நாமும் விழிப்புடன் செயற்படுவோமாக.

உற்ற நோய் மாந்தர்க்கு
உதவிட தரணியிலே உதித்தவள்
கீறிடும், சிவந்திடும் நோயினால்
வேகிடும் வள்ளமெல்லாம்
வேதனை மறந்தன அவள் சேவையால்
மாறும் மருந்தாக அவர் வார்த்தை
பொறுமையோடன் பிணைத்து
கருமமாய் சேவையாற்றி
சர்வதேச மதில் முதற்தர தொழிலாக
''தாதியம்'' மிளிர்ந்திட வைத்த அம்மை
யாரே!

**செ. முருகானந்தன்,**
**போதனா வைத்தியசாலை**
**யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரி**
**மாணவ ஒன்றிய தலைவர்**

---

# அவர் அள்ளிக்கொண்டு போய்விட்டார் இவர்கள் ஏங்கிப்போய் நிற்கிறார்கள்!

## கட்சிப் பெயரில் கடைவிரித்தவர் எங்கே?

கடந்த மார்ச் மாதம் யாழ்ப்பாணம் வேம்படிச் சந்தியிலுள்ள சிறிலங்கா மக்கள்கட்சி அலுவலகத்தின் முன்னால் ஜனசமுத்திரம் அலைமோதியது. இந்தக் கட்சியின் யாழ்ப்பாணம்-வன்னி அமைப்பாளர் எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட திலக்குமார உடுகம என்பவர் தானே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்களை மீட்க வந்த வேட்பாளர் என தன்னைப் பிரகடனப்படுத்திக்கொண்டதே இவரது கட்சி அலுவலக வாசலில் ஜனசமுத்திரம் அலைமோதியதற்கு காரணம். வன்னியில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து விட்டு வந்து தாங்கள் உயிருடன் நடமாடுவது கனவா நனவா என்ற நிலையில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துவரும் மக்களும்,யாழ்ப்பாணத்திலேயே பல்வேறு துன்ப துயரங்களின் மத்தியில் வாழ்ந்துவரும் மக்களும் தங்களுக்கு ஏதோ விடிவு கிட்டப்போகிறது என்ற அவாவுடன் உடுகமவின் அலுவலகத்தை நோக்கிப் படையெடுத்தனர்.

அதிகாலை நான்கு மணிக்கே தமக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பற்றிய ஆவணங்களுடன் குடாநாட்டின் பலபாகங்களிலிருந்தும் மக்கள் உடுகமவின் அலுவலகத்தை நோக்கிப் படையெடுத்தனர். கொளுத்தும் வெயிலில் பெண்கள் கைக்குழந்தைகளுடன் பாம்பு நெழிவது போன்ற வரிசையில் தினமும் கால்கடுக்க நின்றனர். அலைமோதிய மக்கள் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்கு திலக்குமார உடுகமவின் உள்ளூர் எடுபிடிகள் சிலர் கைகளில் வயரை வைத்துக்கொண்டு மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்தினர்.

தன்னை நாடி வந்த ஒவ்வொருவரிடமும் இருபது ரூபா அங்கத்துவப் பணமாக அறவிட்டார் உடுகம. மூத்த எழுத்தாளர் கலாநிதி க.குணராசாவும் உடுகமவின் கட்சியிலேயே ஜனாதிபதி மகிந்தவின் கரங்களைப் பலப்படுத்துங்கள் என்ற விளம்பரத்துடன் தேர்தலில் போட்டியிட்டார். திலக்குமார உடுகமவின் தேர்தல் நாடகம் பற்றி நான் இரு தடவைகள் உதயன் பத்திரிகையில் ஏழுதினேன். மக்களை ஏமாற்றாதீர்கள் எனக் கோரிக்கை விடுத்திருந்தமைக்காக உடுகமவின் எடுபிடிகள் என்னைத் தாக்க முற்பட்டதும் வாசகர்கள் அனைவரும் அறிந்த விடயம். இப்போது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உடுகமவின் அலுவலகம் மூடிக் கிடக்கிறது. சில சந்தர்ப்பங்களில் ஓரிரு யுவதிகளும் ஆண்களும் காணப்படுகின்றனர்.

தேர்தல் முடிந்த மறுநாளே உடுகம மூடைகட்டிவிடுவார் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். உடுகமவை நம்பி யாழ்ப்பாணத்தில் சுமார் 2500பேர் உடுகமவுக்கு வாக்களித்துள்ளனர் என்றால் குறைந்தது 25000பேராவது உடுகமவின் கட்சியில் அங்கததுவம் பெற்றிருப்பார்கள் எனக் கொள்ளாமல். 25000 x 20 என்பது மிகவும் குறைந்த கணக்கு யாழ்.மக்களின் பணம்.




நண்பரொருவர் கூறினார் எல்லோரும் பணத்தைச் செலவு செய்து தேர்தலில் போட்டியிட்டனர். ஆனால் உடுகம மக்களை வெயிலில் வைத்து வதைத்து மக்களின் பணத்தைப் பெற்று தேர்தலில் போட்டியிட்டு 2500வாக்குகளைப் பெற்றுள்ளார் என்றால் அது ஒரு மகத்தான சாதனை என்றார்.

தங்களை யூதர்களுக்கு ஒப்பிடும் மெத்தப்படித்த யாழ்ப்பாண மக்கள் அதிகாலை நான்கு மணிக்கே வந்து கொளுத்தும் வெயிலில் தவமிருந்து உடுகம உல்லாச வாழ்வு வாழ்வதற்குத் தாம் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை அன்பளிப்புச் செய்துள்ளனர். உடுகமவை நம்பி ஏமாந்த ஷோணகிரிகளுக்கும் என்னைத்தாக்க முனைந்த காரைநகரைச் சேர்ந்த (தற்போது திருநெல்வேலியில் வசிக்கும்) முதியவருக்கும், உரும்பிராய்,கோண்டாவில் இளைஞர்களுக்கும் இது சமர்ப்பணம்.

சிறிலங்கா மக்கள்கட்சியிலிருந்து உடுகம நீக்கப்பட்டுவிட்டார் என்ற பிந்திய செய்தி இவர்களுக்குத் தெரியுமோ எனக்குத் தெரியவில்லை. பணம் செலுத்தியவர்களுக்காக அனுதாபப்படுவதைவிட வேறென்ன செய்யமுடியும்.

*ஆழ்ந்த அனுதாபங்களுடன்*
*ந.பரமேஸ்வரன்.*

---

## மரண அறிவித்தல்

### இளையவி வல்லிபுரம் (சின்னத்தம்பி)



அம்பனையைப் பிறப்பிடமாகவும் தமிழ்ப் பாடசாலை ஒழுங்கை, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளையவி வல்லிபுரம் (சின்னத்தம்பி) நேற்று முன்தினம் (10.05.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இளையவி-பூபதி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், பராசக்தி, காலஞ்சென்ற பாலரஞ்சனா மற்றும் பத்மநாதன் (சுவிஸ்), புஸ்பநாதன் (ராசு-ஜேர்மனி), ரஞ்சன் (லண்டன்), பரமேஸ்வரன் (நந்தன்-லண்டன்),பத்மினி (சுவிஸ்), தயாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அரியதாசன், காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் செல்வராணி (சுவிஸ்), தர்சினி (ஜேர்மனி), மஞ்சுளா (லண்டன்), யசோதா (லண்டன்), ரமணன் (சுவிஸ்), சிறீகரன் (DRC யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சங்கீதா, யனாத்தனன், தேஷ்பிரியன், டலக்சன்,சௌமியா, பிரவீனா, அனோஜன், தமிழினி, சஞ்யூ, அஸ்விதா,வைஸ்ணவி, துர்சாந், சஜீசன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, இலட்சுமிப் பிள்ளை,சுப்பையா, சின்னத்துரை மற்றும் பசுபதி, அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2010) புதன்கிழமை பி.ப 2மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தமிழ்ப் பாடசாலை ஒழுங்கை,மல்லாகம்.
தொ.பே.0217210073,0212241085 (98057)

தகவல்:
குடும்பத்தினர்.

---


## FINANCIAL SPONSORSHIP

**UK, USA, CANADA, NEW ZELAND AND ALL COUNTRIES**

மேலே உள்ள நாடுகளுக்கு
*Student Visa, Tourist Visa,*
அனைத்துவிதமான
விசாக்களுக்குமான *Sponsorship*
உத்தரவாதத்துடன் ஒரே நாளில்
செய்து தரப்படும்.

**தொடர்புகளுக்கு: 0777 492434**

## தேவை

எமது நிறுவனத்திற்கு கணனி அறிவுடைய பெண் பிள்ளை ஒருவரும் காசாளர் ஒருவரும் தேவை. இன்று (12.05.2010) புதன்கிழமை காலை 9 மணிக்கு சுயவிவரக் கோவையுடன் சமுகம் தரவும். (மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது).

விவரங்களுக்கு: A.M.T. Transport Service
*Irupalai Junction, Kopay. 021 222 5784*

## மணமகள் தேவை

31வயதுடைய யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 27 கிரக பாவமும் 8இல் செவ்வாயும் உள்ள அரசாங்க உத்தியோத்தருக்கு பெற்றோர் மணமகளை எதிர்பார்க்கின்றனர். மணமகள் ஆசிரியையாகவோ அல்லது வங்கியில் தொழில் புரிபவராகவோ இருத்தல் விரும்பத்தக்கது.

[illegible] (98060)


---

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி நாகேஸ்வரி



ஏழாலை தெற்கு, களபாவோடையைப் பிறப்பிடமாகவும் கனடா மிஸ்ஸிஸ்சாகாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி கந்தசாமி 07.05.2010 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி (பிரபல சுருட்டு முதலாளி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - தங்கம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுப்பிள்ளை - மீனாட்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, செல்வரத்தினம் ஆகியோரின் சகோதரியும்,காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் சரஸ்வதி, சங்கரலிங்கம், சிவராசா, சிவலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், அருளானந்தம் (அருள் - கனடா), கமலாதேவி(கமலா - கனடா), சிறியானந்தம்(சிறி - சுவிஸ்), கனகேஸ்வரி( தங்கா - கலிபோனியா), சிவச்செல்வி (செல்வி - கனடா), கலாறூபி (கலா - கனடா), ஜெயலட்சுமி (ஜெயா கனடா), கிருபாகரன் (கிருபா - கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், யோகராணி (கனடா), துரைராஜசிங்கம் (கனடா), கேதீஸ்வரி (சுவிஸ்), செல்வகுமாரன் (கலிபோனியா), கேதீஸ்வரன் (கனடா), புரந்தரநாதன்(கனடா), தயாபரன்(கனடா), றாஜினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அருள்ஜெரனி, அருள் கிருஷன், அருள்லாகினி சங்கீதா, ஜென்சி, அஜந்,துவாரகா, மிதுரா, போதினி, ஆரணன்,யாழினி, தனுஷேயன்,றாக்ஷன் வேனுஷா(கனடா), தனீஷா, கபில்ஜன், அபிசுஜன் (கலிபோனியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.05.2010) புதன்கிழமை கனடா, மிஸ்ஸிஸ்சாகாவில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: அருளானந்தம் - 905-607 - 3896 - கனடா,
கமலாதேவி - 905 - 5026182 - கனடா,
சிறியானந்தம் - 0041 - 618311945 - சுவிஸ்

விளிசிட்டி, ஏழாலை தெற்கு தபாற்கந்தோர் அருகில் அவரது மகளின் இல்லத்தில் இன்று (12.05.10) புதன்கிழமை மதியம் 12 மணியளவில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

விளிசிட்டி, ஏழாலை தெற்கு
(தபால் கந்தோரடி)

தகவல்:
இரத்தினம் சம்பந்தன் (மருமகன்)

(98056)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர்களின் சின்னங்களை அழித்து இராணுவத்துக்கான தூபிகளை நிறுவுவதன் மூலம் தமிழர்களின் மனங்களை அரசு நோகடிக்கிறது

## நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,மே12

இனத்துக்காக உயிர்த்தியாகம் செய்த மாவீரர்களின் நினைவுச் சின்னங்களை அழித்து அந்த இடங்களில் இராணுவத்தினருக்கான நினைவுத் தூபிகளை நிறுவுவதன் மூலம் அரசு தமிழ் மக்களின் மனங்களை நோகச் செய்கின்றது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

குடாநாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலை தொடர்பாக நேற்று முன்தினம் அவரது அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இலங்கை அரசாங்கம் யுத்த வெற்றியைத் தொடர்ந்து பெரும் செலவில் ஆனையிறவு, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் போரில் இறந்த இராணுவத்தினருக்கு நினைவுத் தூபிகளை அமைத்து வருகின்றது.

விடுதலைப் புலிகள், போரில் உயிரிழந்த தமது மாவீரர்களுக்காக அமைத்த துயிலும் இல்லங்கள், நினைவிடங்கள் ஆகியவற்றை உருத்தெரியாமல் அழித்துவிட்டே இராணுவத்தினருக்கான இந்தத் தூபிகள் அமைக்கப்படுகின்றன.

இது ஓர் அநாகரிகமான செயலாகும். உலகின் எந்த இராணுவமும் செய்யாத செயல். இச்செயற்பாடுகள் உடன் நிறுத்தப்படவேண்டும். தற்போது கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தை இரவு வேளைகளில் உடைத்து கற்கள் ஏற்றப்படுகின்றன. இச் செயற்பாட்டை யாழ்.இராணுவத் தளபதி உடன் நிறுத்த வேண்டும்.

அரசாங்கத்துக்கு விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகளாகத் தெரியலாம். ஆனால் தமிழ் மக்களுக்கு அவர்கள் பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள். அவர்களை நினைவுகூர அமைக்கப்பட்ட கல்லறைகளை இடித்தழிப்பது என்பது மக்களின் மனங்களை நோகச் செய்யும் செயல் என்பதை இராணுவக் கட்டளை அதிகாரிகளும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்டு பண்டார வன்னியன் தோற்ற இடத்தில் 1803ஆம் ஆண்டு வைக்கப்பட்ட நினைவுக்கல் கூட உடைக்கப்பட்டுள்ளது. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்த இடத்தைக் கூட இராணுவத்தினர் அழிப்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கண்டிக்கின்றது. இச்செயல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றார். (50-06)

### உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம்பெயர்ந்து

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள்

யாழ்ப்பாணம்,மே.12

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை விநியோகிக்கப்பட்டன.

மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து இடம்பெயர்ந்து சங்கானை, உடுவில், தெல்லிப்பழை ஆகிய பிரதேசங்களில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் குடும்பங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 25 பெண்களுக்கு இந்தத் தையல் இயந்திரங்கள் விநியோகிக்கப்பட்டன. (50-224)

# கிளிநொச்சி பொதுச்சந்தை அம்பாள்குளத்தில் திறப்பு

யாழ்ப்பாணம்,மே.12

கிளிநொச்சி பொதுச் சந்தை அம்பாள் குளத்தில் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தை திறந்து வைக்கப்பட்டதை அடுத்து மரக்கறி வகைகள் மற்றும் இதர பொருள்கள் தற்போது சந்தைக்குத் தாராளமாக எடுத்துவரப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

சந்தையின் சுற்றாடல் பகுதியில் தற்காலிகமாக வர்த்தக நிலையங்களும் திறக்கப்பட்டு வருகின்றன. (50-224)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,மே12

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்த பசார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை ஏற்றுமாறு மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபம் முன்பாகவும் இராசாவின் தோட்டம் வீதியில் அமைந்துள்ள அருள்மாதா சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (50-201)



தேசிய சேமிப்பு வங்கியின் கிளை சங்கானையில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கியின் பொதுமுகாமையாளர் சுனில் பெரேரா, அவரது பாரியார், வடவலய முகாமையாளர் யு.எல்.ரஜீத், உதவி முகாமையாளர் கே.ஈஸ்வரலிங்கம் ஆகியோர் உட்பட விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் சுனில் பெரேரா மங்கள விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும், வங்கிக் கட்டடத்தின் உரிமையாளர் வ.கிருஸ்ணதாசன் முதலாவது வைப்புத் தொகையை வங்கியின் பொது முகாமையாளரிடம் கையளிப்பதை இறுதிப் படத்திலும் காணலாம். (50-29)




# சைக்கிள் பாதுகாப்புக்கு கூடுதலான கட்டணம்

நல்லூர்,மே.12

திருநெல்வேலி மத்திய சந்தையில் உள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் இடம்பெறும் பாதுகாப்புக் கட்டண வசூல் குறித்து சந்தைக்குச் செல்லும் பொது மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். சைக்கிள் பாதுகாப்புக் கட்டணமாக 4 ரூபா அறவிடப்படுவதாக ரிக்கெற்றில் போடப்பட்டுள்ளது. எனினும் ரிக்கெற்றை விநியோகிப்பவர் குறிப்பிட்ட தொகையான 4 ரூபாவை வெட்டிவிட்டு கட்டணமாக 5 ரூபா அறவிடுவதாகக் கூறப்படுகின்றது.

இதுகுறித்து அதிருப்தி தெரிவிக்கும் பொதுமக்கள் நல்லூர் பிரதேச சபை உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தெரிவிக்கின்றனர். (க-111)

# வாகனங்களைத் தீவிரமாக சோதனையிடும் பொலிஸார்

யாழ்ப்பாணம்,மே.12

மானிப்பாய் பகுதியில் பிரதான வீதியெங்கும் போக்குவரத்துப் பொலிஸார் தீவிர வாகனச் சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மானிப்பாய் வீதி வழியாக யாழ்.நகரை நோக்கி வருகின்ற மோட்டார் சைக்கிள்கள், வாகனங்கள் என்பவற்றை இவர்கள் தீவிர சோதனைக்குட்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் மானிப்பாய் வீதியில் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் முகமாகப் பல்வேறு செயற்பாடுகளையும் அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். (50-9)

# வீதி அகலிப்புக்கு இடையூறாக உள்ள மரங்கள் மட்டுமே வெட்டப்படுகின்றன

## வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே.12

பருத்தித்துறை வீதியை அகலமாக்கி புனரமைக்கும்போது அதற்கு இடையூறாகக் காணப்படும் மரங்கள் மட்டுமே வெட்டப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்கு தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

வீதியை அகலமாக்கிப் புனரமைக்கும்போது அந்தப் பணிகளுக்கு இடையூறாகக் காணப்படும் மரங்கள் மட்டுமே வெட்டப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலகம், வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் அனுமதியுடனேயே இந்த மரங்கள் வெட்டப்படுகின்றன.

அரச மரக் கூட்டுத்தாபனமே இந்தப் பணியை மேற்கொண்டு வருகின்றது - என்றார். (50-224)

# அதிபர்களுக்கான கலந்துரையாடல்

கோப்பாய்,மே.12

கல்விப் பரிமாற்ற சுற்றுலாவில் பங்கேற்ற யாழ். கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். கல்வி வலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறுமென யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

சுற்றுலாவில் பங்கேற்ற அதிபர்களை தவறாது கலந்துரையாடலில் பங்கேற்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (50-72)

# மாவட்ட சிந்துநடைக் கூத்துப் போட்டிக்குச் சென்ற கொக்குவில் இந்து அணி ஏமாற்றத்துடன் திரும்பியது

## வேறு பாடசாலை அழைக்கப்பட்டிருந்தமையே காரணமாம்

யாழ்ப்பாணம்,மே12

பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த் தினப் போட்டியில் சிந்துநடைக் கூத்தில் வலய மட்டத்தில் முதலிடம் பெற்று மாவட்ட மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றச் சென்றபோது அங்கு வேறு ஒரு பாடசாலையின் அணி போட்டிக்கு அழைக்கப்பட்டிருந்தமையால் அதில் பங்குபற்ற முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்த பாடசாலையின் வட்டாரத்தில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

யாழ்.வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிகள் நடைபெற்று முடிந்த நிலையில் சிந்து நடைக் கூத்துப் போட்டிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மட்டுமே விண்ணப்பித்திருந்ததாகவும் - எனவே அந்த அணி வலயமட்டத்தில் போட்டியின்றி நேரடியாக மாவட்ட மட்டத்துக்குத் தெரிவுசெய்யப்படுவதாகவும் யாழ்.வலய தமிழ்த் தினப் போட்டிகளின் ஏற்பாட்டுக் குழுவினர் குறித்த பாடசாலை யின் அதிபருக்குத் தொலைபேசி மூலம் அறிவித்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் சிந்துநடைக் கூத்து அணி கடந்த வாரம் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற மாவட்டமட்டப் போட்டியில் கலந்துகொள்வதற்குச் சென்ற போது அங்கு சிந்துநடைக் கூத்தில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி பங்குபற்றியது. இதனால் அதிருப்தி அடைந்த அதிபர், வலயக் கல்விப் பணிமனையின் தமிழ்த்தினப் போட்டிகளின் ஏற்பாட்டுக் குழுவினருடன் தொடர்புகொண்டு கேட்டபோது கொக்குவில் இந்துக் கல்லூரி சிந்து நடைக் கூத்துப் போட்டிக்கு விண்ணப்பித்திருக்கவில்லையென்று பதில் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாகக் கொக்குவில் இந்துக் கல்லூரியினர் அதிபர் எஸ்.அகிலதாஸிடம் தொடர்புகொண்டபோது அவர் தெரிவித்தவை வருமாறு:-

எமது கல்லூரியின் சிந்து நடைக் கூத்து அணி தமிழ்த்தினப் போட்டியில் பங்குபற்றுவதற்கு கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு விண்ணப்பித்திருந்தது. எமது கல்லூரியின் சிந்துநடைக் கூத்து அணி கோட்ட மட்டம், வலயமட்டம் ஆகியவற்றில் போட்டியின்றி மாவட்ட மட்டத்துக்குத் தெரிவுசெய்யப்படுவதாக போட்டிகளின் ஏற்பாட்டுக்குழுவினர் எமக்குத் தொலைபேசி மூலம் அறிவித்திருந்தார்கள். நாம் அங்கு போட்டிக்குச் சென்றபோது அங்கு வேறு பாடசாலை போட்டியில் கலந்து கொண்டிருந்தது - என்றார்.

போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் இந்தச் செயல் காரணமாக குறித்த பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் அதிருப்தி அடைந்துள்ளதுடன் குறித்த போட்டியில் பங்குபற்றச் சென்ற மாணவர்களும் மன உளைச்சலுக்குள்ளாகியுள்ளனர் - என்று தெரிவிக்கப்படுகிறது. (50-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வலி.கிழக்கு சைவசமய அருள்நெறிமன்றத்தினால் நடத்தப்பட்ட புத்தாண்டுக் கலை விழாவின்போது நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிய பரமாச்சாரிய சுவாமிகள் முன்பள்ளி மாணவனுக்கு மன்றத்தின் சார்பில் புத்தாக்க பரிசில் வழங்குவதனையும், அருகில் மன்றத் தலைவர் சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள், சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் ஆகியோர் அமர்ந்திருப்பதனையும் சிறுமிகளின் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம்.


HAPPY BIRTHDAY

1ஆவது பிறந்தநாள் வாழ்த்து

திரு. திருமதி நிமல்ராசா சைத்திரி தம்பதியரின் செல்வப் புதல்விகளான அஸ்விகா, அனேகா தமது 1ஆவது பிறந்த நாளை 12.05.2010ஆந் திகதி கனடாவிலுள்ள தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள். இவர்களை கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகரதும், நுணாவிற்குளம் கண்ணகை அம்மனதும் அருள்பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ்கவென வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துபவர்கள்:
சு. பூபாலசிங்கம் (தாத்தா)
அம்மம்மா, மாமா, அத்தை
நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.



# VACANCY

## POST OF PROGRAMME MANAGER

Applications are invited from eligible candidates for the post of a Programme Manager.

(a) Should be a Degree Holder in the relevant field. Able to write Project Proposal, Projects reports and concepts papers in English. Able to carry out field supervision and monitoring.

★ Excellent command of English in speaking and writing – capable to produce well-organized-reports and proposals.

★ Collecting basic data and information on communities and livelihood development activities

★ Practical skills to implement livelihood development: activities, such as micro finance activity and community infrastructure development with community participation.

★ Practical skills to facilitate workshop in formulating community action plan for potential of community development activities.

★ Practical skills to facilitate workshop to prepare community action plan. Experience in conducting survey on needs and potential of community development activities.

★ Bachelor's degree or above in the area of expertise or related areas, preferably from a renowned University.

b) Computer knowledge

(c) should possess a valid motor cycle license

(e) Age 25 —50

(f) Applications closing date — 18.05.2010

Application with bio data / CV should be forwarded to the following address.

Chairman
TRRO LTD
106, 4th Cross Street
Jaffna.



## மாபிள் வகைகள் மலிவு விற்பனை

இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர மாபிள் வகைகள், கொமட் செட், சிங்வகைகள், பிளாஸ்ரிக் கதவு வகைகள், பைப் வகைகள், மர அடைப்புகள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட 'DUKE' பெயின்ற் வகைகள் என்பவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள,

**ஸ்ரார் செராமிக்ஸ்**

இல.05, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021- 5672061, 077 7578277- ராஜா

(இ/567231)



## வேலையாள்கள் தேவை

யாழ்.பல்கலைக்கழக சுற்றாடலில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் தொலைத் தொடர்பு, போட்டோ கொப்பி கணனி நிறுவனத்திற்கு பெண் வேலையாள்கள் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

விள.இல. 4018, C/o உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## வலுவிழந்தோர் ஐவருக்கு ரூ.10 ஆயிரம் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,மே 12

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து வலுவிழந்தோருக்கு சுயதொழில் உதவிக் கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சின் வலுவிழந்தோருக்கான தேசிய செயலகத்தினால் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் உதவிக் கொடுப்பனவுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பின்வருவோர் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் எதிர்வரும் 17ஆம் திகதி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் கொடுப்பனவுத் தொகையினைப்பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

ஐயாத்துரை பாலசுந்தரம் - கெற்பேலி மத்தி, வலோரி ஆபிரகாம் - வீட்டுத் திட்டம், நாவற்குழி, மாணிக்கம்கிட்டிணன் - தவசிகுளம், மிருசுவில், அந்தோணிப் பிள்ளை அன்ரன் றொபேட் - அல்லாரை வடக்கு, வைத்தி கந்தசாமி - கைதடி [illegible]

(ஒ-207)


## கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்
754
சீட்டிழுப்பு திகதி
10.05.2010

| எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|
| F | 01 | 08 | 55 | 70 |

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 15,644,878.40 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 12 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 293 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 555 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 50/= | 14288 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 8136 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 203446 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 32055 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,130,860.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 16,148,910.40

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2475360

இணையதளம்: www.nlb.lk

FASTads



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 19 ★ 05 ★ 1924



உதிர்வு 13 ★ 04 ★ 2010

**திருமதி சில்வியா இம்மானுவேல்**

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்தில் என்னை மறவாதீர்கள்".

கடந்த 13.04.2010 இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவியின் மரணச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி, மின்அஞ்சல் மூலமும் ஆறுதல் மொழி கூறிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை (13.05.2010) வியாழக்கிழமை காலை 6 மணிக்கு பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்குபற்றி பின்னர் எமது இல்லத்தில் நடக்கும் உபசரணையில் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

54/3, புனித அன்னாள் கோயில்
முன் ஒழுங்கை,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
திரு.திருமதி அரியநாயகம்,
போர்த்தி குடும்பம் (லண்டன்).

(98014)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட் சூட் அணிந்தபடி மோட்டார் சைக்கிளில் பறக்கும் ஜப்பானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள்

**இலங்கை மற்றும் ஜப்பான் அரசுகளின் ஏற்பாட்டில் 'சமாதான முன்னெடுப்பு பயணம்' என்ற திட்டத்தின் கீழ் இலங்கையிலிருந்து ஐவர் சமீபத்தில் ஜப்பானுக்கு ஒருவார சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவரான 'உதயனின்' சகோதரப்பத்திரிகையான 'சுடர் ஒளி' யின் உதவி ஆசிரியர் செ.அற்புதன் தமது அனுபவத்தை இங்கு தொடராகப் பகிர்ந்து கொள்கிறார்.**

அதனால் தண்ணீர் கொடுக்கக் கூடிய வசதி இருந்தும் கொடுக்க முடியவில்லை. ஆனால் என்னிடம் தண்ணீர் கேட்ட பிள்ளைகள் எனது கண்ணுக்கு முன்னால் ஒவ்வொருவராக செத்துக்கொண்டிருந்தார்கள்.

கடைசி நேரத்தில் அந்தக் குழந்தைகளுக்குத் தண்ணீராவது கொடுத்திருக்கலாமே என்று இப்போதும் கவலைப்படுகிறேன்.(குரல் தளதளக்கிறது)

13 வயதான எனது தங்கையும் அவளோடு அவளது வகுப்பில் படித்த 228 பிள்ளைகளும் இறந்துபோனார்கள். இதேபோல ஆயிரக்கணக்கான



அணுகுண்டுக்குப் பலியான ஒரு குடும்பம்.

குழந்தைகள், சிறுவர்கள், மாணவர்கள் செத்து மடிந்தார்கள். எனது தங்கை சிறுவயதில் நல்ல அழகாக இருப்பாள்.(தங்கையின் படத்தைக் காண்பிக்கிறார்) அவளுக்கு இடதுகைப்பழக்கம். நல்ல கெட்டிக்காரி. பாடசாலையில் அவள்தான் முதல் மாணவி. தினமும் இரவில் தனது நாளாந்த வாழ்க்கைக் குறிப்புகளை டயரியில் எழுதுவாள். சம்பவம் நடப்பதற்கு 11 மணித்தியாலங்களுக்கு முன்னர் -முதல்நாள் இரவு 9மணிக்கு - கடைசியாக அவள் தனது டயரியில் எழுதினாள். அந்த டயரியைக் கூட இன்றுவரை பாதுகாப்பாக வைத்திருக்கிறேன். இசையில் மிகுந்த ஆர்வம் உடையவள். நன்றாகப் பியானோ வாசிப்பாள். இது நடந்து 65 வருடங்கள் கழிந்துவிட்டன. அவளை இப்போது நினைத்தாலும் எனக்குக் வேதனையாக இருக்கிறது.

''சரி....அணுகுண்டுத் தாக்குதலுக்குப் பிறகு அந்த இடத்தில் இப்போது கூட அணுச்சக்தித் தாக்கம் இருப்பதாகவும், அங்கு இன்னும் குழந்தைகள் ஊனமுற்றவர்களாகத்தான் பிறக்கிறார்கள் என்றும் நம் நாட்டில் ஒரு கதை அடிபடுகிறதே உண்மையா....?'' என்று கேட்டதற்கு, ''இல்லை.....இப்போது அப்படி எதுவுமே இல்லை.குண்டு வீசப்பட்டதிலிருந்து சுமார் 20, 25 வருடங்கள் அப்படியான பிரச்சினைகள் இருந்தன. ஆனால் அதற்குப் பிறகு எல்லாம் சரியாகிவிட்டது.'' என்கிறார் அவர்.

''தாக்குதல் நடந்தவுடன் இது அணுகுண்டுதான் என்று உங்களுக்குத் தெரிந்துவிட்டதா?''

இல்லை.... இல்லை!... அணுகுண்டு என்றால் என்ன என்றே அப்போது எங்களுக்குத் தெரியாது. தாக்குதலுக்கு 4,5 நாள்கள் கழித்து நாங்கள் இந்த இடங்களில் இடிபாடுகளுக்கிடையில் உலவித்திரிந்தோம். பிறகு கொஞ்ச நாள்கள் கழித்து எல்லோருக்கும் கடும் காய்ச்சல். உடம்பெல்லாம் தொப்புளங்கள் போட்டன. ஒரே தலைவலி. அப்போதுதான் இது ஏதோ விவகாரமான குண்டாக இருக்கும் என்று புரிந்தது. அதற்குப் பின்னர் எவரும் இந்த இடத்துக்கு வரவில்லை. வேறு தூர இடங்களில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றோம்.''

''அந்தக் காலத்தில், உங்கள் மீது அணுகுண்டு வீசிய அமெரிக்கா தொடர்பான உங்களின் மனநிலை எப்படியிருந்தது?''

''சொல்லவே முடியாத கோபமும் ஆவேசமும்தான் இருந்தது. எதற்காக எங்களுக்கு இப்படியொரு காரியத்தைச் செய்தார்கள் என்று நினைத்து ஆத்திரப்பட்டோம். அமெரிக்கா மீது இருந்த கோபத்தினால் நான் 60வருடங்களுக்கு மேல் அந்த நாட்டுக்குச் சென்றதேயில்லை. ஆனால் கடந்த 3 வருடங்களுக்கு முன்னர், உத்தியோகபூர்வ விஜயமாக அங்கு செல்லவேண்டியிருந்தது. இருந்தாலும் இப்போது நான் அங்கு சந்தித்துப் பேசியவர்கள் எல்லோருமே ரொம்ப நல்லவர்களாக இருந்தார்கள்.''

''இறுதியாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்....?

''நீங்கள் இங்கு வந்ததில் எனக்கு மகிழ்ச்சி. ஏனென்றால், நாங்கள் அனுபவித்த பெரும் அனர்த்தத்தை உங்களோடு பகிர்ந்துகொள்ள முடிந்தது. உங்கள் நாட்டிலும் யுத்தத்தினால் ஏராளமான அழிவுகள் ஏற்பட்டன என்று அறிந்து வருத்தப்பட்டேன். உயிரிழப்பும் அழிவும் எங்கும் ஒரே மீாதிரித்தான் அணுகுண்டுகள் ஹிரோஷிமா, நாகசாகி விழவில்லை ஒட்டுமொத்த மனுக்குலத்தின் மீது - மனித இனத்தின் மனச்சாட்சி மீதுதான் அந்தக் குண்டுகள் போடப்பட்டன. இனிமேல் மனிதர்களுக்கிடையில் யுத்தம் ஏற்படாமல் இருக்கவேண்டும். எங்கும் அமைதி நிலவவேண்டும். இதுதான் எனது விருப்பம். உலக நாடுகளின் தலைவர்கள் எல்லோரும் ஒருதடவையாவது ஹிரோஷிமாவுக்கு வரவேண்டும் என்று நான் விரும்புகிறேன். பலர் வந்து போயிருக்கிறார்கள். ஆனால் கட்டாயம் வரவேண்டிய சிலர் இன்னும் வரவில்லை....(அமெரிக்கத் தலைவர்களைச் சொல்கிறார் போலும்) இனம் புரியாத துக்கம் நெஞ்சை அடைக்க, ஹிரோஷிமாவுக்கு விடை கொடுத்தோம்.

பகுதி - 9

### 'கோட்சூட்' சாரதிகள்!

ஜப்பானில் பொதுப் போக்குவரத்து பஸ், வாடகைக்கார் (Taxi)போன்றவற்றின் சாரதிகள் 'கோட்சூட்' அணிந்துதான் வாகனம் செலுத்துகிறார்கள். அங்கு ஓட்டோவை 'மருந்துக்கும்' காண முடியாது. மோட்டார் சைக்கிள்களைப் பொறுத்தவரை நம்மூரில் அள்ளுகொள்ளையாகத் திரியும் ஹீரோ ஹொண்டா, பள்ஸர் வகைகள் அங்கு இல்லவே இல்லை. எங்கள் நாட்டில் பெற்றோல் தட்டுப்பாடு வந்த காலங்களில் மண்ணெண்ணையில் ஓடித்திரிந்தோமே 'சுப்பர்கப் - 50' அதுதான் அங்கு பிரபல்யம். எம்.டி.- 90(MD90) ரக மோட்டார் சைக்கிள்களையும் இடையிடையே காணமுடிந்தது. கோட்சூட் அணிந்து வேலைக்குப் போகின்றவர்களும் 'சுப்பர் கப்' ரக மோட்டார் சைக்கிளில்தான் போகிறார்கள். சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட இந்த வகையான மோட்டார் சைக்கிளில்தானாம் திரிகிறார்கள்.

அங்கு விபத்துகள் நடப்பதற்கு சாத்தியங்கள் மிகக் குறைவு. ஏனென்றால் வீதிகள் அவ்வளவு அகலம். பெருந்தெருக்கள்(Highways) முதற்கொண்டு குச்சொழுங்கைகள் வரை எல்லாமே அதி நவீன தரத்தில் போடப்பட்டிருக்கின்றன. வீதிகளுக்கு மேலால் போடப்பட்ட பாலங்களிலும் வாகனங்கள் பயணிக்கின்றன. போதாக்குறைக்கு கடலுக்கு அடியிலும், நிலத்துக்குக் கீழும் நல்ல அகலமான வீதிகள் இருக்கின்றன. இப்படி வீதிகள் அதிகமாக இருப்பதால் விபத்துகள் நடப்பது மிகவும் அரிது என்கிறார்கள். வீதிகளில் போக்குவரத்துப் பொலிஸாரைக் காணமுடியாது. ஆனால், மூலை முடுக்குகள் எங்கும் நவீன கமராக்களைப் பொருத்தியிருக்கிறார்கள். எவராவது வீதி ஒழுங்குகளை மீறினால், அடுத்த நாளே அபராதத் தொகையுடன் வீட்டுக்கு 'றிசீற்' வந்து விடுமாம்.

### ஜாலியான திருட்டு!

ஜப்பானில் திருட்டுகளோ, கொள்ளைச் சம்பவங்களோ நடப்பது மிக மிகக் குறைவு. ஆனால், அங்கு சைக்கிள்களைப் பூட்டாமல் விட்டுப் போனால், சிலவேளைகளில் அவை களவுபோய் விடும். அது பள்ளிக்கூடங்களில் படிக்கும் 'இளசுகள்' செய்யும் திருகுதாளம்! இது 'சீரியஸான' திருட்டு அல்ல; ஜாலியான திருட்டு! எப்படித் தெரியுமா...? யாராவது சைக்கிளைப் பூட்டாமல் விட்டுவிட்டுச் சென்றால், இந்த 'விடலைகள்' (பெண்களும்தான்) 'நைஸாக' அமுக்கிக்கொண்டு போய்விடுவார்கள். தாங்கள் போய்ச் சேரவேண்டிய இடம் வந்ததும் சைக்கிளை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு தங்கள் பாட்டுக்குப் போய்விடுவார்களாம்! பிறகு சைக்கிள் உரிமையாளர் அங்கும் இங்கும் அலைந்து தேடினால், எங்காவது அநாதரவாகக் கிடக்குமாம் அவரது சைக்கிள்!

### ஜப்பானிலும் 'பெற்றா'!

கொழும்பு புறக்கோட்டை (பெற்றா) கடைத்தொகுதியிலுள்ள சிறிய கடைகள் சிலவற்றில் ''எதை எடுத்தாலும் நூறு ரூபா'' என்று கூவிக்கொண்டிருப்பார்களே, நினைவிருக்கிறதா...?

நம்மூர் நடைபாதை வியாபாரிகள் சிலரும், நடமாடும் வியாபாரிகளும் கூட 'பெற்றா பாணியில்' எந்தப் பொருளை எடுத்தாலும் ஒரே விலை என்று கத்துவார்களல்லவா..! அதுபோல ஜப்பானிலும் 'எதை எடுத்தாலும் ஒரே விலை' கடைகள் இருக்கின்றன. இந்த வகையான கடைகளை 'நூறு யென் கடைகள்'(One Hundred Yen Shops) என்று அழைக்கிறார்கள். ஜப்பான் நாட்டு நாணயத்தின் பெயர் யென்(Yen) தலைநகர் டோக்கியோ உட்பட எல்லா நகரங்களிலும் இந்த வகைக் கடைகள் உள்ளன. அங்குள்ள எல்லாப் பொருள்களின் விலையும் 100 'யென்'தான்(நம்நாட்டு மதிப்பில் 130 ரூபா)ஆனால் அவை 'பெற்றா' பெட்டிக்கடைகள் போலவோ, நடைபாதைக் கடைகள் போலவோ சிறியவை அல்ல. ஒவ்வொரு கடையும் ஒரு குட்டி 'சுப்பர் மாக்கற்' போல இருக்கும். உள்ளே போனால் பெரும்பாலும் எல்லா வகையான பொருள்களும் இருக்கும்.(தரமான பொருள்கள்).

### மழை வருமா?

ஜப்பானில் நாங்கள் தங்கியிருந்த 7நாட்களும், ஜப்பானியப் பெண்ணான ஒகா, காலை முதல் மாலை வரை எங்களுடனேயே இருந்து, எங்களுடைய நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றபடி ஒவ்வொரு இடங்களுக்கும் அழைத்துச் சென்றார்; எங்களுக்குத் தேவையான அத்தனை வசதிகளையும் செய்துகொடுக்கும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஒருநாள் மாலையில் அந்தப் பெண் எங்களிடம் சொன்னார், ''இன்று இருப்பதைவிட நாளை குளிர் கொஞ்சம் அதிகமாக இருக்கப்போகிறது. எனவே நீங்கள், நாளை காலையில் புறப்படும்போது குளிரைத் தாங்கக்கூடிய உடைகளை அணியுங்கள். நாளை மறுதினம் இங்கு மழை பெய்யும். அன்றைய தினம் உங்களுக்குத் தேவையான குடைகளை ஹோட்டலில் 'ஓடர்' செய்திருக்கிறேன்.'' என்றார்.

''என்ன...., நாளை மறுதினம் மழை பெய்யுமா? அது எப்படி இன்றைக்கே உங்களுக்கு உறுதியாகத் தெரியும்...? '' என்று கேட்டோம்.

''டோக்கியோ நகரில் நாளை மறுதினம் மழைவரப் போகிறது என்று எங்களுடைய வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்திருக்கிறது. அது ஒருபோதும் பிழைக்காது. மழை வந்தே தீரும்'' என்று அடித்துக் கூறினார் அந்த ஜப்பானியப் பெண். அவர் சொன்னதுபோலவே அன்றைய தினம் காலையில் மழை பெய்தது! எங்கள் நாட்டில் கூறப்படும் வானிலை அறிக்கைபோல, 'மழை பெய்யக்கூடும்''வெய்யில் எறிக்கக்கூடும்' என்றெல்லாம் அங்கு 'பட்டும் படாமலும்' சொல்லப்படுவதில்லை.(இங்கு மழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டால் கடைசிவரைக்கும் மழை பெய்யவே பெய்யாது என்பது வேறு விடயம்!)'மழை பெய்யும்' 'பனி பொழியும்' என்று அறுதியிட்டுக் கூறிவிடு கிறார்கள். கூறப்பட்டபடியே தவறாமல் மழை பெய்யும்.

மழைக்குக் குடை பிடிப்பதுபோல, கடும் குளிரைச் சமாளிப்பதற்கும் ஜப்பானியர்களிடம் ஒரு 'ரெக்னிக்' இருக்கிறது. சிறிய குருணல் மண் போன்ற ஒரு பொருள் சிறு சிறு 'பக்கற்றுகளில்' அடைக்கப்பட்டு கடைகளில் விற்பனையாகிறது. கியோடோ(Kyoto) என்ற இடத்தில் ஒருநாள் நாங்கள் நின்றிருந்தபோது கடுமையான குளிர் அடித்தது.குளிர் தாங்கும் உடைகளை அணிந்திருந்த போதும் கூடக் கைகால்கள் நடுங்கின. விரல் நகங்களுக்கிடையில் குண்டூசியால் குத்துவது போன்ற உணர்வு ஏற்பட்டது. அப்போது எங்கள் ஒவ்வொருவருக்கும் அந்தப் 'பக்கற்றுகளில்' ஒவ்வொன்றைத் தந்து'ஜீன்ஸ்' பொக்கற்றுக்குள் வைக்கச் சொன்னார்கள். சிறிது நேரத்தில் அந்தப் பக்கற்றிலிருந்து 'சூடு' கிளம்பியது. அந்தச் சூடு மெல்ல மெல்ல உடம்பெங்கும் பரவியது. குளிர் தெரியவேயில்லை.



ஜப்பானிய அரசின் நேரடி அபிவிருத்தித் திட்டங்களை இலங்கையில் நடைமுறைப்படுத்தும் ஜெய்க்கா (JICA) அமைப்பின் சிரேஷ்ட ஆலோசகருடன் கவாகிற்றா ஹிறோவுமி (Kawakita Hirofumi) இலங்கைக் குழுவினர்.

அட....குளிரைச் சமாளிப்பதற்கு இப்படி ஒரு 'ரெக்னிக்' இருக்கிறதா என்று எல்லோரும் வியந்துகொண்டோம்.

### நன்றி! நன்றி!! நன்றி!!!

ஜப்பானியர்கள் நேரத்தை எவ்வளவு தூரம் மதிக்கிறார்கள் என்பதைப்பற்றி முன்னர் இந்தத் தொடரில் எழுதியிருந்தேனல்லவா? அதுபோல, ஜப்பான் மக்களிடம் காணக்கூடிய மற்றொரு பண்பு பணிவு. சிறியவர்கள் பெரியவர்கள் என்ற வித்தியாசம் எதுவுமே பார்க்காமல் ஒருவருக்கொருவர் சந்தித்துக் கொள்ளும்போது எதிரெதிரே நின்று இருவரும் தலையைக் குனிந்து வணக்கம் சொல்கிறார்கள். ('ஒஹாயோ'என்ற ஜப்பானியச் சொல் வணக்கத்தைக் குறிக்கிறது.) சந்தித்து விட்டுத் திரும்பும்போதும் அதேமாதிரியே தலை சாய்த்து நன்றி சொல்கிறார்கள். (ஜப்பனிய மொழியில் 'அடிஹாத்தோ' என்பது நன்றி) கடைக்குப் போய் ஏதாவது வாங்கினால் நன்றி சொல்கிறார்கள்., அட ....ஒன்றுமே வாங்காமல் திரும்பி வந்தால்கூட அதற்கும் நன்றி சொல்கிறார்கள். வாகனத்தில் நாங்கள் ஏறினால் எங்களைத் திரும்பிப் பார்த்து நன்றி சொல்கிறார் சாரதி. வாகனத்தை விட்டுக் கிழே இறங்கும் போதும், தானும் இறங்கிவந்து நன்றி என்கிறார்.

வீதியில், கடைகளில், ஹோட்டலில் எங்கு போனாலும் 'ஒஹாயோ', 'அடிஹாத்தோ' ஆகிய வார்த்தைகள் நாலாபுறமும் கேட்டுக்கொண்டே இருக்கும்.

இந்த நடைமுறை குடும்ப உறுப்பினர்களுக்கிடையேயும் இருக்கிறது. கணவன், மனைவி, பிள்ளைகள் எல்லோருமே வீட்டில் சாதாரணமாக உரையாடும் போது கூட ஒவ்வொரு உரையாடலும் முடியும் போது தலையைக் குனிந்து ஒருவருக்கொருவர் நன்றி சொல்கிறார்கள். எனது கணிப்பின் படி சராசரியாக ஒவ்வொரு ஜப்பானியப் பிரஜையும் தினசரி ஆகக் குறைந்தது 300 தடவைகளாவது 'அடிஹாத்தோ'(நன்றி)என்ற வார்த்தையைப் பிரயோகிக்கிறார்கள்.

ஜப்பானில் ஒருவார காலம் சுற்றுப்பயணம் செய்ததால் ஏற்பட்ட பழக்க தோஷத்தால் நானும் சொல்கிறேன். ''எனது பயணக் கட்டுரையின் ஒன்பது தொடர்களையும் வாசித்தவர்களுக்கு நன்றி; வாசிக்காதவர்களுக்கும் நன்றி.'' *(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி ரி.தபேந்திரராஜா, திருமதி மதிவதனி தவேந்திரராஜா ஆகியோர் அதிபர் நவநீதமணி, ஆசிரியர்கள், மாணவத் தலைவர்கள் ஆகியோர்களால் அழைத்துவரப்படுவதையும் மாணவர்களின் 'பாண்ட்' வாத்தியம் இடம்பெறுவதையும் (படங்கள்: கர்ணன்)


பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்க ஒரு தங்கமெடல் வழங்குங்கள்.
ரூபா 350 இல் இருந்து



S.S.யசோதரன் ஆர்ட்ஸ், 381u, K.K.S வீதி, யாழ்ப்பாணம். (வண்ணை சிவன் கோயில் அருகில்)


## அமைச்சருடனான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே 12

உதவி ஆசிரியர் சங்கத்தின் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சருடனான கலந்துரையாடலொன்று எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8மணிக்கு அமைச்சின் யாழ்.அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அமைச்சரைப் பாராட்டுதலும், மற்றும் உதவி ஆசிரியர்களுக்கான சம்பள உயர்வு, பதவி உள்ளீர்ப்பு, ஆசிரியர் பயிற்சி தொடர்பாகக் கலந்துரையாடல் என்பன இடம்பெறவுள்ளதால் சகல பிரிவு உதவி ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு உதவி ஆசிரியர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

(50-16)


# MBBS/MD

**Lugansk State Medical University**
**UKRAINE - EAST EUROPE**
Recognized by **SRI LANKA MEDICAL COUNCIL**
**With A/Ls** 6 years
Minimum : 2C + 1S in Biology, Chemistry and Physics
எமது நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்ட கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, நுவரேலியா, மாத்தளை, மாணவர்கள் தற்பொழுது Ukraineல் கல்வி கற்கின்றனர்.
**www.lugmedi.com**
யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு:
Tel: (தமிழில்): 0777 767818/ 0779004194
**Scholars Information Center (SIC)**
இல.734, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கு பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், மே.12

தென்மராட்சி பிரதேச மத்தியஸ்தர் சபை தவிசாளர், துணைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று புதன்கிழமை யாழ்.கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைக் கட்டியெழுப்புவதற்கான செயற்றிட்டப் பிரிவினால் பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச மத்தியஸ்தர் சபைகளின் தவிசாளர், துணைத் தவிசாளர், பிரதேச செயலர் உட்பட திணைக்களத் தலைவர்களுக்கான பயிற்சி வகுப்பு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

(ஒ-207)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 06.06.1951



உதிர்வு: 17.05.2004

# சின்னப்பிள்ளை சிவலிங்கம்

எங்கள் குடும்பத்தின் பாசமலராய்
எங்கள் குடும்பத்தின் அணையா விளக்காய்
எம்மைப் பாசமுடனும் நேசமுடனும் வளர்த்து
எமக்கு நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே!
எங்கள் ஆருயிர்த் தந்தையே!
உம்மைப் பிரிந்து வாடி நிற்கின்றோம்.

"லிங்கஸ்தான்", கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

(சி/567514)

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 07.09.1967
இறைவன் அடியில்: 12.05.2009



# பொன்னையா இராஜசிங்கம் (ரவி)

பார் போற்றும் வண்ணம்
வாழ்ந்து உறவுகள் மீது
நிறைவான மனதுடன் அன்புகொண்டு
நேர்மையுடன் வாழ்ந்தீர்கள்
என்றும் உங்கள் நினைவுகள்
நீங்காது நிலைத்திருக்கும்.....

பொன்மகால், மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.

(98024)

குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 27.10.1993

காலன் பிடியில்: 12.05.2009

திதி: திருதியை 01.05.2010

# செல்வி ஆராதனா லவசுதன்

எம் அன்புச் செல்வமே தவா!
உன் மீது பாசமழை பொழிந்தோமே
நீ எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உனது நினைவு எம்மை விட்டுப் பிரியாது
உன் பிரிவால் வாடுகின்றோம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உம் நினைவுகள் அழியாது
உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அலவாய் மேற்கு, அல்வாய், திக்கம்.

(92235/5490)

அம்மையா, அம்மம்மா, அன்ரா,
சித்தப்பா அச்சு, சரன் மணியம் குடும்பம்,
முத்தமாமா குடும்பம், அரசு மாமா குடும்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரின் ஒழுக்கம், பாதுகாப்பில் அதிகூடிய கவனம் செலுத்தப்படும்

## ஹற்றன் பொலிஸார் தெரிவிப்பு

கண்டி, மே 12

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் மாலை ஆறு மணிக்குப் பின்னர் பிரத்தியேக வகுப்புகளை நடத்த வேண்டாமெனவும், பாடசாலை விட்ட வுடன் மாணவர்கள் வெளியில் சுற்றித் திரியாமல் தத்தமது வீடுகளுக்குச் செல்வ தில் அக்கறை செலுத்த வேண்டுமெனவும் ஹற்றன் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

ஹற்றன் பிரதேச பாடசாலை ஒன்றின் மாணவர்கள் மூவர் கடந்த வாரம் பிரத்தி யேக வகுப்பொன்றுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த போது அவர்களை வான் ஒன்றில் வந்தவர்கள் கடத்திச்சென்று தாக் கியதன் பின்பு விடுவித்தச்சம்பவம் ஹற்றன் பிரதேச மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது.

அதனைத் தொடர்ந்து இந்தச்சம்பவம் தொடர்பாக அமைச்சர் ஆறுமுகன் தொண்ட மான் ஹற்றன் பொலிஸ் உயரதிகாரிகள் மற் றும் பாடசாலைகளின் அதிபர்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது பிரத்தியேக வகுப்புக ளுக்குச் சென்று வருகின்ற மாணவர்களே குறிப்பிட்ட நேரங்களில் தத்தமது வீடுக ளுக்குச் செல்வதில்லை என்பதை பாட சாலை அதிபர்கள் அமைச்சரின் கவனத்திற் குக் கொண்டு வந்தனர்.

இதன்பின்பு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் ஹற்றன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிறுவன கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கழமை விசேட கூட்டமொன்று இடம்பெற்றது.

இந்தக்கூட்டத்தில் ஹற்றன் பொலிஸ் அதிகாரிகளும், பிரத்தியேக வகுப்பு ஆசிரி யர்களும், பாடசாலை அதிபர்களும் கலந்து கொண்டனர்.

இந்தக்கூட்டத்தின் போது,

மாலை ஆறு மணிக்குப் பின்னர் பிரத் தியேக வகுப்புகளை நடத்தக்கூடாது. பிரத்தியேக வகுப்புகளுக்கு வருகின்ற மாணவர்கள் குறித்து ஆசிரியர்கள் கவ னம் செலுத்த வேண்டும். பிரத்தியேக வகுப் புகள் நடத்துகின்றவர்கள் தமது விவரங்க ளைப் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்க வேண்டும். பாடசாலைகளுக்குச் செல்கின்ற தமது பிள்ளைகள் குறித்து பெற்றோர் கூடிய கவனம் செலுத்த வேண்டும். பாடசாலை விட்ட பின்னர் நகரப்பகுதிகளில் மாண வர்கள் காரணமின்றிச் சுற்றித்திரியக்கூடாது என அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, பாடசாலை நாள்களில் மாணவர்களின் நலன்கருதி அதிகாலை 5 மணி முதல் காலை 8 மணிவரையும் பிற் பகல் 2 மணி முதல் பிற்பகல் 6 மணிவரை யும் ஹற்றன் நகரில் பொலிஸாரின் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளும் இடம்பெற வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், பாடசாலை நேரங்களில் ஹற்றன் பஸ் டிப்போவினால் உரிய பஸ் சேவைகளை நடத்துமாறும் தனியார் பஸ்களில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்வதற்கு முன்னுரிமை வழங்குமாறும் அங்கு மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ளி)

# வெலிமடை மாணவருக்கு இலவச மூக்குக் கண்ணாடி

பதுளை, மே 12

வெலிமடை கல்வி வலயத்திற்குட் பட்ட தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களப் பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர் கள் நலன் கருதி பல்வேறு வேலைத்திட் டங்களை கல்விப் பணிமனை மேற்கொண்டு வருகின்றது.

இதனடிப்படையில் இக்கல்வி வல யத்திற்குட்பட்ட 10 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவச மூக்கு கண்ணாடிகளை வலயக்கல்விப் பணிப் பாளர் ஆர். எம். ஜயசேகர வழங்கி வைத் தார்.

குருத்தலாவை முஸ்லிம் தேசியக் கல் லூரியின் அதிபர் ஜனஸ். ஏ.ஏ. சமூன் தலைமையில் விசேட கல்விப் பிரிவின் பொறுப்பாசிரியர் ஜனாபா, எம். ஐ. காலிஹா பேகம் வழிநடத்தல் இடம்பெற்ற இவ்வைபவத்தில்,

குருத்தலாவை மு.ம.ம. வித்தியால யம், ப/போகஹகும்புர முஸ்லிம் வித்தி யாலயம், ப/ வெலிமடை ம.ம. வித்தியால யம், ஹொரதரவ்வ ம.வித்தியாலயம், கந்துறுதெக முஸ்லிம் வித்தியாலயம், வங்கியகும்புற ம.ம. வித்தியாலயம், ப/ கம்பெத்த ம. வித்தியாலயம் போன்ற பத்து பாடசாலைகளில் கல்விபயிலும் பார்வை குறைந்த சுமார் 100 மாணவர்க ளுக்கு மேற்படி மூக்குக் கண்ணாடிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும். (ளி)

# ஒரு சமூகத்தின் மொழியுரிமை மீறப்படும்போது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் வசதிவேண்டும்

பதுளை, மே 12

''மொழியுரிமை என்பது பிரஜையொரு வர் தான் சார்ந்த சமூகத்தினால் பேசப் படும் மொழிமூலம் அரசதுறை சார்ந்தவர் களிடம் தொடர்புகொள்ளும் உரிமையாகும். இவ்வுரிமைக்கு மதிப்பளிக்கும் வகையில் அரசதுறையினர் நடவடிக்கைகளை முன் னெடுக்கவேண்டும். இது உதாசீனப்படுத் தப்படும்போது பாதிக்கப்பட்ட பிரஜை யால் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள் ளக்கூடியதான வசதிகள் இருக்கவேண் டும்.''

- இவ்வாறு சகஜீவன மன்ற இணைப் பாளர் எம்.முத்துக்குமார் பசறை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன் றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வரு மாறு:-

எமது நாட்டில் தமிழ், சிங்களம் ஆகி யவை அரசகரும மொழிகளாகும். எனி னும், இவைகளில் ஒன்றில் - சிங்களத்தில் மட்டும் அரசதுறைகளால் விடுக்கப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் நிராகரிக்கப்படல் வேண்டும். அதே வேளை, இதனை நிவர்த்திசெய்வதற்கு சிங்கள, தமிழ் மொழி பெயர்ப்பாளர்கள் காலம் தாழ்த்தாது நியமிக்கப்படல் வேண்டும்.

இந்த இரு அரசகரும மொழிகளுடன் ஆங்கில மொழி உள்ளடக்கப்படுவது, அவசியமாகும். பாடசாலைகளில் முன் னெடுக்கப்படும் மேற்படி நடைமுறை போன்று பல்கலைக்கழகங்கள், கல்வியி யல் கல்லூரிகளில் தனிப் பிரிவுகள் நிறுவப் படவேண்டும்.

அரசதுறைசார் நிறுவனங்களில் சேவை யாற்றும் அனைவரும் மொழிகளில் பூரண தேர்ச்சி பெறும் வரை எத்தகைய சம்பள உயர் வுகளும், பதவி உயர்வுகளும் வழங்கப்படக் கூடாது.

மொழி உரிமைகள் மீறப்படுவதென் பது அரச நிறுவனங்களால் முன்னெடுக்கப் படும் துணைச்சட்டங்கள், ஒழுங்குவிதிகள், ஒரு தேசிய மொழியில் மட்டும் வெளியி டுதல், மொழி பெயர்ப்பாளர்களை நியமிக் காதிருத்தல், அரச நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் ஒரு மொழியில் மட்டுமே இருத் தல் போன்ற இன்னோரன்ன விடயங்கள் அமைந்துள்ளன.

மொழி உரிமை தொடர்பான பாரபட் சங்களை அடுத்துவரும் சந்ததியினருக்கு விட்டு வைக்கக்கூடாது. ஆரம்பம் முதல் தமிழர்களே இம்மொழி உரிமை மீறலில் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கி வந்துள் ளனர்-என்றார். (ளி)




# பொலிஸ் 'வோக்கிடோக்கி' பண்டாரவளையில் மாயம்

கண்டி, மே 12

விசேட தேர்தல் பணிகளுக்காக பண் டா வளைக்கு கொண்டுசெல்லப்பட்ட ஐம்பது தகவல் பரிமாற்றக்கருவிகளில் ('வோக்கி டோக்கி') ஒன்றைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் பற்றி பூர்வாங்க விசார ணை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸ் தலைமையகத்தின் உயரதிகாரி யொருவர் தெரிவித்தார்.

கொண்டு செல்லப்பட்ட ஐம்பது கருவி களும் பண்டாரவளை பொலிஸ் நிலை யத்தில் பணிபுரியும் இன்ஸ்பெக்டர் ஒரு வரால் மிரிஹான பொலிஸ் தகவல் தொலைத் தொடர்பு நிலையத்திடம் மீண்டும் கையளிக் கப்பட்டது என்றும், அவை எண்ணப்பட்ட போது ஒன்று குறைவாக இருந்தது என்றும் தெரிவிக்கப்படுகி றது.

இக்கருவிகளை மீள ஒப்படைத்த இன்ஸ் பெக்டர் உட்பட பல பொலிஸாரிடம் விசார ணைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் இது வரை தொலைந்துபோன கருவியைப் பற்றிய தகவல் கிடைக்கவில்லையென பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கிறது.

பண்டாரவளை வலயத்துக்குப் பொறுப் பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வையில் விசாரணைகள் நடை பெற்று வருகின்றன. (ளி)

# பண்டாரவளையில் கட்டடத்திறப்பு

கொழும்பு, மே 12

பண்டாரவளை இந்து இளைஞர் மன்றத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட தனி யான கட்டடமும், அறநெறிப் பாடசாலை யும் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை திறக்கப்படவுள்ளது என அதன் தலைவர் ஏ.கணேஸ் தெரிவித்தார்.

பண்டாரவளை சீவலி மாவத்தையில் 40 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப் பட்ட இக் கட்டடத்தை மூன்று மாடிகள் வரை நிர்மானிக்க ஏற்பாடுகள் நடை பெற்றுவரும் அதேவேளை, அடித்தளத் தில் அறநெறிப் பாடசாலையும் இயங்க வுள்ளது.

இதுவரை பண்டாரவளை ஸ்ரீ சுப்பிர மணி சுவாமி கோயிலில் இயங்கிய இப் பாடசாலை இந்து இளைஞர் மன்றத்தின ரின் அயராத முயற்சியால் இக்கட்டடத் தில் இயங்கவுள்ளது.

திறப்பு விழாவில் பண்டாரவளை தொகுதி அமைப்பாளரும், பதுளை மாவட்ட உறுப்பினருமான டாக்டர் ரோஹண புஸ் பகுமார, நகரசபை முதல்வர் நளின் பியந்த சூரியகே, ஸ்ரீ சுப்பிரமணி சுவாமி தேவஸ் தான அறங்காவலர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொள் ளவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித் தார். (ளி)

# ஊவா விஞ்ஞானக் கல்லூரி மாணவர் சாதாரண பரீட்சையில் சிறப்புச் சித்தி

பதுளை, மே 12

பதுளை கல்வி வலயத்துக்குட்பட்ட ஹாலிஎல ஊவா விஞ்ஞானக் கல்லூரி யில் இருந்து ஜி.சீ.ஈ. சாதாரண தரம்- 2009 பரீட்சைக்குத் தோற்றிய தொண் ணூற்றி இரண்டு மாணவர்களும் சிறப்புச் சித்திபெற்று உயர்தரத்துக்குத் தகுதி பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின் றது.

இவர்களில் நான்கு மாணவர்கள் ஒன் பது பாடங்களிலும் 'ஏ'தரச் சித்திபெற்றுள் ளனர்.

அதிபர் சேனக பீரிஸ், பிரதி அதிபர் ஆர். எஸ். இராஜேந்திரன் மற்றும் ஆசிரி யர்களின் அயராத முயற்சியால் இந்தப் பெறுபேறுகளைப் பெறமுடிந்தது என மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கல்லூரியில் அனைத்து இன, மத, மொழி மாணவர்களும் ஒன்றாகக் கல்வி கற்று வருகின்றமை ஊவா மாகாணத்தில் சிறப்பம்சமாகும்.

கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இதுவரையும் ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட் சைக்குத் தோற்றிய சகல மாணவர்களும் சித்திபெற்றுள்ளார்கள் எனக் கல்லூரி அதிபர் சேனக பீரிஸ் தெரிவித்தார்.

கடந்த முறை பரீட்சைப் பெறுபேறுக ளுடன் ஒப்பிட்டுபார்க்கும் போது தமிழ் மொழியில் 24 மாணவர்களும், சிங்கள மொழி யில்46 மாணவர்களும், ஆங்கிலமொழி யில் 22 மாணவர்களுமாக மொத்தமாக 92 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி இருந்தனர். (ளி)

# கட்டுகஸ் தோட்டை பகுதி தூசியால் பொதுமக்களுக்குப் பெரும் பாதிப்பாம்

கொழும்பு, மே. 12

வாகன நெரிசலைக் குறைப்பதற் காகப் பாதையின் இருமருங்குகளிலும் உள்ள மண் வெட்டப்பட்டுள்ளது. இத னால் பகல் நேரங்களில் ஏற்படும் அடர்த் தியான தூசிகளால் பிரதேசவாசிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரியவருகின்றது.

பல மாதங்களுக்கு முன்பு அகலப் படுத்தப்பட்ட இந்தப் பாதை இன்னும் சரியாக நிர்மாணம் செய்யப்படாததால் இந்நிலை தோன்றியுள்ளது என அவர்கள் தெரிவித்தனர்.

இத்தூசிகளால் பிரதேசவாசிகளில் ஏராளமானோர் சுவாச சம்பந்தமான நோய் களுக்குள்ளாகியுள்ளனர் எனவும் தெரிவிக் கப்படுகின்றது. (ளி)

## கட்டுகஸ் தோட்டை பாடசாலைகளில் வீட்டுத் தோட்டப்பயிர்ச் செய்கை

வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை வேலைத்திட்டத்தை கட்டுகஸ்தோட்ட கல்வி வலயத்தைச் சேர்ந்த 128 பாடசா லைகளில் அமுல்படுத்துவதற்கு தேவை யான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரு கின்றன. இந்த அபிவிருத்தி வேலைத்திட் டம் பூஜாபிட்டிய, கல்கெதர, அக்குறணை, ஹதரலியந்த, ஹரிஸ்த்துவ ஆகிய கல்விப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் செயற் படுத்தப்படும் - எனவும் கூறப்படுகிறது. (ளி)

## மகாவலி கங்கையில் கழிவு நீர் கலப்பு

அம்பகமுவ பிரதேச சபை நிர்வாகத்தின் கீழ் இயங்கும் கினிகத்ஹேன நகர வர்த்தக நிலையங்கள் மற்றும் ஹோட்டல்களிலிருந் தும் கழிவறைகளிலிருந்தும் வெளியாக்கப் படும் கழிவு நீர், மகாவலி கங்கையுடன் கலக் கப்படுவதால் பல்வேறு சுழல் பிரச்சினைகள் எழ வாய்ப்புண்டு என்று சூழல் தொடர்பு டைய தாபனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இப்பிரதேசத்தின் சுகாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய கழிவு நீரை திறந்த வெளி யில் கலந்துவிடுவதால் சுகாதார சீர்கேடுகள் ஏற்படலாமென அஞ்சப்படுகின்றது. இது தொடர் பாக இப்பகுதி மக்கள் அம்பகமுவ பிரதேச சபையிடம் முறைப்பாடு செய்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. ஹோட்டல்கள் மற் றும் வர்த்தக நிலையங்களிலிருந்து கழிவறை நீர் இவ்வாறு திறந்த வெளியில் விடுவதால் நகரமெங்கும் துர்நாற்றம் வீசுகின்றது என இப்பகுதி வாழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அம்பேகமுவ பிரதேசசபை பொது சுகாதா ரப் பரிசோதகர் இவ்விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் வேண்டு கோள்விடுக் கின்றனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை - ஓகஸ்ட், 2010.
General Certificate of Education (Advance Level) Model Examination - August, 2010.

# பௌதிகவியல்: பொறியியல்

26. $40kgms^{-1}$ உந்தத்தையுடைய ஒரு திணிவு இயக்கத்திசையில் 20Ns கணத்தாக்கத்தைப் பெறுகிறது. திணிவின் இறுதி உந்தம்,
1) $40kgms^{-1}$ 2) $20kgms^{-1}$ 3) $60kgms^{-1}$
4) $800kgms^{-1}$ 5) $2kgms^{-1}$


27. 8kg திணிவுடைய துணிக்கை நேர்கோட்டுப்பாதை ஒன்றில் $2ms^{-1}$ மாறாக்கதியுடன் இயங்குகிறது. ஒருநிலையில் அது இரு சமபகுதிகளாகப் பிளக்கிறது. உள்வெடிப்பின்போது 16J இயக்க சக்தி வெளிவிடப்படுகிறது. எந்தத்துண்டும் ஆரம்பப்பாதையை விட்டு விலகவில்லை. பின்வரும் கூற்றுக்களில் சரியானது,
1) வெடிப்பின்பின் இரு பகுதிகளும் ஆரம்பத்திசையில் இயங்கும்.
2) ஒரு துண்டு ஓய்விற்கு வரும். மற்றையது ஆரம்பத்திசையில் இயங்கும்.
3) ஒரு துண்டு ஓய்விற்கு வரும். மற்றையது ஆரம்பத்திசைக்கு எதிர்த்திசையில் இயங்கும்.
4) ஒரு துண்டு ஆரம்பத்திசையிலும் மற்றையது எதிர்த்திசையிலும் இயங்கும்.
5) இரு துண்டுகளும் ஓய்விற்கு வந்துவிடும்.

28. ஒரு புள்ளியிலிருந்து ஒரே கதியுடன் வெவ்வேறு கோணங்களில் எறியப்பட்ட இரு துணிக்கைகள் ஒரே கிடைவீச்சு R ஐ உடையன. $h_1, h_2$ என்பன அவை அடைந்த அதியுயர் உயரங்களாகும். பின்வருவனவற்றுள் எது சரியானது,
1) $R = h_1 h_2$ 2) $R = \sqrt{h_1 h_2}$ 3) $R = 4\sqrt{h_1 h_2}$
4) $R = 2\sqrt{h_1 h_2}$ 5) $R = h_1 + h_2/2$

29. மாறாக்கதி V உடன் நேர்கோட்டில் இயங்கும் M திணிவுள்ள ஒருபொருள் இரு துண்டுகளாகப் பிளக்கிறது. m திணிவுள்ள ஒரு பகுதி ஓய்விற்கு வருகிறது. மற்றைய பகுதியின் வேகம்,
1) MV / m 2) mV / M-m 3) MV / M+m
4) MV / M-m 5) (M+m)V / M


30. பொருள் ஒன்றின் இயக்கசக்தி 300% இனால் அதிகரிக்கும்போது அப்பொருளின் கதியில் ஏற்படும் நூற்றுவீத அதிகரிப்பு,
1) 50% 2) 75% 3) 100%
4) 150% 5) 360%

31. ஒரு பொருளில் தாக்கும் விசை F ஆனது நேரம் t உடன் மாறுவதை அருகிலுள்ள வரைபு காட்டுகிறது. முதல் 8s நேர இடைவெளியில் அப்பொருளின் உந்தமாற்றம்,




1) 60Ns
2) 40Ns
3) 20Ns
4) 16Ns
5) 12Ns

32. u வேகத்துடன் கிடையாகச் சுடப்படும் m திணிவுடைய ஒரு சன்னம் இழை ஒன்றிலிருந்து தொங்கவிடப்பட்டுள்ளது. M திணிவுடைய மரக்குற்றி ஒன்றினுள் புதைகிறது. குற்றியும் குண்டும் சேர்ந்து h நிலைக்குத்து உயரத்திற்கு எழுகின்றது. u இனது பெறுமதி,




1) $\sqrt{2gh}$ 2) $(M+m)\sqrt{2gh} / m$ 3) $m\sqrt{2gh} / M+m$
4) $(M-m)\sqrt{2gh} / m$ 5) $(M-m)\sqrt{2gh} / (M+m)$


33. ஆரம்பத்தில் ஓய்வில் உள்ள பொருள் ஒன்று m, 3m திணிவுடைய இரு பகுதிகளாக வெடித்துப் பிளக்கிறது. அப்போது பெறப்பட்ட மொத்த இயக்கசக்தி E ஆகும். வெடிப்பினால் m பெற்ற இயக்கசக்தி,
1) 3E/4 2) 2E/3 3) E/3
4) E/4 5) E/6

34. நிலையான நீரில் $5kmh^{-1}$ என்ற கதியுடைய ஒரு வள்ளம் 1km அகலமுடைய ஆற்றை இயலுமான குறுகிய பாதையால் 15 நிமிடத்தில் கடக்கிறது. ஆற்றின் வேகம்,
1) $1kmh^{-1}$ 2) $3kmh^{-1}$ 3) $4kmh^{-1}$
4) $\sqrt{41}\ kmh^{-1}$ 5) $5kmh^{-1}$

35. பீரங்கி ஒன்றிலிருந்து கிடையுடன் θ கோணத்தில் ஒரு ஷெல் (Shell) V வேகத்துடன் சுடப்படுகிறது. அது அதன் பாதையின் அதியுயர் புள்ளியில் இரு சமபகுதிகளாகப் பிளக்கிறது. அதில் ஒருபகுதி வந்தபாதை வழியே திரும்பி பீரங்கியை அடைகிறது. வெடித்த உடன் மற்றப்பகுதியின் வேகம்,
1) $3V\cos\theta$ 2) $2V\cos\theta$ 3) $3/ 2V\cos\theta$
4) $\sqrt{3} / 2V\cos\theta$ 5) $5V\cos\theta$

36. 6kg திணிவுடைய ஒரு பொருளின் உந்தம் 3Ns. அப்பொருளின் இயக்கசக்தி,
1) 0.25J 2) 0.75J 3) 1.5J
4) 9J 5) 27J

37. m திணிவுடைய விளையாட்டுக் கார் ஒன்று புள்ளி P ஐ V கதியுடன் கடந்து ஒப்பமான வளைவான பாதை ஒன்றில் h நிலைக்குத்து உயரத்திற்கு எழுகிறது. 2m திணிவுடைய வேறொரு விளையாட்டுக்கார் புள்ளி P ஐ V/2 கதியுடன் கடந்து அதே வளைவான பாதையில் ஏறினால், அது ஏறும் அதியுயர் உயரம்,




1) h/4 2) 5h/4
3) 3h/2 4) 2h 5) 4h

38. 10kg திணிவுடைய ஓய்வில் உள்ள பொருள் ஒன்றின்மீது ஒரு விசை பிரயோகிக்கப்படும்போது அப்பொருள் 4m தூரத்தில் $20ms^{-1}$ கதியைப் பெறுகிறது. அப்பொருளில் தாக்கிய சமப்படுத்தப்படாத விசை,
1) 1000N 2) 500N 3) 400N
4) 200N 5) 100N

## SPECIAL GUIDE FOR 2010 A/L MATHS, SCIENCE STUDENTS


39. P, Q என்னும் இரு பொருட்கள் ஒரே புள்ளியிலிருந்து ஓய்விலிருந்து ஆரம்பித்து சீரான ஆர்முடுகலுடன் இயங்குகின்றன. 1s இன் பின்னர் P ஆனது Q இன் முன்னால் 0.5m இல் உள்ளது. 2s இன் பின்னர் P இனது தூரம் Q இலிருந்து,
1) 0.5m 2) 1.5m 3) 2m
4) 2.5m 5) 4.0m

40. நிலைக்குத்தாக மேல்நோக்கி எறியப்படும் ஒரு பந்து X எறிபவரைத் திரும்பி வந்தடைய 4s எடுக்கிறது. X எறியப்பட்டு 1s இன் பின்னர் Y என்னும் வேறொரு பந்து நிலைக்குத்தாக மேல்நோக்கி அதேவேகத்துடன் எறியப்படுகிறது. X ஆனது எறிபவரை வந்தடையும் கணத்தில் Y இன் உயரத்தையும், வேகத்தையும் சரியாக வகைக்குறிப்பது எது?

| | உயரம் | வேகம் |
|---|---|---|
| 1) | 5m | $10m^{-1}$ ↑ |
| 2) | 5m | $10m^{-1}$ ↓ |
| 3) | 10m | $10m^{-1}$ ↑ |
| 4) | 15m | $10m^{-1}$ ↓ |
| 5) | 15m | $10m^{-1}$ ↑ |

41. 3kg திணிவுடைய குற்றி X ஆனது ஓய்விலிருந்து 5N விசையினால் 2s களுக்கு ஆர்முடுக்கப்படுகின்றது. சர்வசமனான வேறொரு குற்றி Y ஆனது ஓய்விலிருந்து 5N விசையினால் 4s களுக்கு ஆர்முடுக்கப்படுகிறது. ஆர்முடுகலின் பின்னர் X இனது இயக்கசக்திக்கும் Y இனது இயக்கசக்திக்கும் இடையிலுள்ள விகிதம்,
1) 5:3 2) 3:4 3) 2:1
4) 1:2 5) 1:4

42. 2kg, 4kg திணிவுகளை உடைய இரு துரொலிகள் ஒரே திசையில் $4ms^{-1}$, $1ms^{-1}$ கதிகளுடன் இயங்கி மோதி ஒன்றாக இணைகின்றன. இயக்கசக்தி இழப்பு,





1) 4J 2) 6J
3) 12J 4) 14J
5) 18J

43. வெடிக்கும் ஏற்றம் ஒன்று விண்வெளிக்கலத்தை அதன் செலுத்தியிலிருந்து பிரிக்கிறது. விண்வெளிக்கலத்தின் திணிவு- m, செலுத்தியின் திணிவு- 4m. செலுத்தி ஆரம்ப இயக்கத்துக்குச் சார்பாக $10ms^{-1}$ கதியுடன் இயங்குகிறது. ஆரம்ப இயக்கத்துக்குச் சார்பாக விண்வெளிக்கலத்தின் வேகம்,
1) $-2.5ms^{-1}$ 2) $-4ms^{-1}$ 3) $-10ms^{-1}$
4) $-20ms^{-1}$ 5) $-40ms^{-1}$

44. $30ms^{-1}$ கதியுடன் சென்றுகொண்டிருக்கும் கார் நிலையான லொறி ஒன்றுக்கு முன்னால் 50m இல் உள்ளபோது தடுப்பு விசைகளினால் அமர்முடுக்கப்படுகின்றது. அது மட்டுமட்டாக லொறியை அடையமுன் ஓய்வுக்கு வருகிறது. காரின் அமர்முடுகல்,
1) $0.6ms^{-2}$ 2) $4.5ms^{-2}$ 3) $9ms^{-2}$
4) $10ms^{-2}$ 5) $18ms^{-2}$

45. கார் செலுத்துநர் ஒருவரின் திணிவு 80kg. காரில் தடுப்புகளைப் பிரயோகிக்கும்போது அமர்முடுகல் $2.5ms^{-2}$. அமர்முடுகலின்போது காரினால் செலுத்துநரின் மீது கொடுக்கப்படும் விசை,
1) 200N 2) 600N 3) 825N
4) 1,000N 5) 1,200N

46. பொருள் ஒன்றின் மீது நேர்கோட்டில் பிரயோகிக்கப்படும் விசை நேரத்துடன் மாறுபடுவதை வரைபு காட்டுகிறது. 5 மில்லிசெக்கன் இடைவெளியின்போது விசையினால் ஏற்பட்ட உந்தமாற்றம்,




1) $8\times10^{-3}Ns$ 2) $10\times10^{-3}Ns$ 3) $15\times10^{-3}Ns$
4) $18\times10^{-3}Ns$ 5) $20\times10^{-3}Ns$


47. $h_1$ உயரத்திலிருந்து விழவிடப்படும் m திணிவுடைய ஒரு பந்து நிலத்தை அடித்து $h_2$ என்னும் உயரத்துக்கு எழுகின்றது. நிலத்தை அடிக்கும்போது பந்தில் ஏற்பட்ட உந்தமாற்றம்,
1) $m(h_1-h_2)$ 2) $m\sqrt{2(h_1-h_2)}$ 3) $m\sqrt{2g(h_1+h_2)}$
4) $m(2gh_1-\sqrt{2gh_2})$ 5) $m(\sqrt{2gh_1}+\sqrt{2gh_2})$

48. ஒப்பமான மேசையின்மேல் 0.4kg திணிவுடைய ஒரு கோளம் Pயும், 0.2kg திணிவுள்ள ஒரு கோளம் Qவும் இறப்பர் நாடா ஒன்றினால் இணைக்கப்பட்டு ஓர் இழுவையின் கீழ் வைக்கப்பட்டுள்ளன. இப்போது இவ்விரு கோலங்களும் ஒரே கணத்தில் விடுவிக்கப்படுகின்றன. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - Q இன் தொடக்க ஆர்முடுகல் P இனதின் இருமடங்கு ஆகும்.
B - இரண்டும் ஆரம்பத் தானங்களின் மத்தியில் உள்ள புள்ளியில் சந்திக்கும்.
C - விடப்பட்ட உடன் இரு கோளங்களிலும் இழையினால் கொடுக்கப்படும் இழுவை சமனாக இருக்கும்.
D - இரண்டும் சந்திக்கும்போது Q இன் வேகம் P இனதின் இருமடங்காக இருக்கும்.
இவற்றுள் உண்மையானவை,
1) A,B,C மட்டும். 2) A,C,D மட்டும். 3) B,C,D மட்டும்.
4) A,D மட்டும். 5) A,B,C,D ஆகிய எல்லாம்.

49. 500W மோட்டாரின் உதவியால் 100N நிறையுடைய பொருள் ஒன்று 4s இல் 10m உயரத்துக்கு உயர்த்தப்படுகின்றது. மோட்டாரின் திறன்,
1) 25% 2) 40% 3) 50%
4) 60% 5) 75%


50. துவிச்சக்கரவண்டியில் u வேகத்தோடு செல்லும் ஒருவன் S தூரத்தில் துவிச்சக்கரவண்டியை நிறுத்த முடிந்தது. துவிச்சக்கரவண்டியில் இன்னும் ஒருவனை ஏற்றின், அதன் முழுப்பாரம் 50% இனால் கூடும். அதேவேகத்துடன் செல்லும்போது எவ்வளவு தூரத்தில் துவிச்சக்கரவண்டியை நிறுத்தமுடியும்?
1) S 2) 1S 3) 1.5S
4) 2.25S 5) 2S

51. துணிக்கை ஒன்றின் இயக்கத்துக்கான வேக - நேர வரைபு அருகில் தரப்பட்டுள்ளது. இத்துணிக்கையினது இயக்கத்துக்கான ஆர்முடுகல்-நேர வரைபைத் திறம்பட வகைக்குறிப்பது பின்வருவனவற்றுள் எது?





(13 ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




52. ஓய்வில் உள்ள துணிக்கை ஒன்று உயரமான புள்ளியிலிருந்து விழவிடப்படுகின்றது. அதன் அழுத்தசக்தி x ஆல் குறையும்போது அதன் வேகம் V எனின், துணிக்கையின் திணிவு யாது?
1) $xV^2/g$ 2) $gx/V^2$ 3) $x/g$
4) $2x/V$ 5) $2x/V^2$

53. துணிக்கை ஒன்றின் இயக்கத்துக்கான வேக - நேர வரைபு அருகில் தரப்பட்டுள்ளது. பின்வருவன வற்றுள் எவ்வரைபு அத்துணிக்கையினது இயக்கத் துக்கான இடப்பெயர்ச்சி-நேர வரைபை வகைக் குறிக்கிறது?







54. நேர்கோட்டில் இயங்கும் துணிக்கை ஒன்றின் ஆர்முடுகலானது நேரத்துடன் மாறுபடுவதைத் திறம்பட வகைக்குறிக்கும் வரைபு அருகில் தரப்பட்டுள்ளது. வரைபுக்குக் கீழான (நிழற்றப் பட்ட) பரப்பு,





1) நேரம் $t_1$ இலிருந்து நேரம் $t_2$ வரை பிரயாணம் செய்த தூரத்தைத் தரும்.
2) கருதப்பட்ட நேர இடைவெளியில் துணிக்கையின் சராசரி ஆர்முடுகலைத் தரும்.
3) கருதப்பட்ட நேர இடைவெளியில் துணிக்கையின் சராசரி வேகத்தைத் தரும்.
4) கருதப்பட்ட நேர இடைவெளியில் துணிக்கையின் வேகமாற்றத்தைத் தரும்.
5) நேரம் $t_1$ இலிருந்து $t_2$ இற்கான இடைவெளியில் துணிக்கையின் அலகுத் திணிவுக்கான உந்தத்தைத் தரும்.


55. துணிக்கை ஒன்றின் இயக்கத்துக்கான வேக-நேர வரைபு அருகில் தரப்பட்டுள்ளது. இத் துணிக்கை யினது இயக்கத்துக்கான இடப்பெயர்ச்சி-நேர வரைபைத் திறம்பட வகைக்குறிப்பது பின்வருவன வற்றுள் எது?








56. துணிக்கை ஒன்றின் இயக்கத்துக்கான இடப்பெயர்ச்சி-நேர வரைபு தரப்பட்டுள்ளது. இத்துணிக்கையினது இயக்கத்துக் கான வேக-நேர வரைபு எது?



57. 10N அமர்முடுக்கும் விசை தாக்கும் பொருள் ஒரு கணத்தில் 6J இயக்கசக்தியை உடையது. அது ஓய்வுக்கு வருமுன் செல்லும் தூரம்,
1) 3/5m 2) 1 2/3m 3) 4m
4) 16m 5) 60m

58. ஒரு கார் கிடையான பாதை ஒன்றில் கிழக்கு நோக்கி மாறாக் கதியுடன் செல்கின்றது. அக் காரில் தாக்கும் சமப்படுத்தப்படாத விசை,
1) கிழக்கு நோக்கி இருக்கும். 2) மேற்கு நோக்கி இருக்கும்.
3) வடக்கு நோக்கி இருக்கும். 4) தெற்கு நோக்கி இருக்கும்.
5) பூச்சியம் ஆகும்.

59. m திணிவுடைய சர்வசமனான நான்கு இழுவைப் பெட்டிகள் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒப்பமான கிடையான பாதை ஒன்றில் ஓய்வில் உள்ளன. 2m திணிவுடைய 5ஆவது பெட்டி $5ms^{-1}$ வேகத்துடன் சென்று நிலையாக உள்ள நான்கு பெட்டிகளுடனும் மோதி இணைகிறது. மோதலின்பின் அவற்றின் பொதுவேகம்,
1) $5/6ms^{-1}$ 2) $1ms^{-1}$ 3) $5/4ms^{-1}$
4) $5/3ms^{-1}$ 5) $5/2ms^{-1}$

60. நிலத்தில் உள்ள புள்ளியிலிருந்து ஒரு துணிக்கை நிலைக்குத்துடன் சாய்ந்த திசையில் எறியப் படுகிறது. எறியற் புள்ளி P. ஒரு பரவளைவுப் பாதையில் இயங்குகிறது. அது அடைந்த அதி உயர் புள்ளி T. துணிக்கையின் ஆர்முடுகல்,
1) T இல் பூச்சியமாகும். 2) T இல் உயர்வாகும்.
3) P இல் உயர்வாகும். 4) P இலும், T இலும் சமனாக இருக்கும்.
5) ஒரு மாறாவேகத்தில் குறைவடையும்.


61. எஞ்சின் ஒன்று 5,000N தடைவிசைக்கு எதிராக $20ms^{-1}$ மாறாக் கதியுடன் வண்டியை இழுத்துச் செல்கிறது. எஞ்சினின் வலு,
1) 5kW 2) 10kW 3) 20kW
4) 50kW 5) 100kW

62. ஆரம்பத்தில் ஓய்வில் உள்ள ஒரு பொருள் இரு துண்டுகளாக வெடிக்கிறது. அவற்றின் திணிவுகள் முறையே 2m, 3m ஆகும். அவற்றின் மொத்த இயக்கசக்தி E ஆகும். 2m திணிவுள்ள பகுதி யின் இயக்கசக்தி,
1) E/5 2) E/3 3) 2E/5
4) 3E/5 5) 4E/5

63. 1,000kg திணிவுள்ள கார் ஒன்று ஓய்வில் இருந்து $20ms^{-1}$ சீரான வேகத்துக்கு 10s இல் ஆர்முடுகு கிறது. அந்நேர ஆயிடையில் விருத்தியாக்கப்பட்ட வலு,
1) 0.2kW 2) 4kW 3) 10kW
4) 15kW 5) 20kW


64. நிலையான நீரில் நிலையாக மிதக்கும் 80kg திணிவுடைய படகின் ஒருமுனையில் 20kg திணிவுடைய பையன் ஒருவன் நிற்கின்றான். அவன் இப்பொழுது நேராக மறுமுனையை நோக்கி மெதுவாக நடக்கின்றான். அவன் நடந்த தூரம் (படகின் நீளம்) 10m ஆகும். படகு நகரும் தூரம்,
1) 1m 2) 2m 3) 3m
4) 5m 5) 10m

65. 1/50 s ஆவர்த்தனத்தை உடைய திக்கொலி நேரங்காட்டியால் ஆக்கப்பட்ட திக்கொலி நாடாவின் பகுதி ஒன்றை வரிப்படம் காட்டுகின்றது. நாடா காட்டும் கதி,




1) $0.1ms^{-1}$ 2) $0.5ms^{-1}$ 3) $1ms^{-1}$
4) $2.5ms^{-1}$ 5) $3ms^{-1}$


66. 4N நிறையுடைய ஒரு புத்தகம் இடதுபக்க மேல்மூலையில் இறுகப் பற்றப்பட்டுள்ளது. புத்தகத்தின்ஈர்வைமையம் G ஆகும். புத்தகத்தின் சுயாதீன உடல் விசைப்படத்தை படம் காட்டுகிறது இறுகப்பற்றப்படும் இடத்தில் கொடுக்கப்படும் விசை F உம் முறுக்கம் T உம் ஆகும். இங்கு,




1) F = 4N; T = 0.4Nm
2) F = 4N; T = 0.6Nm
3) F = 4N ; T = 0.8Nm
4) F = 8N; T = 0.6Nm 5) F = 8N; T = 0.8Nm


67. P,Q என்னும் இரு விசைகள் ஒரு உடலில் தாக்குகின்றன, இங்கு P > Q பின்வருவனவற்றுள் எது உடலில் தாக்கும் விளையுள் விசையாக இராது?
1) P + Q 2) P - Q 3) $P^2 + Q^2$
4) 2P 5) 2Q

68. $W_1$ என்னும் நிறையுடைய ஒரு நீளமான சீரான வளை PQ மீது தாங்கிகள் $S_1$,$S_2$இல் ஓய்ந்துள்ளது. தாங்கிகளிலிருந்து இரு பக்கங்களிலும் வளையின் சமநீளங்கள் வெளி நீட்டப்பட்டுள்ளன. $S_1$இற்கு சற்றுவெளியே $W_2$ நிறையுடைய ஒரு பெட்டி வைக்கப்பட்டுள்ளது. $S_1$,$S_2$ இலுள்ள மறுதாக்கங்கள் $R_1$,$R_2$ ஆகும். இப்பொழுது பெட்டி மெதுவாக முனை Pஐ நோக்கி அசைக்கப்படுகிறது. வளை சரியத் தொடங்கவில்லை.
A - $R_1 + R_2$ எப்பொழுதும் $W_1 + W_2$ இற்குச் சமனாகும்.
B - $R_1$ ஆனது எப்பொழுதும் $R_2$ஐ விடப் பெரியதாகும்.
C - பெட்டி Pஐ அணுகும்போது $R_1$ சிறிதாக $R_2$ பெரிதாகும்.





இக்கூற்றுக்களில் சரியானவை
1) A,B,C எல்லாம். 2) A,B மட்டும். 3) B,C மட்டும்.
4) A மட்டும். 5) C மட்டும்.

69. 3N நிறையுடைய சீரான வளை PT ஆனது நிலைக்குத்து விசைகளின் தாக்கத்தால் கிடைநிலையில் பேணப்படுகிறது. விசைகளுள் இரண்டு படத்தினால் காட்டப்பட்டுள்ளன. P,Q,R,S,T என்பன வளையில் சம இடைவெளியிலுள்ள புள்ளிகளாகும். வளையைச் சமநிலையில் பேண எப்புள்ளியில் 3N நிலைக்குத்து விசை பிரயோகிக்கப்பட வேண்டும்?
1) P 2) Q
3) R 4) S
5) T




70. 20N நிறையுடைய ஒரு வட்டத்தட்டு அதன் விளிம்புக்கு இணைக்கப்பட்ட ஓர் இழையினால் தாங்கப்பட்டுள்ளது. தட்டின் மீது ஓர் இணையை உருவாக்கும் வகையில் P,Q என்னும் விசைகள் தாக்குகின்றன. P,Q என்பன ஒவ்வொன்றும் 10N பருமனுடையவை. அவை தட்டின் விளிம்புக்குத் தொடலியாக கிடையாகத் தாக்குகின்றன. தட்டைச் சமநிலையில் வைத்திருக்கும் அமைப்பு எது?




71. ஓர் உடலின் மீது 12N, 8N விசைகள் தாக்குகின்றன. அவற்றினது விளையுளின் ஆக்கக்குறைந்த பெறுமானம்,
1) 20N 2) 8N 3) 4N
4) 2N 5) பூச்சியம்.

72. ஓர் உடலின் ஈர்வைமையம்,
1) எப்பொழுதும் உடலினுள் இருக்கும்.
2) எப்பொழுதும் உடலுக்கு வெளியே இருக்கும்.
3) எப்பொழுதும் உடலின் மேற்பரப்பில் இருக்கும்.
4) உடலிலுள்ள அல்லது உடலின் மேற்பரப்பில் இருக்கும்.
5) உடலினுள் அல்லது உடலின் மேற்பரப்பில் அல்லது உடலுக்கு வெளியே இருக்கலாம்.

தொடரும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**



ஒன்றுக்கு மேற்பட்ட வேலை நெருக்கடிகளால் கோபம், பதற்றம் உண்டாகலாம். கணவன் மனைவியர் இடையே சிறு சச்சரவுகள் ஏற்படலாம். தூக்கமின்மையால் உடல் சோர்வு, அசதி ஆள்கொள்ளும். தொலைபேசியில் மட்டும் பேசிக் கொண்டிருந்த ஒருவரை திடீரென நேரில் சந்திக்கலாம். மருந்துப் பொருட்கள் வாங்கலாம்.

**இடபம்**



மனதில் நல்ல சிந்தனைகள் குடிகொள்ளும் நாள். வங்கியில் அடமானமாக வைத்த நகைகளை மீட்கலாம். பெற்றோர் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். வியாபாரிகள் பொருள் ஒன்றின் விற்பனை மூலம் கணிசமான ஆதாயம் பெறலாம். பழைய நண்பர் ஒருவரை சந்திக்க நேரிடலாம்

**மிதுனம்**



தொழில் ரீதியாக சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். பிள்ளைகளின் தவறுகளைச் சுட்டிக் காட்டி அவர்களை நல் வழிப்படுத்துவீர்கள். சக ஊழியர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, கௌரவம் அதிகரிக்கும். நாளை செய்ய வேண்டிய வேலைகளுக்காக இன்றே முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். நல்லது நடக்கும் நாள்.

**கடகம்**



நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைத்து செயற்படுவீர்கள். புதிய முதலீடுகள் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். தொழில் ரீதியாக மாறுபட்ட அனுபவங்களை எதிர்கொள்ளலாம். உங்களின் திறமைக்கு சவால் விடும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். பரியமான ஒருவரின் சந்திப்பு நிகழும்

**சிங்கம்**



என்னதான் பொறுப்பாக வேலை செய்தாலும், சிலர் உங்களை குறை சொல்லலாம். பேராசைகளால் அவதிகளுக்கு ஆட்படலாம். குறைந்த செலவில் முடியும் என நினைத்த காரியம் ஒன்றுக்கு அதிகமாக செலவாகலாம். குடும்ப பெரியவர்களிடம் வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும். பயணத்தடைகளைச் சந்திக்கலாம்

**கன்னி**



சிலரிடம் சமயோசிதமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர்கள் சிலரின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். பிரபலங்கள் சந்திப்பு நிகழும். தந்தை வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்**



எண்ணிய எண்ணங்கள் எண்ணம் போல நிறைவேறும். நல்லவர் கெட்டவர் என பார்க்காமல் நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். உடன் பிறப்புக்கள் வழியில் உருவான மன உளைச்சல்கள் குறையும். குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்டுவீர்கள். உறவினர்கள் சிலர் உங்களுக்காக செலவு செய்யலாம்

**விருச்சிகம்**



பழைய அனுபவம் ஒன்றை அசை போட்டுப் பார்த்து புதிய முயற்சிகளில் இறங்குவீர்கள். குடும்ப உறுப்பினர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல் அவற்றை நீங்களே மீண்டும் செய்ய நேரிடலாம். உறவினர்கள் சிலருடன் முக்கியமான வேலையாக வெளியூர் பயணங்கள் செல்லலாம். வீண் செலவு உண்டு.

**தனுசு**



சக ஊழியர்கள் உங்களின் கருத்துக்களுக்கு மாற்று கருத்துக்கள் சொல்லி எரிச்சல் உண்டாக்கலாம். சில விடயங்களில் அவசரப்பட்டு முடிவு எடுத்து விட்டு பின்னர் வருத்தம் அடைவீர்கள். தொழில் விடயங்களில் எதிர்பாராத மாற்றங் களைச் சந்திக்கலாம். அடுக்கடுக்காக பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள்

**மகரம்**



செல்வாக்கும், சொல்வாக்கும் அதிகரிக்கும் நாள். உடன் பணிபுரிவோர் உங்களை பார்த்து பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். நிதியுதவி, கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கும். அரசியல்வாதிகள் தேவையற்ற அலைச்சல்களுக்கு ஆட்படலாம். சில விடயங்களில் நன்றியுடன் நடந்து கொள்வீர்கள்.

**கும்பம்**



திட்டமிட்ட சில வேலைகளை சரியான நேரத்திற்கு முடிக்க முடியாமல் இழுபறிகளைச் சந்திக்கலாம். உறவினர்கள் சிலர் உங்களின் எதிரே நன்றாகப் பேசி விட்டு மற்றவர்களிடம் விமர்சிப்பதை அறிந்து கொள்வீர்கள். குடும்ப உறுப்பினர்களை சீண்டி விட்டு வேடிக்கை பார்ப்பீர்கள். பெண்கள், பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகள் உண்டு.

**மீனம்**



தைரியமான முடிவுகளை எடுத்து பாராட்டுகளைப் பெறுவீர்கள். பற்றாக்குறை நிலைமை நீங்கி கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். நினைத்தது நடப்பதன் மூலம் மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். ஆறுதலான அனுபவம் உண்டு.

# சாதாரணதரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று

# யாழ்.மாவட்டக் கல்வித் துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித் துறையில் சாதனைபுரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களின் கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.




## தாரணி ஞானசேகரன்
### சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

நான் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் 6ஏ,2பி,எஸ் எனும் பெறுபேற்றுடன் சித்தியடைந்துள்ளேன். இப்பெறுபேறு நான் எதிர்பார்த்த பெறுபேற்றினை விட சற்று குறைவானதாக இருப்பினும் என் முயற்சி கொண்டு கிடைத்த இப்பெறுபேற்றினால் என் பெற்றோர், ஆசிரியர்கள், உறவினர்கள் ஆகியோரை மகிழ்ச்சி கொள்ளச் செய்துள்ளது.

கடந்த காலப் பரீட்சை வினாத்தாள்களைக் கற்றதன் மூலமும், இரவு வேளைகளிலும், அதிகாலை நேரங்களிலும் என் கற்றலைச் சீராக மேற்கொண்டதன் மூலமும், இவற்றையெல்லாம் விட மேலாக என்னை ஊக்கமளித்த பெற்றோர், பாடசாலை, தனியார் நிறுவன ஆசிரியர்கள் போன்றோர் மூலமுமே நான் இப்பெறுபேற்றினைப் பெற்றுக்கொண்டேன். இவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

பரீட்சை எழுதும் முன்னர் பயம், திகில் என்பன இருப்பினும் பரீட்சையின்பின் அவை காணப்படவில்லை.எனினும் பரீட்சை எழுதும்போது என்னிடம் ஒரு துடிப்பு இருந்தது என்றே சொல்ல வேண்டும்.

உயர்தரத்தில் என் கல்வியை தொடரக் கணிதத் துறையைத் தெரிவு செய்துள்ளேன். இதன் மூலம் ஒரு சிறந்த பொறியியலாளராகி என் பாடசாலைக்கும் முக்கியமாக என் பெற்றோருக்கும் பெருமை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே என் எதிர்பார்ப்பு, நம்பிக்கை எல்லாமே. நான் சிறந்த பெறுபேற்றினைப்பெற பிரார்த்தித்த நெஞ்சங்களுக்கும், உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கும் என் நெஞ்சத்தின் நன்றிகள்.



## துஷியங்கா தெய்வேந்திரம்
### சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

நான் தரம் 6 முதல் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கல்வி பயின்று வருகின்றேன். எனது ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறு எதிர்பார்த்த அளவிற்கு அமையாதுவிடினும் அதனை மன நிறைவுடன் ஏற்கிறேன். எனது பெறுபேறு 7ஏ,பி,சி ஆகும். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், ஆங்கில இலக்கியநயம் ஆகிய விருப்பத்திற்குரிய பாடங்களுக்கு பி,சி பெறுபேறுகளைப் பெற்றேன். எனது பெறுபேறு குறித்து முதலில் இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

தன்னம்பிக்கையுடனும், முயற்சியுடனும் கற்றதால் இப்பெறுபேற்றினைப் பெறமுடிந்தது. நான் பெரும்பாலும் பாடங்களை வகுப்பிலேயே விளங்கிக் கொள்வதால் அதனை மீட்டுப் பார்ப்பதில் சிரமமேற்படுவதில்லை. பரீட்சை எழுதும் போது மனதில் எந்தப் பதற்றமும் ஏற்படவில்லை. மிகுந்த ஆர்வத்துடனேயே அதனை எதிர்நோக்கினேன்.

கடந்தகால வினாத்தாள்களையும், மாதிரி வினாத்தாள்களையும் செய்து பார்த்து என்னைப் பரீட்சைக்குத் தயார்படுத்திக் கொண்டேன்.

எனக்கு இப்பெறுபேறு கிடைக்க பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள் ஆகிய அனைவரும் துணைபுரிந்தனர். தற்போது நான் உயர்தரத்தில் கணிதத்துறை யைத் தெரிவு செய்துள்ளேன்.

எனது எதிர்கால இலட்சியம் ஒரு கணனிப் பொறியியலாளர் ஆக வேண்டுமென்பதாகும். நான் இப்பெறுபேற்றை அடைய உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

நேர்காணல்: பிரதாஸ், மூர்த்தி



## புஸ்பராஜா தாஸ்மோகன்
### கரணவாய் மகா வித்தியாலயம்

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் நான் 6ஏ,2பி,எஸ் என்னும் பெறுபேற்றைப். பெற்றுள்ளேன். நான் இப்பெறுபேற்றைப் பெறுவதற்கு எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், குடும்ப அங்கத்தவர்களது ஒத்துழைப்புமே காரணமாகும்.

குறிப்பாக எமது பாடசாலை அதிபர் எமக்குப் பல மேலதிக வகுப்புக்களையும், உயர்கல்விச் செயற்பாடுகளையும் ஒழுங்கு செய்தார். மேலும் எமது பாடசாலையில் நடத்தப்படும் மாதாந்தப் பரீட்சை எனக்கு மிகவும் உதவியாகவிருந்தது. பாடசாலை ஆசிரியர்களது அர்ப்பணிப்பான செயற்பாடுகளும், எனது அண்ணாவினுடைய ஒத்துழைப்பும், பீக்கன் கல்வி நிலையத்தின் பங்களிப்பும் என்னால் இப்பெறுபேற்றைப் பெறுவதற்கு உதவின.



## ப.பனோஜன்
### யாழ்.மத்திய கல்லூரி

எனது ஜி.சீ.ஈ (சா/த) பரீட்சைப் பெறுபேறு 7ஏ,2பி. நான் எதிர்பார்த்த பெறுபேறு எனக்குக் கிடைத்துள்ளது. நான் பரீட்சை வினாத்தாள் தரமுன்பு பலரையும் போல பரபரப்பில்லாமல் நிதானத்துடன் இருந்தேன். முன்னர் நடைபெற்ற சில ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சை வினாத்தாள்களில் பயிற்சி பெற்றதால் வினாத்தாள் பற்றிய சிறிய அச்சமும் என்னிடம் இல்லை. வினாத்தாள் எனக்குக் கொடுத்தவுடன் சிறிது நேரம் அதை மேலோட்டமாகப் பார்த்து ஒவ்வொரு பகுதி வினாக்களுக்குமான நேரத்தை மனதிற் கொண்டே விடையளித்தேன். எனவேதான் குறித்த நேரத்திற்குள் முழுதாக விடையளிக்கக் கூடியதாக இருந்தது.

எனக்கு இப்பெறுபேற்றைப் பெறப் பலரும் துணைபுரிந்தனர். முக்கியமாக பாடசாலை மற்றும் ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள், கல்வி நிறுவனங்கள் எனக் கூறிக் கொண்டே செல்லலாம். நான் கணிதத் துறையிலேயே மேலும் கல்வி கற்க உத்தேசித்துள்ளேன். நிச்சயம் நான் ஒரு பொறியியலாளராக வருவேன் என்ற நம்பிக்கை எனக்கு மட்டுமல்ல என்னைச் சார்ந்தவர்களுக்கும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோப்பம் பிடிக்கும் கையடக்கத் தொலைபேசி



குண்டு வெடிப்புச் சம்பவங்கள் மக்களைக் கதிகலங்கச் செய்யும். காலமாற்றம் மற்றும் தொழில்நுட்பப் புரட்சியால் சில நச்சுத்தன்மைகள் காற்றில் அதிகரித்து வருவதும் சாதாரணமாகி வருகிறன.

இதுபோன்ற ஆபத்துக்களில் இருந்து உங்களைக் காப்பாற்ற வருகிறது மோப்பம் பிடிக்கும் கையடக்கத் தொலைபேசி. 'இலத்திரனியல் மூக்கு' எனப்படும் நவீன உணர்கருவி இதுபோன்ற ஆபத்துக்களைக் கண்டுபிடித்து எச்சரிக்கும் இந்தக் கருவியை தற்போது கையடக்கத்தொலைபேசியுடன் இணைத்து வழங்குகிறது அமெரிக்க நிறுவனமான ஹோம்லாண்ட் செக்யூரிட்டி சயன்ஸ் அன்ட் ரெக்னோலஜி.

இந்த அமைப்பு செல்-ஆல் என்ற நவீன சென்சார் கருவியைத் தயாரித்துள்ளது. இதனை தொலைபேசிக் கதிர்களில் பொருத்திக்கொண்டால் காற்றில் நச்சு ஆபத்துக்கள் இருந்தால் எச்சரிக்கும். நமக்குத் தீமை விளைவிக்கும் குளோரின் போன்ற விஷவாயுக்கள் இருந்தால் ஒலி எழுப்பும். ஒருவேளை நீங்கள் கையடக்கத்தொலைபேசியை வைபரேசனில் வைத்திருந்தால் எஸ்.எம்.எஸ் அனுப்பும்.

அதேபோல் அதிக நச்சுத்தன்மையை உணர்ந்தால் பலமாக ஓசை எழும்பி உங்களை மட்டுமல்லாது சுற்றி இருப்பவர்களையும் உஷார்ப்படுத்தும். அத்துடன் எந்த இடத்தில் இந்த நச்சுவாயு பரவியிருக்கின்றது என்ற தகவலை அவசர உதவி மையத்துக்கும் அனுப்பிவைக்கும்.

பயனுள்ள இந்தக்கருவி மிகச்சிறியதாக இருக்கவேண்டும், மிகக்குறைந்த விலையில் கிடைக்கவேண்டும் என்பதே தங்கள் நோக்கம் என்று இதை தயாரித்த நிறுவனம் கூறுகிறது. அதற்கேற்ப இதன் விலையும் ஒரு அமெரிக்க டொலருக்கும் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

சி.ரிஷிகேசன்,
சுன்னாகம்.

# கொழுப்பை முற்றிலும் தவிர்க்கலாமா?

ஒரு கிலோ உடம்பு எடைக்கு ஒரு நாளுக்கு 2கிராம் புரதத்திற்கு மேல் சாப்பிடுவது நல்லதல்ல. அதிகளவு புரதம் விற்றமின் 'பி6' பற்றாக்குறையை உண்டாக்கும்.

மா உணவுப் பொருள்களைப் பொறுத்தவரை ஆரோக்கியமான ஆண்களுக்கு சமைத்த 315கிராம், பெண்களுக்கு 250கிராம், நீரிழிவு வியாதி உள்ளோருக்கு 185கிராம் அளவு தினமும் எடுப்பது நல்லது.

ஆரோக்கிய மனிதர்களுக்கு தினமும் மூன்று லீற்றர் தண்ணீர் தேவை. மிகக்குறைந்த அளவில் கொழுப்பை உண்பதும் அல்லது முழுமையாக அதைத் தவிர்ப்பதும் இருதய நோய்க்கு நாம் வரவேற்பு கொடுப்பது போல ஆகிவிடும். மொத்த உணவில் 20முதல் 30சதவீதம் கலோரிகள் வரை கொழுப்பின் அளவில் இருக்கலாம். கொழும்பை முழுமையாகத் தவிர்த்தால் மலச்சிக்கல் உண்டாகும்.

கோபிகா,
கொழும்புத்துறை.



# பக்கவாதத்தைத் தடுக்கும் சொக்லேட் சாப்பிட்டால் மூளைக்குப் பாதிப்பு வராது

பக்கவாதத்தால் மூளை பாதிக்கப்படும் வாய்ப்புக்கள் சொக்லேட் சாப்பிடுவதால் குறையும் என இங்கிலாந்து ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

லண்டனில் உள்ள ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழக மூளை மற்றும் நரம்பியல் பிரிவு நிபுணர்கள், பக்கவாதத்தால் மூளைப் பாதிப்புக்கும் சொக்லேட்களுக்கும் உள்ள தொடர்புபற்றி ஆராய்ந்தனர் அதன் முடிவில் கூறப்பட்டதாவது.

அதிக கிறீம்கொண்ட கருமையான சொக்லேட்களில் எபிகாடசின் என்ற பொருள் உள்ளது. அது நரம்பு செல்களுக்கு நன்மைதரக்கூடியது.

அதன் மூலம் பக்கவாதத்தை தவிர்ப்பதுடன் மூளைக்குப் பாதிப்பு ஏற்படாமல் தடுக்கும். எனவே சொக்லேட் பிரியர்கள் அதிக எபிகாடசின் கொண்ட டார்க் சொக்லேட் சாப்பிடலாம். எலிகளிடம்நடத்திய ஆய்வில் இது நிரூபணம் ஆனது.

விஞ்ஞானி ஆராய்ச்சிகளில் மனித உடலுக்கு ஒத்துப் போகக்கூடிய எலிகளுக்கு டார்க் சொக்லோட் அதிகளவில் தரப்பட்டது. வேறு சில எலிகளுக்கு சொக்லேட் தரப்படவில்லை. பிறகு இரண்டு பிரிவு எலிகளின் மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி பக்கவாதம் ஏற்படச் செய்யப்பட்டது.

எபிகாடசின் நிறைந்த சொக்லேட்களைச் சாப்பிட்ட எலிகளுக்கு ஏற்பட்ட, பாக்கவாதத்தால் மூளை பாதிப்புக் குறைவாக இருந்தது. சொக்லேட் தரப்படாத எலிகளுக்குக் கடுமையான மூளைப் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. எனவே பக்கவாதத்தால் ஏற்படும் மூளைப் பாதிப்பைக் குறைக்கும் மருத்துவ முறைகளில் எபிகாடசினை அதிகளவில் சேர்ப்பது நல்ல பயன்தரும்.

அதன்மூலம் பக்கவாதத்துக்கு சிகிச்சை எளிதாகும் என்று ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

இதுபற்றி ஆராய்ச்சிக் குழுவைச் சேர்ந்த பேராசிரியர் சில்வைன் டோர் கூறுகையில், நரம்பு செல்களைத் தூண்டுவதில் சொக்லேட்டில் உள்ள எபிகாடசின் சிறப்பாக வேலை செய்கிறது. பக்க வாத பாதிப்பு ஏற்பட்ட இரண்டரை மணி நேரத்துக்கு சொக்லேட் சாப்பிடுவதால் பாதிப்பை நிச்சயம் குறைக்க முடியும். எனினும் பிரச்சினை ஏற்பட்டு 6மணி நேரத்துக்குப் பிறகு தரப்படும் சொக்லேட்களால் பயன் ஏற்படாது என்றார்.

க.பிறேமினி,
உடுவில்.



# புதன் பொய்கை


## மீட்சி



ஆந்தை அலறியதால்
ஆரோ சாகப்போகிறார்கள்
என்றாள் பாட்டியும்
பயத்துடன்..........
அச்சமான இரவாய்
அந்த அந்தகாரம்
கழிந்து சென்றதால்
நீண்ட இரவாய்ப்
போனது........
விடிந்ததும் பார்த்தபோது
முற்றத்தில் ஆந்தை
செத்துக்கிடந்தது...

பொலிகையூர்
பொன்.சுகந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நேரம் பொன்னானது

காலை ஐந்து மணிக்கு அலாரம் அடிக்கிறது. எழுந்திருக்க வேண்டியவர் அலாரம் அடிக்கும் கடிகாரத்தை ஓங்கி அடிக்கிறார். கடிகாரம் 'கப்சிப்' என்று வாய் மூடிக் கொண்டது. உண்மையில் அலாரம் மீது அடி விழவில்லை. அவரது முன்னேற்றம் என்கிற முதுகெலும்பின் மீது விழுந்த அடி இது. படுக்கையை விட்டு எழுகின்ற நேரத்தை அவர் தள்ளிப் போடவில்லை. தமது தோல்வியை விட்டு எழுகின்ற முயற்சியை அவர் தள்ளிப் போட்டிருக்கிறார். ''இன்னும் கொஞ்ச நேரம் தூங்கலாமே... பிறகு எழுந்திருக்கலாமே'' என்று ஆசைப்படுகிறவர்களுக்கு ஒரு வார்த்தை: ''இதைவிடச் செத்துப் போகலாம்'' காரணம் தூங்குவதும் சாவதும் ஒன்றுதான். தூங்குபவனைவிட செத்தவன் மேலானவன். காரணம் செத்துப் போனவன் தாமதமாக எழுந்து மற்றவர்களைக் கஷ்டப்படுத்துவது இல்லை. உறங்கியவன் தாமதமாக எழுந்து மற்றவர்களுக்கும் சிரமம் கொடுக்கிறான். '' உறங்குவது போலும் சாக்காடு'' என்கிறது திருக்குறள்.

எனவே அதிகம் தூக்கத்தை நேசிக்கிறவர்கள் உண்மையில் சாவை நேசிக்கிறவர்கள். எழுவதை ஒத்தி வைக்கிறவர்கள் எழுச்சியை ஒத்திவைக்கிறார்கள்.

ஆங்கிலத்தில் ''Tomorrow never come'' என்று ஒரு வாசகம் சொல்வார்கள். எந்த வேலை சொன்னாலும் சிலர் நாளை செய்கிறேன், நாளை செய்கிறேன் என்பார்கள். நாளை வரப்போவதே இல்லை. இன்று ரொக்கம் நாளை கடன் என்கிற மாதிரி நாளை என்று ஒரு நாளே வராது!

''பிறகு படித்துக் கொள்ளலாம். அப்புறம் வேலை பார்க்கலாம். கடைசியாகச் செய்து விடலாம்'' என்று பேசுகிறவர்கள் ... நினைக்கிறவர்கள்... சுய துரோகிகள்.. சொந்த விரோதிகள். காரணம் ''நிறைய நேரம் இருக்கிறது, பிறகு செய்து கொள்ளலாம்'' என்று நினைப்பவர்கள் எப்போதும் எதையுமே சரியாகச் செய்ய முடியாது என்பது அதிசயமான உண்மை.

மறைந்த போப்பாண்டவருக்கு முன்னால் இருந்த போப்பாண்டவரின் மதிநுட்பம் பற்றி ஒரு செய்தி இது. மூன்று அமெரிக்கர்கள் இத்தாலிக்கு வந்தவர்கள் ரோம் நகர் வந்து போப்பாண்டவரைத் தரிசித்தனர். முதல் நபரைப் பார்த்து '' நீங்கள் எவ்வளவு நாள் இத்தாலியில் தங்கப் போகிறீர்கள்.'' என்று கேட்டார். ''ஆறு மாதம்'' என்று பதில் வந்தது. நீங்கள் இத்தாலியை அதிகமாகச் சுற்றிப் பார்க்கமாட்டீர்கள்.. முடியாது'' என்றார் போப். அடுத்தவர் பதறிப் போய் நான் மூன்று மாதம்தான் தங்கப் போகிறேன்'' என்றார். '' நீங்கள் கொஞ்சம் பார்ப்பீர்கள்'' என்றார் போப். பிறகு அடுத்தவரைப் பார்த்து '' நீங்கள் எவ்வளவு நாள்கள் தங்குவதாக எண்ணம்'' என்றதும் அவர் ''ஒரு வாரம் தான் எனக்கு விடுமுறை. அதற்குள் நான் எப்படி இத்தாலியைச் சுற்றிப் பார்க்கப் போகிறேன்'' என்று வருத்தம் தோய்ந்த குரலில் கூறினார். போப்பாண்டவர் சிரித்தபடி '' ஒரு வாரம்தான் என்றாலும் நீங்கள் கண்டிப்பாக இத்தாலி முழுவதையும் பார்த்து விடுவீர்கள்..'' என்றார். பிறகு அவரே காரணமும் கூறினார். '' நேரம் குறைவாக இருக்கிறது என்று கவலைப்படுகிறவர்கள் முழுமையாக அதனைப் பயன்படுத்துகிறார்கள். நிறையநேரம் கைவசம் உள்ளவர்கள் நேரம்தான் இருக்கிறதே பிறகு பார்ப்போம், பிறகு பார்ப்போம் என்று எதையுமே முழுமையாகப் பாராது வீணாக்கி விடுகிறார்கள்'' என்று அழகான விளக்கம் அளித்தார்.


''பிறகு'' ''பிறகு'' என்று ஒத்திவைக்க நேரம் காலம் கைவசம் உள்ளவர்கள் நிகழ்காலத்தை நிராகரிக்கிறார்கள். எதிர்காலத்தைப் பாழாக்குகிறார்கள். தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதய்யர் காலத்தில் தமிழ் அச்சில் இல்லை. ஓலைச் சுவடியிலும், தமிழறிஞர் வாயிலும் ஒண்டிக்குடித்தனம் நடத்தியது. ஆனால் தேடித்தேடிப் படிக்கிற ஆர்வம் உ.வே.சாமிநாதய்யர் அவர்களுக்கு இருந்தது. ஒவ்வொரு வரி மட்டும் பாடிப் பிச்சை எடுத்த ராப்பிச்சைக்காரனிடம் முழுப்பாட்டையும் கேட்க பின்னாலேயே போய்க்கேட்டு பாட்டை முழுதாகச் சேகரிக்கும் வெறி இருந்தது. இன்று தமிழ்ப் பாடல்கள் அச்சுவாகனம் ஏறி புத்தகமாகி வெளிவந்தபடி இருக்கின்றன. ஆனால் படிக்கும் ஆவல் எத்தனை பேருக்கு இருக்கிறது. கவனமாகப் புரிந்து கொள்ளுங்கள்.நிறைய வாய்ப்புக்கள் இருக்கும்போது பலரும் அதனைப் பயன்படுத்துவதே இல்லை. கொஞ்சம்தான் வாய்ப்பு என்றால் அதனை முழுதாகப் பயன்படுத்திவிடுவார்கள்.

நிறைய நேரம்.. நிறைய வாய்ப்புகள்.. என்று நிரம்பி வழிகிறவர்கள் நிச்சயம் வாழ்க்கையை வீணாக்கி விடுகிறார்கள்.கொஞ்சம்தான் நேரம்... கொஞ்சம்தான் வாய்ப்பு... கொஞ்சம்தான் பணம்...கொஞ்சம்தான் ஆயுள்... என்று கைவசம் கொஞ்சமாக வைத்திருக்கிறவர்கள் நிச்சயம் ஜெயிக்கிறார்கள்.

நாளை... நாளை என்று நாளை ஒத்திப்போடுகிறவர்களைப் பார்த்து ஆழ்வார் கேட்கிறார்.. நாளை நாள் நமது நாளா? நமனது (எமன்) நாளா? யார் அறிவார் எனவே ஒத்திப் போடாமல் இன்றே.. இப்போதே... இந்தக் கணமே என்று அவசரப்பட அழைக்கிறார் ஆழ்வார் பெருமகனார்.

*(நன்றி: வாழ்ந்து பார்க்கலாம் வா)*

# கேள்வி என்பது அறிவுச் சுரங்கத்தின் சாவி



''தண்ணீர் எல்லாம் தீப்பிடித்தால் மீன்கள் எல்லாம் என்ன செய்யும்?'' என்று ஒருவர் கேள்வி கேட்டார். ''மீன்கள் எல்லாம் மரத்தின் மீது ஏறிக்கொள்ளும்'' என்று பதிலளித்தார் மற்றவர். ''மீன் எப்படி மரம் ஏறும்?'' என்று பாய்ந்தார் கேள்வி கேட்டவர். ''என்றைக்குத் தண்ணீர் தீப்பிடிக்கத் தொடங்குமோ அன்றைக்கு மீனுக்கும் மரம் ஏறத்தெரியும்'' என்றார் அந்த ஞானி.

பதில் என்பது கேள்வியைப் பொறுத்தே பிறக்கிறது. கேள்வி கேட்பவர்கள் பலவகை. அறியாமையில் கேட்பவர்கள், அறிந்து கொள்ளக் கேட்பவர்கள், அகங்காரத்தில் பிறரை மட்டம் தட்டக் கேட்பவர்கள், தன் பேரறிவுத் திறத்தைப் ப்ரபஞ்சமே புரிந்து கொள்ளட்டும் என்கிற கோணத்தில் கேட்பவர்கள். இப்படிப் பலவகை உண்டு. எனவே பதில்களும் பலவகை. மிகக் குறைவான நபர்கள்தான் உண்மையான பதிலை எதிர்பார்த்து கேட்பவர்கள். அவர்கள்தான் உலகை உயர்த்தும் உன்னத உயிர்கள்.

கேள்வி என்பது அறிவுச் சுரங்கத்தின் சாவி. சாவியில் உள்பல்வேறு நெளிவு சுளிவுகள் பூட்டின் நெளிவு சுளிவுகளுக்குள் சுழன்று கல்விதாழ் திறப்பது போல கேள்வியின் ஒவ்வொரு வரியும் பதிலின் ஒவ்வொரு கருத்தையும் தீர்மானிக்கிறது. சாக்ரடீஸ், புத்தர் ஆகியோர் கேள்வி பதில் பாணியில்தான் தங்கள் கருத்துருவாக்கத்தை மக்கள் முன் சமர்ப்பித்தனர். அண்மைக்காலத்தில் ஓஷோ தம் பல்வேறு சொற்பொழிவுகளையே கேள்வியின் பதில்களாகத்தான் வழங்கினார்.

புத்தரிடம் ஒருவர் கடவுளைப் பற்றிய கேள்வி கேட்டார். பலமுறை கேட்டார். புத்தரோ மௌனமாக இருந்தார். பொறுமை இழந்த அந்த நபர் ''நெடுநேரமாக ஏன் என் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை'' என்று எரிச்சல் அடைந்தார். புத்தரோ ''ஒவ்வொரு முறையும் நான் பதில் சொல்லிக் கொண்டுதான் இருந்தேன்'' என்று புன்னகைத்தார். உண்மைதான். கடவுள் பற்றிய கேள்விகளுக்கு மௌனத்தைவிட அழகான ஆழமான பதில் வேறு இருக்க முடியாது.

பிறர் கேள்வி கேட்காதவரை நம்முடைய முட்டாள்தனம் நமக்கே தெரிவதில்லை. அதனால்தான் சிலர், பிறர் கேள்வி கேட்பதையே விரும்புவதில்லை. உலகின் சர்வாதிகாரிகள் எல்லோரும் கேள்விகளுக்கு முற்றும் எதிரானவர்கள். பதில் சொல்ல தயாராக இருப்பவர்கள் பணிவுடையவனாகிறார்கள். இயேசு மொழியில் சொல்வதானால் கேள்வி கேட்கிறவன் பாக்கியவான் ஆகிறான். அவன் சுமையை இறக்கிவைக்கிற பேறு பெற்றவனாகிறான்.

குழந்தைகளைப் பார்த்திருக்கிறீர்களா? அவர்கள் எப்போதுமே கேள்விகளால் நிரம்பி வழிகிறார்கள். எத்தனை பதில்கள் வந்தாலும்அவர்கள் தேடுதல் நிற்பதில்லை. பல சமயங்களில் குழந்தைகள் பதிலை எதிர்பார்ப்பதே இல்லை. கேள்விகள் அவர்களை மகிழ்விக்கிற அளவு பதில் மகிழ்விப்பதில்லை. நாமும் குழந்தையைப் போல ஆனந்தமாக இருக்க கேள்விகள் துணைசெய்யக்கூடும். கேள்விகள் குழந்தைகள் போல இளமையானவை. பதில்கள் எப்போதுமே கிழட்டுத்தனமானவை.

சுகி.சிவம்.

# எதுவுமே செய்யாதிருத்தும் ஆனந்த நிலையே தியானம்



ஒரு மலை உச்சியில் ஒரு ஞானி நின்று கொண்டிருந்தார். அவர் என்ன செய்கிறார் என்று பின்னால் மலையேறி வந்தவர்களுக்குள் விவாதம் வளர்ந்தது. ''சாமியாரின் பசு மாடு தொலைந்து போயிருக்க வேண்டும். தேடிக்கொண்டு வந்திருப்பார்'' என்றார் ஒருவர் ''இருக்காது... அவரோடு வந்தவர்கள் பின்தங்கி இருப்பார்கள் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பார்'' என்றார் மற்றவர் ''உடன் வந்தவர்களைத் தேடுவதானால் அவர் தான் வந்த வழியை அல்லவா பார்த்துக் கொண்டு நிற்க வேண்டும். ஆனால் அவர் மற்றப் பக்கம் அல்லவா பார்க்கிறார். அவர் பிரார்த்தனை செய்கிறார் ஜெபம் செய்கிறார்'' என்று மூன்றாவது ஆள் தம் கண்டுபிடிப்பை வெளியிட்டார்.

மூவரும் நெருங்கியதும் முதல் ஆள் தன் வெற்றியை உறுதிப்படுத்த ''பசுமாடு தானே தேடுகிறீர்கள்? என்கிறார் ''எனக்கு ஏது பசு மாடு?'' என்று துறவி சிரித்ததும், '' யாரும் வேண்டிய நண்பர்களுக்காகக் காத்திருக்கிறீர்களா?'' என்று கேட்டார் இரண்டாவது நபர். '' நண்பரா... எனக்கா... எனக்குப் பகையும் இல்லை நட்பும் இல்லை. வேண்டியவரும் இல்லை... வேண்டாதவரும் இல்லை... யாருக்காக நான் காத்திருக்க முடியும்'' என்றார். மூன்றாவது ஆளோ வெற்றிச் சிரிப்புடன் '' நான் சொன்னதுதான் சரி.. துறவி பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார்'' என்றார். '' எனக்கு எந்தத் தேவையுமே இல்லாதபோது நான் எதற்காகப் பிரார்த்தனை செய்யவேண்டும்'' என்று கைகொட்டிச் சிரித்தார் அந்த ஞானி.

'' பிறகு என்னதான் செய்கிறீர்கள்?'' என்று மூவரும் பரிதாபமாகக் கேட்க '' நான் எதையுமே செய்யாமல் இருக்கிறேன் ஆனந்தத்தில்'' என்றார். இப்படி இருப்பதற்குத் தியானம் என்று ஒரு பெயர் உண்டு. ஒரு [illegible] அதனைச் செய்ய முடியாது. செய்யாத ஆனந்த நிலையே தியானம் என்றார் ஞானி. ★

# நேரிய சிந்தனை உயர்ச்சிக்கு வழிவகுக்கும்

ஒரு மரண ஊர்வலம், வயோதிபனின் தளர்ச்சி, நோயாளியின் துயர், போகத்தில் ஆழ்ந்திருந்த ஒரு சித்தார்த்தனைப் புத்தராக்கியது. காரணம் அந்த இளைஞன் சிந்தித்தான்.

இதுதான் கடவுள் என்று எதைக் காட்டினாலும் கும்பிட்டுப் பழகிய சமூகத்தில் இது எப்படிக் கடவுளாக முடியும்? கடவுள் என்ற ஒன்று உண்டா? அது எங்கிருக்கிறது? யார் பார்த்தவர்கள் என்று தகித்த தவிப்பு நரேந்திரனை விவேகானந்தனாக்கியது. காரணம் அந்த இளைஞன் சிந்தித்தான்.



பாதிப் பயணத்தில் மாட்டு வண்டியில் இருந்து வண்டிக்காரன் தன்னை மணலில் தள்ளியபோது தள்ளிய காரணம்தான் பிறந்த ஜாதி என்று தெரிந்ததும் இந்த ஜாதியில் பிறந்தவர்கள் ஏன் இப்படி நடத்தப்படுகிறார்கள். இவர்கள் உயரவேண்டாமா என்று அந்த பிஞ்சுமனம் சிந்தித்தது. அந்தச் சிந்தனை அரசியல் சட்டத்திலும் இடம்பெற்றது. அம்பேத்காரை அண்ணல் அம்பேத்கார் என்று ஆக்கியது. காரணம் அந்த இளைஞன் சிந்தித்தான்.

நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்கிற விழிப்பும், ஏன் இப்படி நடக்கிறது என்ற கேள்வியும், உண்மைஎன்ன என்ற தேடலும் உண்மையை நடைமுறைப்படுத்தும் வழி என்ன என்ற வைராக்கியமும் கூட்டுப்புழுவாக இருக்கும் இளைஞனை வண்ணத்துப் பூச்சியாக்கிவிடும். இப்படிச் சிந்தித்தால் எல்லோருக்கும் நல்லது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




01.04.1991

✱ மன்னார் வேப்பங்குளத்தில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த 23 இலங்கை இராணுவ வீரர்களின் சடலங்கள் விடுதலைப் புலிகளால் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ 'டைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகையின்கொழும்புச் செய்தியாளரின் வீட்டைப் பொலிஸார் சோதனையிட்ட விடயம் தொடர்பாகக் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் இலங்கை அரசிடம் கவலை தெரிவிப்பு.

02.04.1991

✱ வேப்பங்குளத் தாக்குதல் சம்பவத்தில் தம்மதால் கைப்பற்றப்பட்ட 23 இராணுவ வீரர்களின் சடலங்களை விடுதலைப் புலிகள் மனிதாபிமான அடிப்படையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளூடாக அரசிடம் கையளிக்கவுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ மட்டக்களப்புக்கு வடக்கே வீதியோரங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனும், வெட்டப்பட்டுத் துண்டங்கள் ஆக்கப்பட்ட நிலையிலும் 12 தமிழ்ப் பொதுமக்களது சடலங்கள் காணப்பட்டதாக பி.பி.ஸி. வானொலி தெரிவிப்பு.

03.04.1991

✱ அரச படையினர் மீதான தமது தாக்குதல்களை விடுதலைப் புலிகள் தீவிரப்படுத்தியிருப்பதை அடுத்து கடந்த ஒரு மாத காலப்பகுதிக்குள் இருநூறுக்கும் அதிகமான படையினர் உயிரிழந்துள்ளதாகவும் மேலும் பல படையினர் படுகாயங்களுக்கு உள்ளாகி உள்ளதாகவும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவிப்பு

✱ இலங்கை அரசின் வெளியுறவுச் செயலாளர் பேர்னாட் திலகரத்ன தலைமையில் உயர்மட்டக் குழுவொன்று அடுத்த வாரம் இந்தியாவுக்குச் செல்ல விருப்பதாகத் தெரிவிப்பு.

04.04.1991

✱ நேற்றுப் பிற்பகல் காரைநகரின் மேற்குப்பக்க கடற்கரையோரமாகத் தரையிறங்கி மினிமுகாமொன்றை அமைக்க முற்பட்ட அரச படையினர்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பல படையினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

✱ விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென படை அதிகாரிகள் வற்புறுத்திவரும் நிலையில், விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தும் அணுகுமுறையில் மீள் சிந்தனையொன்று ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் கருத்துத் தெரிவிப்பு.

05.04.1991

✱ மன்னார் நானாட்டானில் தொடர்ந்து மூன்றாவது நாளாகவும் விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் இடம் பெற்றுவரும் மோதல் களில் கொல்லப்பட்ட பல படையினரின் உடல்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் முயற்சி தொடரும் என இந்திய ஜனாதிபதி தெரிவிப்பு.

06.04.1991

✱ காட்டுப் பிரதேசமான வன்னியைக் கைப்பற்றுவதென்பது அரச படையினரால் இயலாததொரு விடயமாகும் என பி.பி.ஸி. வானொலியின் கருத்துக் கணிப்பீடு மூலம் தெரியவந்துள்ளதாகத் தெரிவிப்பு

07.04.1991

✱ நேற்றுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்துக்குள் மட்டும் கிழக்கு மாகாணத்தில் 17அரச படையினர் உயிரிழந்துள்ளமை விடுதலைப் புலிகள் தமது தாக்குதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளமையை உறுதி செய்துள்ளதாகத் தெரிவிப்பு.

08.04.1991

✱ கடந்த வாரம் மன்னார் நானாட்டானில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்ட அரச படையினர் மூன்று அப்பாவித் தமிழர்களை வெட்டிக் கொன்று சடலங்களை கிணற்றுள் வீசியிருப்பதாகத் தெரிவிப்பு.

✱ இராணுவ நடவடிக்கைக்கு உள்ளாகியுள்ள காங்கேசன்துறைப் பகுதியினுள்ள லங்கா சிமேந்து நிறுவனத்தின் தொழிற்சாலையை மூடிவிட நிர்வாகம் விரும்புவதாகத் தெரிவிப்பு.

09.04.1991

✱ வடக்கைப் போன்று கிழக்கு மாகாணத்திலும்அரச படையினரின் நடமாட்டத்தை முடக்கும் நோக்குடன் முகாம்களை விட்டு வெளியேறும் அரச படையினர் மீது விடுதலைப் புலிகள் தமது தாக்குதல்களை முடுக்கிவிட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ கடந்த சில தினங்களாகத் தடைப்பட்டிருந்த குமண கப்பல் சேவை, கொழும்பில் சிகிச்சை பெறவேண்டிய 45 நோயாளர்களை ஏற்றிக்கொண்டு நேற்று பருத்தித்துறையிலிருந்து கொழும்புக்கு புறப்பட்டதாகத் தெரிவிப்பு.

10.04.1991

✱ வடக்கு,கிழக்கில் தற்போது இடம் பெற்றுவரும் யுத்தத்தை இடைநிறுத்துவதற்கு வாய்ப்பாக இலங்கை அரசு பகிரங்க அறிவிப்பொன்றை விரைவில் விடுக்கவுள்ளதாக கொழும்பு அரச வட்டாரங்கள் தெரிவிப்பு.

✱ முன் நிபந்தனை எதுவுமின்றி இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த தமிழீழ விடுதலைப்புலிகள் தயாராக உள்ளதாக பிரான்ஸில் இருந்து விடுதலைப் புலிகள் பிரமுகர் திலகர் தெரிவிப்பு.

11.04.1991

✱ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் யுத்த நிறுத்தமொன்றை ஏற்படுத்தும் முயற்சியில் சுவீடன் நாட்டு அரசு ஈடுபட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிப்பு.

✱ உயிரிழந்த சிப்பாய்களின் சடலங்களை விடுதலைப் புலிகளும், போராளிகளின் உடல்களை இலங்கைப் படையினரும் மாறி மாறி ஒப்படைத்திருப்பது நிலைமையில் நல்ல மாற்றத்தை - திருப்பத்தை ஏற்படுத்தக் கூடும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க தெரிவிப்பு.

12.04.1991

✱ திருகோணமலை மாவட்டத்தைச் சிங்களப் பிரதேசமாக மாற்றும் திட்டத்தின் ஒரு கட்டமாக திருகோணமலைக் கரையோரப் பகுதியெங்கும் சிங்கள மீன்வர்களை அரசு வெகு வேகமாகக் குடியேற்றி வருவதாகத் தெரிவிப்பு.

✱ இலங்கையின் வடக்கு, கிழக்கில் இன மோதல்களை நிறுத்தவும், தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள சுமார் ஒன்றரை இலட்சம் இலங்கைத் தமிழ் அகதிகள் இலங்கைக்குத் திரும்பக் கூடிய சூழ்நிலையை உருவாக்கவும் விரைவான நடவடிக்கை எடுக்குமாறு இந்திய அரசு இலங்கை அரசிடம் வற்புறுத்தியுள்ளதாகத் தெரிவிப்பு.

13.04.1991

✱ இலங்கை இனப்பிரச்சினையில் தலையிட்டு மத்தியஸ்தம் செய்து வைக்க மலேசிய அரசு விரும்புவதாகவும், இது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச விரும்புவதாகவும் மலேசிய அரசு புலிகளுக்குத் தகவல் அனுப்பிவைத்திருப்பதாக விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் கிட்டு லண்டனில் வைத்துத் தெரிவிப்பு.

✱ தென்பகுதியில் ஜே.வி.பி. இயக்கம் மீண்டும் புத்துயிர் பெற்று வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிப்பு.

14.04.1991

✱ எதிர்வரும் மே மாதம் வடக்கு - கிழக்கு நீங்கலாக நாட்டின் ஏனைய பகுதிகளில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் ஆளும் ஐ.தே. கட்சி அரசு வெற்றியீட்டினால் உடனடியாக அரசு பொதுத் தேர்தலொன்றை நடத்த முன்வரலாம் எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிப்பு.

✱ புத்தாண்டையொட்டி தற்காலிக யுத்த நிறுத்தம் செய்வது என்ற பேச்சுக்கே இடமில்லை என இலங்கை இராணுவத் தளபதி தெரிவித்ததாக பி.பி.ஸி வானொலி அறிவிப்பு.

# தலைநகரில் தமிழ் பிரதிநிதித்துவம் ஓரளவு காப்பாற்றப்பட்டுவிட்டது

## பிரபா கணேசன் தெரிவிப்பு

கொழும்பு,மே12

''கொழும்பு மாவட்ட தமிழ் மக்கள் தமது வாக்களிப்புக் கடமையில் தவறியிருந்தாலும் தலைநகர நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம், எமது வெற்றியினால் ஓரளவு காப்பாற்றப்பட்டுள்ளது'' என ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார். கொழும்பு மாவட்ட தமிழ்ப் பிரதிநிதித்துவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள பிரபா கணேசன் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு-

கொழும்பு மாவட்டத்திலே பதிவு செய்யப்பட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் வாக்காளர்களில், சுமார் 55 ஆயிரம் பேர் மாத்திரமே வாக்களித்துள்ளார்கள். இது கொழும்பு மாவட்டத் தமிழ் மக்களின் அசமந்தப் போக்கையே எடுத்துக் காட்டுகின்றது. கடந்த நாடாளுமன்றத்தில் கொழும்பு மாவட்டத்தில் இரண்டு தமிழ் பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெற்றன. அதில் எமது தலைவர் மனோ கணேசன் சேவை கொழும்பு மாவட்ட தமிழர்கள் அறியாதது அல்ல. தனது உயிரையும் பொருட்படுத்தாது, அராஜகத்திற்கு எதிராக தைரியமாகக் குரல் கொடுத்தார். ஆனால் தலைநகர தமிழர்கள் இன்று தமக்கு எவ்வித பிரச்சினைகளும் இல்லை என்ற நோக்கில் வாக்களிக்கத் தவறிவிட்டார்கள் என்பது கவலைக்குரிய விடயமாகும்.

எனக்கு வாக்களித்த 43,000 தமிழ் மக்களுக்கும், அதேபோல் மாற்று கட்சியினருக்கு வாக்களித்த 9,000 வாக்காளர்களுக்கும் நன்றி சொல்லும் அதேவேளையில், வாக்களிக்க தவறிய 95,000 வாக்காளருக்கும் சேர்த்தே எமது சேவை தொடருமென தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கொழும்பு மாவட்டத்தில் நான் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டும், தமிழ் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டிருப்பதாக அறிக்கைவிடுவது ஆரோக்கியமானது அல்ல என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (சி)

# சிறுவனைக் கடத்த முயன்ற கும்பலால் மன்னாரில் நேற்றுமுன்தினம் பரபரப்பு

மன்னார்,மே12

மன்னார் பஸ் தரிப்பு நிலையத்திற்கு அருகில் வைத்து பாடசாலை மாணவன் ஒருவனை நேற்றுமுன்தினம் காலை கடத்துவதற்கு முயற்சிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து அங்கு பெரும் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது.

மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் தரம் 5 இல் கல்வி பயிலும் த.கவிதரன் என்ற மாணவனை சிவப்பு நிற வான் ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்கள் கடத்த முயற்சித்தனர்.

எனினும் அந்தச் சிறுவன் கடத்த முயன்றவர்களின் பிடியில் இருந்து தப்பி வந்துள்ளான்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிய வருபவை வருமாறு:-

மன்னார் எழுத்தூர் செல்வநகர் பகுதியைச்சேர்ந்த குறித்த மாணவன் நேற்றுமுன் தினம் காலை பாடசாலை செல்வதற்காக தனது வீட்டிலிருந்து பேருந்து ஒன்றில் வந்து மன்னார் பஸ் தரிப்பு நிலையத்தில் காலை 7.30 மணியளவில் இறங்கியுள்ளார்.

அங்கிருந்து அந்த மாணவன் தனது பாடசாலைக்கு நடந்து சென்று கொண்டிருந்த வேளை பஸ் தரிப்பு நிலையத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிவப்பு நிற வான் ஒன்றுக்குள் இருந்தவர்கள் குறித்த மாணவனைத் தூக்கி அந்த வானுக்குள் ஏற்ற முயற்சித்திருக்கின்றார்கள். அப்போது அந்த மாணவன் அழுது சத்தமிடத் தொடங்கினான். அருகில் நின்ற வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் குறிப்பிட்ட இடத்திற்கு விரைந்து வந்தனர். மாணவனைக் கடத்தும் முயற்சியைக் கைவிட்டுவிட்டு கடத்தல்காரர்கள் வானில் தப்பிச் சென்றுவிட்டனர்.

கடத்தல்காரர்களின் பிடியிலிருந்து தப்பிய மாணவன் அழுதுகொண்டு பாடசாலைக்குச் சென்று அதிபரிடம் தனக்கு நேர்ந்த சம்பவத்தை தெரிவித்தான்.

குறித்த பாடசாலை அதிபர் இந்தச் சம்பவத்தை மாணவனின் பெற்றோருக்கு உடனே அறிவித்தார். பாடசாலைக்கு விரைந்த பெற்றோர் மாணவனை மன்னார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று முறைப்பாடு செய்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து மன்னார் பகுதியில் நேற்றுமுன்தினம் பதற்ற நிலை நிலவியது என்று எமது செய்தியாளர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

# இலங்கை ஊடாக வெளிநாட்டுக்கு ஆள்களைக் கடத்தும் போலி முகவர்கள்

## சி.ஐ.டியினர் தீவிர விசாரணை

கொழும்பு, மே 12

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு ஆட்கடத்தல்களை மேற்கொள்ளும் முகவர்கள் குறித்து குற்றவியல் தடுப்பு புலனாய்வுத் துறையினர் தகவல் திரட்டியுள்ளனர்.

அண்மையில் ஆவணங்களற்ற நிலையில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட இந்தியா மற்றும் நேபாள நாட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது இந்தத் தகவல்கள் தெரியவந்திருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து வெளிநாடுகளுக்கு ஆள்கடத்தல்களை மேற்கொள்ளும் முகவர்களின் கேந்திர நிலையமாக இலங்கை பயன்படுத்தப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் இந்தச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் கைதுசெய்யப்படுவரெனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# எதிரணி எம்.பிக்கள் 10 பேர்; அரசுப் பக்கம் தாவுவரா?

கொழும்பு,மே12

எதிர்கட்சிகளிலிருந்து 10 நாடாளு மன்ற உறுப்பினர்கள் அரசுடன் இணைந்து கொள்ளவிருக்கின்றனர் என வெளியான தகவல்களை, குறித்த எதிர்க்கட்சிகள் முற்றாக மறுத்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து 2 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் இணைந்துகொள்ளவுள்ளனர். என வெளியான தகவல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேந்திரன் தெரிவித்தவை வருமாறு:-

''கட்சியின் 14 உறுப்பினர்களும் ஒற்றுமையாகவே இருக்கிறோம். அரசுடன் இணையும் திட்டம் எதுவும் எம்மிடம் இல்லை'' - என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணையவுள்ளனர் என சிங்கள நாளிதழ் ஒன்றில் செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் இணையவுள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதனை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி முழுமையாக மறுத்துள்ளதுடன், தமது கட்சி தற்போது கட்டுக்கோப்பான நிலைமையில் உள்ளது எனவும், அவ்வாறான தகவல் கள் வெறும் வதந்திகளே எனவும் தெரிவித்துள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





போரினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர் சங்கங்களின் பாவனைக்கென வாகனங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் திருகோணமலையிலுள்ள வடமாகாண அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது சங்கங்களுக்கான வாகனங்களை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி கையளிப்பதை முதலிரு படங்களிலும், வடமாகாணப் பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ர.விஜயலட்சுமி, வடமாகாணக் கூட்டுறவு ஆணையாளர் ஜே.எஸ்.அருள்ராஜ் மற்றும் வடமாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் ஆகியோர் வாகனங்களைப் பெற்றுக்கொண்ட சங்கப் பிரநிதிகளுடன் நிற்பதை இறுதிப் படத்திலும் காணலாம்.

# மாளிகாவத்தை, குணசிங்கபுரப் பகுதிகளிலும் பொதுமக்களின் வீடுகளை இடிக்க அரசு திட்டம்

கொழும்பு, மே 12

கொழும்பு கொம்பனித் தெருவில் அமைக்கப்பட்டிருந்த வீடுகள் உடைக்கப்பட்டமையைத் தொடர்ந்து மாளிகாவத்தை, புதுக்கடை மற்றும் குணசிங்கபுர ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள வீடுகளையும் இடித்து அகற்றுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முன்தினம் தெரிவித்தது.

அரசின் இந்தச் செயற்பாட்டுக்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்றைத் தாக்கல் செய்வதற்கு அக்கட்சி தீர்மானித்துள்ளதாக மேலும் கூறப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அக்கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

கொம்பனித்தெருவில் அமைக்கப்பட்டிருந்த வீடுகளை சட்டவிரோதக் கட்டங்கள் எனத் தெரிவித்து நகர அபிவிருத்தி அதிகாரசபை இடித்து அகற்றியது. மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ 1986 ஆம் ஆண்டு வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது இந்த வீடுகளுக்கு உறுதிப் பத்திரங்களை வழங்கியிருந்தார். அந்த வீடுகள் சட்ட விரோதக் கட்டடங்கள் அல்ல.

இதை நாம் ஓர் அரசியல் பழிவாங்கலாகவே பார்க்கிறோம். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மத்திய கொழும்பு மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கே வாக்களித்திருந்தனர். அதற்குப் பழிவாங்குவதற் காகவே அரசு இதைச் செய்தது.

பலஸ்தீனத்தில் இஸ்ரேலியப் படைகள் வீடுகளை இடித்து அகற்றிய சம்பவத்துக்குச் சமமாகவே இந்தச் சம்பவம் அமைந்துள்ளது. நகரத்தைக் கட்டியெழுப்புதல் என்ற ஜனாதிபதியின் நிகழ்ச்சித் திட்டம் இது தானா?

அரசின் இந்தச் செயற்பாட்டை அரசில் உள்ள முஸ்லிம் அமைச்சர் பௌஸியாலோ அல்லது மேல் மாகாண அமைச்சர் அலவி மௌலானாவினாலோ தடுத்து நிறுத்த முடியவில்லை. பாதுகாப்புப் பேச்சாளர் தனது பேச்சை செவிமடுப்பதில்லை என்று பௌஸி கூறுகின்றார்.

கொம்பனித்தெருவைத் தொடர்ந்து மாளிகாவத்தை, புதுக்கடை மற்றும் குணசிங்கபுர ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளையும் உடைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்த நாம் ஒன்றுபட வேண்டும்-என்றார். (சி)

# நிதிக் கொள்கைகளில் மாற்றம் அவசியம்

## சர்வதேச நாணய நிதியம்

இலங்கையின் நிதிக் கொள்கைகளில் மாற்றம் அவசியமெனவும், வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் அரசு சரியான கொள்கைகளைப் பின்பற்ற வேண்டுமெனவும் சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

குறைந்தளவு துண்டுவிழும் தொகையுடைய ஓர் வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்க வேண்டுமென்றும் அது தெரிவித்தது.260 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான கடன் வசதியின் மூன்றாம் கட்டத்தை இலங்கைக்கு வழங்குவது தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே சர்வதேச நாணய நிதியம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.மூன்றாம் கட்ட கடன் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் அமைப்பின் பரிந்துரைகளைப் பின்பற்ற வேண்டுமென நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கோஷ்லி மாத்தாய் தெரிவித்துள்ளார். (சி)


ஐயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 646 திகதி 10-05-2010

வெற்றி எண்கள்

15 17 26 29 P (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 18,752,950/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 18,752,950/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 14 | 2,000/= | 28,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 378 | 1,000/= | 378,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 608 | 1,000/= | 608,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 14951 | 60/= | 897,060/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7128 | 40/= | 285,120/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 177909 | 20/= | 3,558,180/= |
| | | மொத்தம் | ரூ. 6,554,360/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனாவின் மூலம் "லக்கி 7" தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்காக தகுதி பெற்ற அதிஷ்டசாலிகள்
M.C. சுஜீவ குமார - ஹோமகம.
U.B.H. தயானந்த ஜயதிலக - கலபதுவாவ.

ரூபா 50,000 விதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மொனராகலை | 600004091-1-02 |
| மாத்தளை | 600003230-1-42 |
| கேகாலை | 600004963-1-38 |
| கொழும்பு | 600014281-1-01 |
| களுத்துறை | 600008282-1-28 |
| நுவரேலியா | 600005217-1-13 |
| கொழும்பு | 600001838-1-34 |
| புத்தளம் | 600005582-1-12 |

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,954,360/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 19,234,960/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2010 மே 13 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்



## யாழ் வசந்தம் வியாபாரத் திட்டம்

வெளிநாட்டு நிறுவனம், உங்கள் மண்ணில் வியாபாரம் செய்யக்கூடியவாறு ஒழுங்குகள் செய்து தரப்படும். பொன்னான காலத்தை மண்ணாக்க வேண்டாம். இன்றே அழைக்கவும்.

தொடர்புகளுக்கு
Business Development(Pvt)Ltd
077 5267655



## ஏல விற்பனை அறிவித்தல்

### தேசிய சேமிப்பு வங்கியில் மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியில் பின்வரும் கிளைகளில் 31.03.2009 வரை அடகு வைத்து 31.03.2010 வரைக்கும் மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏல விற்பனைத் திகதி
05.06.2010 (சனிக்கிழமை)
காலை 8.30 மணி

| கிளையின் பெயர் | ஏல விற்பனை நடைபெறும் இடம் |
|---|---|
| யாழ்ப்பாணம்<br>சுன்னாகம்<br>மானிப்பாய்<br>திருநெல்வேலி<br>அஞ்சல் வங்கி, யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணக் கிளை,<br>இல.496,<br>ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>தொ.பே: 021 222 2696 |

ஏலவிற்பனை இரத்துச்செய்யும்/ஒத்திவைக்கும் உரிமையை வங்கிகொண்டுள்ளது.

NSB National Savings Bank

உதவிப் பொதுமுகாமையாளர் (கடன்)
தேசிய சேமிப்பு வங்கி, தலைமை அலுவலகம்,
கொழும்பு-03.



## COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

மாணவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் கணனி ஆர்வலர்களுக்குமான அனைத்து தொழில்சார் கணனிக்கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| PROFESSIONAL DIPLOMA IN MICROSOFT OFFICE<br>3 Months<br>3,500/= | DIPLOMA IN PRINTING TECHNOLOGY & DESK TOP PUBLISHING<br>4 Months<br>~~22,500/=~~ 4,500/= | DIPLOMA IN SERVER TECHNOLOGY & WEB PAGE DESIGNING<br>3 Months<br>~~22,500/=~~ 4,500/= |
| DIPLOMA IN GRAPHIC DESIGNING & ADVERDISEMENT MARKETING<br>4 Months<br>~~22,500/=~~ 4,500/= | DIPLOMA IN HARDWARE ENGINEERING & NET WORKING<br>3 Months<br>~~20,000/=~~ 4,000/= | DIPLMA IN AUTO CAD & ARCETECTURE DESIGNING<br>3 Months<br>~~22,500/=~~ 4,500/= |
| DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING & E-COMMERCE<br>3 Months<br>~~22,500/=~~ 4,500/= | DIPLOMA IN COMPUTER SCIENCE & PROGRAMMING<br>4 Months<br>~~22,500/=~~ 4,500/= | HONOURS DIPLOMA IN INFORMATION TECHNOLOGY<br>4 Months<br>~~32,500/=~~ 6,500/= |

50% Off Advance Courses


DIPLOMA IN FILM TECHNOLOGY & VIDEO EDITING ~~10,000/=~~ 5,000/=
DIPLOMA IN STUDIO TECHNOLOGY & MULTI MEDIA ~~9,500/=~~ 4,750/=

100% செய்முறைப் பயிற்சி
தவணை முறையில் பாடநெறிக் கட்டணம்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Batch i :- 14.05.2010 10am or 3pm
Batch ii :- 15.05.2010 10am or 3pm
Batch iii :- 18.05.2010 10am or 3pm
Batch iv :- 19.05.2010 10am or 3pm

ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கானை மாவடி இந்துமன்றம் சித்திரா பௌர்ணமியை ஒட்டி நடத்திய பாரம்பரிய விளையாட்டுப் போட்டியின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இளைஞர்களின் தலையணைச் சண்டையையும் சறுக்கு மரத்தில் ஏறுவதற்கு ஆயத்தமாகும் இளைஞர்களையும் பலூன் ஊதி வெடிக்க வைக்கும் போட்டியில் பெண்கள் பங்குபற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: சங்கானைச் செய்தியாளர்)

## யாழ்.மாவட்ட கல்வி வலய மெய்வன்மைப் போட்டி சென்றலில்

வலி.வடக்கு, மே 12

யாழ்.மாவட்டக் கல்வி வலயங்களுக்கு இடையே எதிர்வரும் 21ஆம்,22ஆம், 23 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற விருந்த மெய்வன்மைப் போட்டிகள் நடைபெற மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக இப்போட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் 20ஆம்,21ஆம்,22ஆம் திகதிகளில் நடைபெறும் என யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சண். தயாளன்அறிவித்துள்ளார். (6-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்கள், ஆசிரியர்கள் கௌரவிப்பு

வலி.வடக்கு,மே 12

கடந்த வருடம் 2009 ஆம் ஆண்டு தேசிய மட்டப் போட்டிகளில் சாதனை படைத்த வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் வீரர்கள், வீராங்கனைகளும் ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சுன்னாகம் இலங்கை வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.பி.அரசகுமார் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் கோலூன்றிப் பாய்தல் போட்டியில் தேசிய மட்டத்தில் பதக்கங்களைப் பெற்ற 17 வயதுப் பிரிவில் ம.திருவரன்,கு.அனோஷன்.

19 வயதுப் பிரிவில் ச.தனுஜா, 21 வயதுப் பிரிவில் கோ.கணதீபனும், நிறவிருது பெற்றவர்கள் வரிசையில் 17 வயதுப் பிரிவில் அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த இ.ஜக்ஷனா, சி.பத்மசந்தியா, மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.மோருநாத், 19 வயதுப் பிரிவிலும் கௌரவிக்கப்பட்டார்கள்.

2009 ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் இடம்பெற்ற ஆசிரியர்களுக்கான போட்டியில் குண்டெறிதல், தட்டெறிதல், ஈட்டி எறிதல் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுச் சம்பியனாகிய அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ஆசிரியர் த.வாகீஸ்வரன், உயரம் பாய்தலில் முதலாம் இடம் பெற்ற தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த சி.கமலமோகனும் கௌரவிக்கப்பட்டார்கள்.

மற்றும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ஆசிரியர்களான சி.சுபாஸ்கரன், த.வாகீஸ்வரன் சிறந்த பயிற்றுநர்களுக்கான விருதுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். (6-86)

# வலிகாமம் கல்வி வலயப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மே 12

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் பெயர் விவரங்கள் வருமாறு:

**மென்பந்து 19 வயதுப்பிரிவு (பெண்கள்)**

விக்ரோறியாக் கல்லூரி (முதலாம் இடம்), அருணோதயாக் கல்லூரி (இரண்டாம் இடம்), உடுவில் மகளிர் கல்லூரி (மூன்றாம் இடம்).

**சதுரங்கம் 19 வயதுப்பிரிவு (பெண்கள்)**

மகாஜானக் கல்லூரி (முதலாம் இடம்), அருணோதயாக் கல்லூரி (இரண்டாம் இடம்).

**15 வயதுப்பிரிவு (பெண்கள்)**

அருணோதயாக் கல்லூரி(முதலாம் இடம்), விக்ரோறியாக் கல்லூரி (இரண்டாம் இடம்), மகாஜானக் கல்லூரி (மூன்றாம் இடம்).

**பூப்பந்து (பெண்கள்)**

உடுவில் மான்ஸ் பாடசாலை (முதலாம் இடம்), உடுவில் மகளிர் கல்லூரி(இரண்டாம் இடம்), இராமநாதன் கல்லூரி ( மூன்றாம் இடம்).

**மேசைப்பந்தாட்டம் 19 வயதுப்பிரிவு (பெண்கள்)**

யூனியன் கல்லூரி (முதலாம் இடம்), உடுவில் மகளிர் கல்லூரி (இரண்டாம் இடம்), அராலி சரஸ்வதி வித்தியாலயம் (மூன்றாம் இடம்).

**எல்லே 19 வயதுப்பிரிவு (ஆண்கள்)**

அருணோதயாக் கல்லூரி (முதலாம் இடம்), குளமங்கால் ஆர்.சி. (இரண்டாம் இடம்), சென். ஹென்றியரசர் கல்லூரி (மூன்றாம் இடம்)

**கபடி 19 வயதுப்பிரிவு**

சென்.ஹென்றியரசர் கல்லூரி (முதலாம் இடம்), இணுவில் சென்றல் கல்லூரி (இரண்டாம் இடம்), இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் ( மூன்றாம் இடம்).

**உதைபந்தாட்டம் 17 வயதுப்பிரிவு (ஆண்கள்)**

சென்.ஹென்றியரசர் கல்லூரி (முதலாம் இடம்),மானிப்பாய் இந்துக் கல்லூரி (இரண்டாம் இடம்), மகாஜானக் கல்லூரி (மூன்றாம் இடம்).

**19 வயதுப்பிரிவு ( ஆண்கள்)**

மானிப்பாய் இந்துக் கல்லூரி (முதலாம் இடம்), யூனியன் கல்லூரி (இரண்டாம் இடம்), சென். ஹென்றியரசர் கல்லூரி (மூன்றாம் இடம்).

**கரப்பந்தாட்டம் 15 வயதுப்பிரிவு (ஆண்கள்)**

அருணாசலம் மகாவித்தியாலயம் (முதலாம் இடம்), சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி (இரண்டாம் இடம்), வசாவிளான் மகா வித்தியாலயம் ( மூன்றாம் இடம்).

**17 வயதுப்பிரிவு (ஆண்கள்)**

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் (முதலாம் இடம்), சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ( இரண்டாம் இடம்), மானிப்பாய் இந்துக் கல்லூரி (மூன்றாம் இடம்).

**19 வயதுப்பிரிவு (ஆண்கள்)**

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி (முதலாம் இடம்), இணுவில் மத்திய கல்லூரி (இரண்டாம் இடம்), மானிப்பாய் இந்துக் கல்லூரி (மூன்றாம் இடம்).

**கூடைப்பந்தாட்டம் 19 வயதுப்பிரிவு ( ஆண்கள்)**

யாழ்ப்பாணக் கல்லூரி (முதலாம் இடம்), சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி (இரண்டாம் இடம்).

**மென்பந்து கிரிக்கெட் (ஆண்கள்)**

மகாஜனக் கல்லூரி ( முதலாம் இடம்), ஸ்கந்தவரோதயாக் கல்லூரி (இரணடாம் இடம்), இணுவில் மத்திய கல்லூரி (மூன்றாம் இடம்).

**மேசைப்பந்தாட்டம் 19 வயதுப் பிரிவு (ஆண்கள்)**

யூனியன் கல்லூரி (முதலாம் இடம்), ஸ்கந்தவரேதயாக் கல்லூரி (இரண்டாம் இடம்), மானிப்பாய் இந்துக் கல்லூரி (மூன்றாம் இடம்).

**சதுரங்கம் 15 வயதுப் பிரிவு (ஆண்கள்)**

மகாஜனாக் கல்லூரி (முதலாம் இடம்), அருணோதயாக் கல்லூரி (இரண்டாம் இடம்),விக்ரோறியாக் கல்லூரி (மூன்றாம் இடம்)

**19 வயதுப் பிரிவு (ஆண்கள்)**

யூனியன் கல்லூரி (முதலாம் இடம்), மகாஜனாக் கல்லூரி (இரண்டாம் இடம்), வசாவிளான் மத்திய கல்லூரி (மூன்றாம் இடம்).

**பூப்பந்து 19 வயதுப் பிரிவு (ஆண்கள்)**

மானிப்பாய் இந்துக் கல்லூரி (முதலாழ் இடம்),வசாவிளான் மத்திய கல்லூரி (இரண்டாம் இடம்), உடுவில் மான்ஸ் வித்தியாலயம் (மூன்றாம் இடம்). (6-23)

## வலிகாமம் கல்வி வலயத்தின் சதுரங்கப் போட்டி இன்று

வலி.வடக்கு,மே12

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 15,19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான சதுரங்கப் போட்டிகள் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல் லூரியில் நடைபெறவுள்ளது.

இதேவேளை பெண்களுக்கான போட்டிகள் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும் வலிகாமம் கல்வி-வலய உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராசா அறிவித்துள்ளார். (6-86)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மே 12

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன் கிழமை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

பி.ப.3.30 மணி நல்லூர் பிரதேச செயலக அணி எதிர் உடுவில் பிரதேச செயலக அணி.

பி.ப.4 மணி கோப்பாய் பிரதேச செயலக அணி எதிர் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி (6-23)

## யாழ்.மாவட்ட கல்வி வலய கரப்பந்தாட்டப் போட்டி இன்று

வலி.வடக்கு,மே12

யாழ்.மாவட்ட கல்வி வலயங்களுக்கு இடையேயான 15,17,19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு புத்தூர் ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.கல்விவலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்.தயாளன் அறிவித்துள்ளார். (6-86)



கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கான வீதியோட்ட நிகழ்வின்போது ஆசிரிய மாணவர்கள் வீதியோட்டத்தில் ஈடுபடுவதை முதலாவது படத்திலும் ஆண்களுக்கான போட்டியில் முதலிடம் பெற்ற எம்.எல்.இட்யாஸிற்கான பரிசினைக் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை வழங்கிக் கௌரவிப்பதையும் போட்டியில் முதன்மை பெற்ற வீரர்கள் கலாசாலை விரிவுரையாளர்களுடன் நிற்பதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: கோப்பாய்ச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நளினி கைத்தொலைபேசியில் யாருடன் பேசினார்? முழுமையான விசாரணைகள் அவசியம்!

## சட்டசபையில் காங்கிரஸ் வலியுறுத்து



சென்னை,மே 12

நளினி, யார் யாரிடம் எல்லாம் கைத்தொலைபேசியில் பேசினார் என்பது குறித்து முழுமையாக விசாரணை நடத்த வேண்டும் - என்று காங்கிரஸ் உறுப்பினர் சுதர்சனம் வலியுறுத்தினார்.

சட்டசபையில் அவர் பேசியவை வருமாறு -

பாதுகாப்பு மிகுந்த சிறையில் இருக்கும் நளினி கைத்தொலைபேசியில் பலருடன் பேசியுள்ளார். ஏராளமான சிம்கார்டுகளை வைத்துக்கொண்டு, பல நாள்களாக பிரான்ஸ், கனடா உள்ளிட்ட நாடுகளில் உள்ள வர்களுடன் பேசியிருக்கிறார். இது மிகவும் ஆபத்தானது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர், முன்னாள் பிரதமர் ராஜீவை மனித வெடிகுண்டு மூலம் வெடிக்கச் செய்து அவரை சுக்கு நூறாக்கிய கும்பலைச் சேர்ந்த ஒருவர், பாதுகாப்பு மிகுந்த சிறையில் இருந்து கைத்தொலைபேசியில் தொடர்ந்து பேசியிருக்கிறார் என்றால், சிறைத் துறையில் எங்கேயோ ஓட்டை இருக்கிறது என்றுதான் அர்த்தம். அவர் ஒரு தேச விரோத சக்தி. அவரை கண்காணிப்பது மிகவும் முக்கியம்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் துரைமுருகன் -

சிறைக் காவலர்கள் மிகுந்த கவனத்துடன் நளினியை கண்காணித்து வருகின்றனர். இதனாலேயே அவரிடம் கைத்தொலைபேசிகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டன - என்றார்.

தொடர்ந்தும் டி.சுதர்சனம் பேசுகையில் -

ஓர் ஆண்டாக இப்படி பேசி வந்திருக்கிறார். அதுதான் முக்கியம். சிம்கார்டுகளை மாற்றி மாற்றி பேசியிருக்கிறார். இது வேறு ஒரு பெரிய அசம்பாவித சம்பவத்துக்கு வழிவகுத்துவிடாமல் இருக்க வேண்டுமானால், இந்த கைத்தொலைபேசிப் பேச்சுகள் குறித்து முழுமையாக விசாரிக்கவேண்டும்.

அவர் எந்தெந்த நாடுகளில் உள்ளவர்களுடன் பேசினார் என்பதை கண்டுபிடிக்க, மத்திய அரசின் உதவியைக் கூட நீங்கள் நாடலாம். மீண்டும் இந்த மண்ணில் எவ்வித அசம்பாவிதமும் நடந்துவிடக் கூடாது. நளினி, யார் யாருடன் பேசினார் என்பதை கண்டுபிடிக்க வேண்டும்

இடையில் குறுக்கிட்ட வை.சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்) -

நளினியை ஏதோ தேச விரோத சக்தி போல குறிப்பிட்டுப் பேசுகிறீர்களே, அப்படியானால், உங்கள் கட்சி தலைவியின் மகள் பிரியங்கா ஏன் சந்தித்தார்? - என்றார்.

அதற்கு பீட்டர் அல்போன்ஸ் (காங்.) -

ஒரு குற்றச் செயலில் ஈடுபட்டவரை அவரால் பாதிக்கப்பட்டவர்கள் மன்னிப்பது என்பது அவர்களது தனிப்பட்ட விடயம். ஆனால், நாட்டுக்கு எதிராக குற்றம் இழைத்த நளினி சட்டப்படி தண்டனை பெறவேண்டியவர். ராஜீவ் காந்தி கொலை குறித்து தா.பாண்டியன் எழுதியுள்ள புத்தகத்தை சிவபுண்ணியம் படித்துப் பார்க்க வேண்டும் - என்று கூறினார்

அப்போது அமைச்சர் துரைமுருகன் -

நளினி கைத்தொலைபேசி மூலம் தனது மகளிடம் பேசியுள்ளார். இலங்கையில் உள்ள சிலரிடம் பேசியுள்ளார். வெளி நாடுகளில் வேறு எவரிடமாவது அவர் பேசியுள்ளாரா என்பது குறித்து விசாரித்து வருகிறோம்.

இதுவரை விசாரணையில் தெரிய வந்த விவரங்கள் அனைத்தும் பேரவையில் தெரிவிக்கப்பட்டுவிட்டன. தேச விரோத சக்திகளை அவர் தொடர்பு கொண்டமைபோல ஒரு நினைப்பை ஏற்படுத்தும் விதமாக சுதர்சனம் பேசுகிறார் - என்று கூறினார்.

அதற்கு டி.சுதர்சனம் -

வழக்கு விசாரணையில் இருக்கும்போது, மகளுடன் பேசினார் எனக் கூறுவது சரியல்ல. நளினி பேச்சு குறித்து, முழுமையாக விசாரணை நடத்த வேண்டும். அதுதான் எங்கள் கோரிக்கையே தவிர இதில், வேறு நோக்கம் எதுவும் இல்லை - என்றார்.

# செம்மொழி மாநாட்டிற்காக ரஹ்மான் இசையில் பாடல்

## 15 ஆந் திகதி சி.டி. வெளியீடு

சென்னை,மே12

கோவையில் நடைபெறும் உலக தமிழ் செம்மொழி மாநாட்டிற்காக முதல்வர் கருணாநிதி எழுதி ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்த மாநாட்டு மைய நோக்கு பாடல் சி.டி. சென்னையில் 15ஆம் திகதி வெளியிடப்படுகிறது.

உலகத் தமிழ்செம்மொழி மாநாடு கோவையில் அடுத்த மாதம் (ஜுன்) 23 ஆம் திகதி தொடங்கி 27ஆம் திகதிவரை 5 நாள்கள் கோலகலமாக நடைபெற உள்ளது.

பொதுவாக ஒலிம்பிக் உட்பட சர்வதேச அளவிலான போட்டிகள் நடைபெறும் போது அதை மையப்படுத்தி பாடல் (தீம் சாங்) இசைக்கப்படுவது வழக்கம். இதே போல், தமிழ் செம்மொழி மாநாட்டிற்கும் மைய நோக்கு பாடல் உருவாக்கப்பட்டுள்ளது.

# கொழும்புத் திரைப்பட விழாவில் 'இராவணன்' கலந்துகொள்ளாது!

## இயக்குநர் மணிரத்தினம் பேட்டி



சென்னை,மே 12

இலங்கையில் நடைபெறும் இந்திய திரைப்பட விழாவில், 'இராவணன்' படம் கலந்துகொள்ளாது. நானும் கலந்து கொள்ள மாட்டேன் - என்று இயக்குநர் மணிரத்தினம் கூறினார்.

கணவர்களால் கைவிடப்பட்ட மற்றும் விதவைகள் போன்ற தனித்து வாழும் பெண்களுக்கு உதவுவதற்காக மணிரத்தினமும், அவருடைய மனைவி சுஹாசினியும் ஒரு அறக்கட்டளையை தொடங்கியிருக்கிறார்கள். இந்த அறக்கட்டளை சார்பில் 83 பெண்களுக்கு சுயதொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்கான தையல் இயந்திரங்கள், கிரைண்டர், 3 சக்கர வண்டிகள் என்பவற்றை வழங்கிய மணிரத்தினம் அங்கு பேசியவை வருமாறு -

சினிமாவுக்காக கதை - திரைக்கதையை உருவாக்கி, படப்பிடிப்பு நடத்தி, எடிட்டிங் செய்து அந்தப் படத்தை திரைக்கு கொண்டுவருவதற்குள், ஒரு வாழ்க்கையை வாழ்ந்த மாதிரி ஒரு உணர்வு ஏற்படுகிறது.

ஆனால், இந்த பெண்கள் ஆரம்பத்திலேயே வாழ்க்கையை தொலைத்துவிட்டு நிற்கிறார்கள். இதுவரை நான் சினிமா மூலம் மக்கள் பிரச்சினைகளைச் சொன்னேன். இப்போது இந்த அமைப்பு மூலம் மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைத் தெரிந்து கொண்டேன் - என்றார்.

இலங்கையில் நடைபெறும் இந்திய திரைப்பட விழாவில், மணிரத்தினத்தின் 'ராவணன்' படம் திரையிடப்பட இருக்கிறது எனவும், மணிரத்தினமும் அந்த விழாவில் கலந்துகொள்ள வாய்ப்பு உள்ளது என்றும் செய்திகள் வெளியானமை பற்றி மணிரத்தினத்திடம் கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்து அவர் கூறியவை வருமாறு -

'இராவணன்' படம் இன்னும் தயாராகவில்லை. படத்தின் இறுதிக்கட்டப் பணிகள் இன்னும் முடியவில்லை. படமே தயாராகாத நிலையில், எப்படி அந்தப் படத்தை திரையிட முடியும்? 'இராவணன்' படம் அடுத்த மாதம்தான் முடிவடையும்.

கொழும்பு விழாவில் நான் கலந்து கொள்ள மாட்டேன் - என்றார். (ர)

# இந்தியச் செய்திகள்

# இராமேஸ்வரம் மீனவர் மீது இலங்கைப் படை தாக்குதல்

இராமேஸ்வரம்,மே.12

இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்க சென்ற நாட்டுப்படகு மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கி மீன்களை பறித்துச் சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்குள்ளான மீனவர்கள் பாக்கியராஜ் (வயது - 30), ஷெரின் (வயது - 30) ஆகியோர் கூறியவை வருமாறு -

இராமேஸ்வரம் அருகே தங்கச்சிமடம் சூசையப்பர் பட்டிணம் கடற்கரையிலிருந்து மே 8 இல் ஏராளமான நாட்டுப்படகுகளில் வழக்கம்போல் மீன்பிடிக்க சென்றோம். நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது படகில் ரோந்து வந்த இலங்கைக் கடற்படையினர் ரோந்து படகால் எங்களது படகின் மீது மோதி சேதத்தை ஏற்படுத்தினர்.

திசைகாட்டும் ஜி.பி.எஸ். கருவி மற்றும் மொபைல் போனை பறித்துக்கொண்டு பிளாஸ்டிக் பைப்பினால் எங்களை அடித்து எச்சரிக்கை செய்து விரட்டியடித்தனர். பின் படகில் பிடித்து வைத்திருந்த நண்டு, சிங்கி இறால் மற்றும் சமையலுக்கு வைத்திருந்த அரிசி பைகளையும் பறித்துக் கொண்டனர். இதனால், உயிருக்கு பயந்து இராமேஸ்வரம் திரும்பி விட்டோம் - என்றனர்.

# பிரபாகரன் பெயரை பச்சைக்குத்தியவர் இலங்கையரல்லர்; பொலிஸார் நிம்மதி

## புலிகளுக்கும் அவருக்கும் தொடர்பில்லையாம்

மதுரை,மே 12

வேலுப்பிள்ளை பிரபாகரன் என உடலில் பச்சை குத்திய நிலையில் இறந்தவர் பற்றிய விவரம் தெரியவந்துள்ளது.

தாராபுரம் பஸ் ஸ்டாண்டில் கடந்த 7 ஆம் திகதி காலை, 41 வயது மதிக்கத்தக்க ஆண் திடீரென இடது கால், கை செயற்படாமல் மயங்கி விழுந்தார். பஸ் நிலையத்தில் காத்திருந்தவர்கள், மயங்கி விழுந்த நபரை, அங்கு தயாராக நின்றிருந்த அம்புலன்ஸில் ஏற்றி, அரச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

அடையாளம் தெரியாத நபரின், வலது மார்பகத்தின் மேல் 'வேலுப்பிள்ளை பிரபாகரன்' என பச்சை குத்தியிருந்ததைப் பார்த்து, அதிர்ச்சியடைந்த வைத்தியசாலை ஊழியர்கள் உடனடியாக பொலிஸுக்குத் தகவல் கொடுத்தனர்.

ஆனாலும், சிகிச்சை பலனின்றி கடந்த ஞாயிறன்று அதிகாலை 3.30 மணிக்கு இறந்தார். அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சேர்ந்தவரா என்று பொலிஸார் விசாரணையை ஆரம்பித்தனர். விசாரணையில் உடனடி தகவல் கிடைக்காதமையால் திணறினர்.

நேற்றுமுன்தினம் மாலை அவரது மனைவி மற்றும் உறவினர்கள் தாராபுரம் பொலிஸ் நிலையத்துக்கு வந்து விளக்கம் கொடுத்தனர். இறந்தவர் மதுரை மாவட்டம் மாகாளிபட்டி கிராமத்தைச் சேர்ந்தவர். திருப்பூரில் மனைவி ஆதிமுத்துவுடன் வசித்து வந்தார்.

இவர் விடுதலைப் புலிகள் இயக்கம் மீது பற்றுள்ளவர். இதனால்தான், விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரின் பெயரை உடலில் பச்சை குத்தியுள்ளார். மற்றபடி அவருக்கும், அந்த இயக்கத்துக்கும் சம்பந்தமில்லை என்பது தெரிந்தது.

# பிரபாவின் தாயார் பார்வதி அம்மாளுக்கு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை!

## திருமா எம்.பி. வலியுறுத்து



கொழும்பு,மே12

பார்வதி அம்மாளுக்கு தமிழக அரசின் செலவிலேயே முழுமையான பாதுகாப்புடன் கூடிய சிறப்பான மருத்துவம் கிடைக்கும் வகையில் தனியார் வைத்தியசாலையில் அவரை அனுமதிக்க வேண்டுமாறு முதல்வர் கருணாநிதியை விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவித்திருப்பவை வருமாறு -

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளுக்கு தமிழகத்தில் மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கு இந்திய அரசு அனுமதி வழங்கியிருப்பது ஆறுதலை அளிக்கிறது. இதற்கான முயற்சிகளை மேற்கொண்ட தமிழக அரசுக்கும் குறிப்பாக தமிழக முதல்வர் கருணாநிதிக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த ஏப்ரல் 16 அன்று மலேஷியாவிலிருந்து தமிழகத்திற்கு வருகைதந்த பார்வதியம்மாள் அவருடைய வயது முதிர்ந்த நிலையையும் உடல்நலிவையும் பொருட்படுத்தாமல் சென்னை விமான நிலையத்திலிருந்து மீண்டும் மலேஷியாவிற்குத் திருப்பி அனுப்பிய செயல் மனித நேயம் உள்ள எவராலும் சகித்துக்கொள்ள முடியாத் ஒன்றாகவே அமைந்தது. மனிதாபிமானம் உள்ள ஒவ்வொருவரும் அந்தச் செயலைக் கண்டிக்கவும் நேர்ந்தது.

இந்நிலையில் பார்வதி அம்மாளுக்கு தமிழகத்தில் சிகிச்சை அளிக்க ஆவன செய்யவேண்டுமாறு நாம் கோரிக்கை விடுத்தோம். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று எமக்கு முதல்வர் வாக்குறுதி அளித் தார். அதன்படி இந்திய அரசுக்கு மடல் எழுதி இன்று அதிகார பூர்வமான அனுமதியைப் பெற்றிருக்கிறார்.

சிகிச்சை அளிப்பது மற்றும் பார்வையாளர்களைச் சந்திப்பது தொடர்பாக சில நிப்பந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

பார்வதி அம்மாளின் உடல் நலத்தை மட்டும் முதன்மையாகக் கொண்டு இத்தகைய நிபந்தனைகளை அரசியலாக்காமல் அவற்றை வரவேற்கக் கடமைப்பட்டுள்ளோம்.

எனினும், பார்வதி அம்மாளுக்கு தமிழக அரசின் செலவிலேயே முழுமையான பாதுகாப்புடன் கூடிய சிறப்பான மருத்துவம் கிடைக்கும் வகையில் தனியார் வைத்தியசாலையில் அவரை அனுமதிக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் ஈராக்கில் 100 பேர் பலி! 350 பேர் காயம்!!

பக்தாத், மே 12

ஈராக்கில் பல்வேறு இடங்களில் தொடர்ச்சியாக இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள், துப்பாக்கிப்



பிரயோகங்கள் ஆகியவற்றிற்கு நூற்றுக்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். 350 பேர் வரை காயமடைந்துள்ளனர். இவ்வாண்டு இடம்பெற்றுள்ள அதிகுரூரமான வன்முறை இதுவென தெரிவிக்கப்படுகிறது.

மத்திய நகரான ஹிலாவிலுள்ள புடவைத் தொழிற்சாலை வளாகத்தில் இடம்பெற்ற மூன்று தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களில் குறைந்தபட்சம் 45 பேர் கொல்லப்பட்டனர். 140 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். இவர்கள் அனைவரும் புடவைத் தொழிற்சாலை ஊழியர்களாவர்.

புடைவைத் தொழிற்சாலை ஊழியர்கள் மதியம் தத்தம் வீட்டுக்குச் செல்வதற்காக பஸ்களில் ஏறிக்கொண்டிருந்த சமயம், பயங்கரமாக அப்பகுதியில் இரு கார்க்குண்டுகள் வெடித்தன. இவற்றையடுத்து, அப்பகுதியில் அவலக் குரல்களும், அபயக் குரல்களும் ஒலித்தன. குண்டு வெடிப்புகளை அடுத்து, கரும்புகைமண்டலங்கள் அப்பகுதியை மறைத்தன என நேரில் கண்டவர்கள் தெரிவித்தார்கள்.

காயமடைந்தவர்களுக்கு உதவுவதற்காக அப்பகுதியை நோக்கி பாதசாரிகளும், அவசரகாலச் சேவை ஊழியர்களும் விரைந்தார்கள். அச்சமயம், ஒரு தற்கொலை குண்டுதாரி, தான் மறைத்து வைத்திருந்த குண்டை வெடிக்க வைத்தார். இம் மூன்று குண்டுத் தாக்குதல்களிலும் 45 பேர் பலியாயினர். 140 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்றும் அவர்கள் விளக்கினார்கள்.

''பயங்கரக் குண்டுத் தாக்குதல்களால் பீதியடைந்த மக்கள் சிதறி பல திசைகளிலும் ஓடிக்கொண்டிருந்தார்கள். குண்டுகள் வெடித்த பகுதிகளில் சடலங்கள் சிதைந்து கிடந்தன. எரிகாயங்களுக்குள்ளான பலர் வேதனையில் துடித்துக்கொண்டிருந்தனர். மற்றும் பலர் அழுது புலம்பிக்கொண்டிருந்தார்கள். படுகாயமடைந் தவர்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்கள்'' என நேரில் கண்ட ஜசீம் ஷாட் அபிட் என்பவர் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

''படுகாயங்களுடன் தரையில் கிடந்த டசின் கணக்கானோர் உதவி கோரிக்கொண்டிருந்தார்கள். கொல்லப்பட்டவர்களும், காயமடைந்த வர்களும் அப்பாவிகள் ஆவர். தீவிரவாதிகள் அல்லர்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, திங்கட்கிழமை அதிகாலை தீவிரவாதிகள் சைலன்சர் பொருத்திய துப்பாக்கிகளால் தலைநகரான பக்தாத்திலுள்ள சோதனைச் சாவடிகள் மீது சுட்டு வெறியாட்டம் ஆடினர். இவற்றிற்கு ஏழுபேர் பலியாயினர். இவர்களில் பொலிஸாரும், இராணுவச் சிப்பாய்களும் அடங்குவர்.

தென் பக்தாத்திலுள்ள சிறிய நகரான அல்-சுவர்யா சந்தைப் பகுதியில் இடம்பெற்ற இரட்டைத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 11 பேர் கொல்லப்பட்டனர். நாற்பதுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

தென் எண்ணெய்வள பிராந்திய நகரான பஸ்ராவில் மூன்று கார்க்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இவற்றில் 20 பேர் கொல்லப்பட்டனர். டசின் கணக்கானோர் காயமடைந்தனர். பல கடைகள் சேதமடைந்தன.

சுனி முஸ்லிம்களை பெரும்பானமையினராகக் கொண்ட பளுஜாவில் இடம்பெற்ற இரு குண்டுத் தாக்குதல்களில் நான்கு பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் பொலிஸ் அதிகாரியும் அவரது பாரியாரும் அடங்குவர்.

இஸ்கந்திரியா, தென் பக்தாத், தலைநகரின் வடக்கிலுள்ள மொசூல் ஆகிய இடங்களிலும் திங்கட் கிழமை பரவலாகத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அதனால் மரணித்தோரின் எண்ணிக்கையும், காயமடைந்தோரின் எண்ணிக்கையும் வெகுவாக அதிகரிக்கக்கூடும் என அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளார்கள். ''ஈராக்கிலுள்ள அல்-குவைதா தீவிரவாதிகளே திங்கட்கிழமை இத்தொடர் தாக்குதல்களை நடத்தியுள்ளார்கள். தாக்குதல் முறைமையில் அல்-குவைதாவின் முத்திரையே பிரதிபலிக்கின்றது'' என அதிகாரிகள் குறிப்பிடுகிறார்கள்.



இச்சம்பவங்கள் மூலமாக ஈராக்கில் அல்-குவைதா இன்னும் வலுவான சக்தியாகவே உள்ளது என தெரியவந்துள்ளது என பக்தாத்திலுள்ள பி.பி.ஸி. நிருபர் கபிரியல் கேட் ஹவுஸ் குறிப்பிட்டுள்ளார்.

## உலக அரங்கில்

### ஈரான் ஏவுகணை சோதனை

தெஹ்ரான், மே 12



ஈரான் திங்கட்கிழமை முதன்முதலாக கடலுக்குள் குறைந்த தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணைச் சோதனை நடத்தியது. அதன் பெயர் பாஜா - 5. இது சுமார் 75 கி.மீ. தூரம் சென்று இலக்கை தாக்கக்கூடியது.

இதற்கு முன்னர் போரின்போது இது பயன்படுத்தப்படவில்லை. தற்போதுதான் முதன்முதலாக வளைகுடா கடலில் தண்ணீருக்குள் ஏவி சோதித்துப் பார்க்கப்பட்டது. இந்தத் தகவலை இராணுவ துணை தலைமை அதிகாரி கியோமர்ஸ் ஹைதரி தெரிவித்தார். ஏற்கனவே இந்த ஏவுகணை கடலுக்கு வெளியே ஏவி சோதனை நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அகதிகளை மீள அனுப்பும் முயற்சிக்கு எதிராக ஆஸியில் போராட்டம் வெடிக்கும் பேரபாயம்!

## உஷார் நிலையில் தடுப்பு முகாம் அதிகாரிகள்

சிட்னி, மே 12

2001 ஆம் ஆண்டு முதல் அடைக்கலம் பெறுவதற்கான கோரிக்கையில் தோல்வி கண்ட ஆப்கான் அகதிகளைத் திரும்ப தங்கள் நாட்டிற்கு அனுப்பிவைக்க அரசு முதன்முறையாக நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்து பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறலாம் என்ற பதற்றம் எழுந்துள்ளது. இதனால் தடுப்பு முகாம் காவலர்கள் உஷார்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஏப்ரல் 9 ஆம் திகதிக்குப் பின்னர் அரசியல் அபயம் கோரி தங்கள் நாடுகளிலிருந்துவரும் அகதிகளுக்கு புகலிடம் கொடுப்பதற்கான நடைமுறைகளை அரசு இடைநிறுத்தம் செய்துள்ளது. அதனால் அதுமுதல் இலங்கை, ஆப்கான் அகதிகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துவருகிறது. எனினும், இவர்களுக்கு விஸா வழங்க மறுக்கப்பட்டுள்ளது.

அரசியல் அபயம் கோரி சமர்ப்பிக்கப்பட்ட 25 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன. இதையடுத்து, கிறிஸ்மஸ் தீவில் தடுத்துவைக்கப்பட்ட 300 பேர் கடந்த வாரம் மீண்டும் தம் முகாம்களுக்குச் செல்லவில்லை. இதற்கான உத்தரவை அவர்கள் உதாசீனப்படுத்திவிட்டு தடுப்பு முகாம் சதுக்கத்தில் ஒரு நாளிரவைக் கழித்துள்ளார்கள்.

கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டதை அடுத்து, சிட்னியிலுள்ள விலாவுட்டில், அரசியல் தஞ்சம் கோருவோரில் 25 பேர் சிறிய ஆட்சேப ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளார்கள். இவர்களில் ஈராக்கியரும், இலங்கையரும் அடங்குவர்.

இது குறித்து குடிவரவு அமைச்சர் கிரஸ் இவான்ஸ் குறிப்பிடுகையில், ''விடயங்கள் மாற்றமடைந்துள்ளன என்ற செய்தி மக்களுக்கு எட்டியுள்ளது. அதன் அறிகுறிதான் சமீபத்தைய ஆர்ப்பாட்டம்'' என தெரிவித்துள்ளார்.

''பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால்தான் இந்த நடைமுறை கடந்த சில வாரங்களாக அதிர்ச்சிக்கும், அதிருப்திக்கும் உள்ளாகி வந்துள்ளது என நான் நினைக்கிறேன்'' என்றும் செனட்டர் இவான்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

''நாம் வெற்றிகரமாக சிலரை அனுப்பி வைத்தால் நிச்சயமாக தற்போது அது ஒரு வலுவான சமிக்ஞையாக அமையலாம். இதில் சந்தேகமில்லை'' என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

கடந்தகாலம் அகதிகள் விஸா பெறுவதற்கான நடைமுறைகள் சில இனக் குழுக்களுக்குத் தளர்த்தப்பட்டன. இதுவே இங்கு வருவதற்கான தூண்டுகோலாகவும் அமைந்துள்ளது. அதேவேளை, கடந்த 9 வருடகாலத்தில் அரசியல் அபயம் கோரி வந்த எந்த ஓர் ஆப்கானியரும் மீண்டும் அனுப்பப்படவில்லை என்பதையும் அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இரு தேர்தல்களுக்குப் பின்னர் தமிழர்களின் நிலைபாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள். அதேபோல ஆப்கானிஸ்தானில் சிறுபான்மையினமான ஹாஜாரா பெற்றுள்ள அதிக பாதுகாப்பு ஆகியவையும் அகதிகளின் கோரிக்கைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது கவனத்தில் கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஒசாமா பின்லேடனின் மறைவிடம் பாகிஸ்தானுக்கு நன்றாகத் தெரியும்

## அமெ. வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி சொல்கிறார்



வாஷிங்டன், மே 12

'பாகிஸ்தான் நிர்வாகத்திலுள்ள அதிகாரிகளுக்கு அல்-குவைதா தலைவர் ஒசாமா பின் லேடன் இருக்கும் இடம் தெரியும்'' என அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தாம் அளித்துள்ள பேட்டி ஒன்றில், ''பாகிஸ்தான் அரசின் உயர் அதிகாரிகள் பலருக்கு ஒசாமா, தலிபான் தலைவர் முல்லா ஓமர் ஆகியோர் மறைந்துள்ள இடம் நன்றாகத் தெரியும். இருப்பினும் அவர்கள் வாய் திறக்க மறுக்கின்றனர்'' எனக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

''முந்தைய நிலையை விட தற்போது பாகிஸ்தான், பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு நல்ல ஒத்துழைப்பு கொடுக்கிறது. இருப்பினும், அந்நாட்டிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கிறோம். அமெரிக்க தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளைப் பிடிக்க உதவி செய்து அவர்களை தண்டிப்பதற்கு வழி செய்ய வேண்டும். முக்கிய பயங்கரவாதிகளை பாகிஸ்தான் எங்களிடம் ஒப்படைக்கும் எனக் காத்திருக்கிறோம்'' என்றும் ஹிலாரி குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க சட்ட மா அதிபர் எரிக் ஹோல்டர் குறிப்பிடுகையில், ''நியூயோர்க் குண்டு வைப்பு சம்பவத்தின் பின்னணியில் தலிபான்கள் [illegible] இதற்காக அவர்கள் [illegible] ளனர்''என சுட்டிக்காட்டியுள்ளார்.

# செய்யாத கொலைக்குச் சிறைத்தண்டனை!

## 'இறந்தவர்' திரும்பியதால் 8 ஆண்டுகளின் பின் விடுதலை!

பீஜிங், மே 12

சீனாவில் செய்யாத குற்றத்திற்காக 8 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த ஸாகோ ஸாவேஹாய் (வயது - 57) வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டார்.

அவர் கொலை செய்யப்பட்டார் எனக் கூறப்பட்ட நபர் கடந்த 30 ஆம் திகதி வீடு திரும்பினார். இதையடுத்து ஸாவேஹாய் விடுதலை செய்யப்பட்டார். அவருக்கு இழப்பீடாக 44 ஆயிரம் அமெரிக்க டொலர் வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஸஹோலோ கிராமத்தில் வசித்து வந்த ஸாவேஹாய்க்கும் அவரது பக்கத்து வீட்டைச் சேர்ந்த ஸாகோ ஷென் சாங் என்பவருக்குமிடையே கடந்த 1997 ஆம் ஆண்டு தகராறு ஏற்பட்டது. இதையடுத்து ஷென்சாங் காணாமல் போனார்.

இதனிடையே 1999 ஆம் ஆண்டு ஸஹோலோ கிராமத்தில் தலையில்லாத உடல் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அது காணாமல் போன ஷென்சாங்கின் உடல். அவரை ஸாவேஹாய்தான் கொலை செய்துள்ளார் என்று கூறி, பொலிஸார் அவரைக் கைது செய்தனர். இதையடுத்து கடந்த 2002 ஆம் ஆண்டு ஸாவேஹாய்க்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

இந்நிலையில் ஷென்சாங் கடந்த 30 ஆம் திகதி வீடு திரும்பினார். அவர் ஷென்சாங்தான் என்பதை உறுதிசெய்த ஹெனன் நீதிமன்றம் அவரை வெள்ளிக்கிழமை விடுதலை செய்து உத்தரவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்றது

# சிறி நதியா நகை மாளிகை

## அட்சய திருதியை

16.05.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று தங்கப்பவுண் வாங்கும் விசேட தினமாகும். அன்றைய தினம் தங்கநகைகள் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு எமது நிறுவனங்களில் விசேடமாக அன்பளிப்புகள் வழங்கப்படும் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.



அழகிற்கு அழகு செய்யும் தங்க நகைகளுக்கு

மிகச்சிறந்ததும் கைராசியானதுமான நிறுவனம்

## சிறி நதியா நகை மாளிகை

01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 2222709

கிளை 56, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே - 021 2226744


## கல்வி முன்னேற்றக் கலந்துரையாடல்

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், முதன்மை ஆசிரியர்களுக்கான கல்வி அபிவிருத்திக் கலந்துரையாடல் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. எனவே இக்கலந்துரையாடலில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (50-201)

## கண்ணீர் அஞ்சலி



### கதிர்காமு கணபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற நில அளவை அத்தியட்சகர்)

எமது சங்கத்தின் நீண்டநாள் உறுப்பினரான நிலஅளவையாளர் கதிர்காமு கணபதிப்பிள்ளை அவர்களின் மறைவையொட்டி எமது சங்கத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கின்றோம்.

உத்தரவுபெற்ற
நில அளவையாளர் சங்கம் -வடபகுதி


## விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள
HK-125 உழவு இயந்திரம்
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 021 321 0026


## திருத்தி வாசிக்கவும்

அமரர் துரைசிங்கம் சிவராசா என்பவர் தொடர்பாக 11.05.2010 ஆம் திகதி உதயன் 14 ஆம் பக்கத்தில் வெளி யாகியிருந்த 5 ஆம் ஆண்டு நினைவலைகள் என்ற விளம்பரத்தில், 5ஆம் ஆண்டு என்றிருப்பது தவறாகும். அதனை 4 ஆம் ஆண்டு நினைவலைகள் என்று திருத்தி வாசிக்கவும்.

## மரண அறிவித்தல்கள்

### *கணபதிப்பிள்ளை சிவபாக்கியம்*

கோணர்வளவு, புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை சிவபாக்கியம் (10.05.2010) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- பார்வதி மண இணையினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இலட்சுமிப்பிள்ளை, சுப்பிரமணியம் மற்றும் கிருஸ்ணபிள்ளை, சரஸ்வதி, செல்லம்மா ஆகியோரின் சகோதக்ருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.05.2010) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோலி தெற்கு.

தகவல்:
திருமதி ச.சரஸ்வதி.

### *நடராசா மகேந்திரன்*



சரசாலை வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் தற்போது 64-70 1/1, சென். பெனடிக்ற் மாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13 மற்றும் தாமன்தோட்டம், அல்வாய் கிழக்கு, அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த நடராசா மகேந்திரன் 09.05. 2010 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் சரஸ்வதி, மனோகரன், புஸ்பவதி ஆகியோரின் அருமைச் சகோதரனும் சத்தியபாமாவின் அன்புக் கணவரும் கஜேந்திரன், கஜீபன், கஜரூபன், கஜீகா, கஜந்தன், அமரர் கஜந்தா, கவிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதந்திரவாணியின் மாமனும் செல்வராசா, இந்திராணி, சுந்தரலிங்கம், பரமேஸ்வரி, இரத்தினசிங்கம், நேசமலர், நேசரத்தினம், தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் மாணிக்கவாசகர், வேலாயுதம், சச்சிதானந்தம் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(13.05.2010) வியாழக்கிழமை தாமன்தோட்டம், அல்வாய் கிழக்கு, அல்வாயில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 3மணிக்கு சரசாலை வடக்கு கொம்பிகுளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாமன்தோட்டம்,*
*அல்வாய் கிழக்கு, அல்வாய்.*
தொ.பே. 0779782002
0779909812
0771319163

தகவல்:
திருமதி ம.சத்தியபாமா
(மனைவி),
பிள்ளைகள்.


## விசேட சலுகைகளுடன்..!

BCS British Computer Society - UK
The Chartered Institute for IT

BCS கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்கள் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் (Postgraduate) பட்டப்பின் படிப்பினைத் தொடரமுடியும்.

ESOFT ல் BCS கற்பவர்களே இலங்கைரீதியிலும், சர்வதேச ரீதியிலும் முதற்பரிசில்களைப் பெறுகிறார்கள் என்பதை மகிழ்வுடன் தெரியப்படுத்துகிறோம்.



edexcel-UK
HND
HND in Computing
HND in Business
HND in Business IT
HND in HRM
HND in Business Management
18 Months Only

Auto CAD
கொழும்பின் பிரபல விரிவுரையாளரால் 2D,3D வகுப்புகள் நடாத்தப்படுகிறது.

அனைத்துக் கற்கை நெறிகளுக்கும் புதிய பிரிவுகள் ஆரம்பம்..
Week end:- 16/05/2010, Week days:-17/05/2010

ESOFT www.esoft.lk
Jaffna Branch: 114, Navalar Road, Jaffna. T.P- 0212224142
Nelliady Branch: 153 Jaffna Road, Nelliady T.P- 0212264940

Call @ 077 309 9 308


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ICC WORLD TWENTY20 WEST INDIES 2010

# கிரிக்கெட் கோலாகலம்

30.04.2010 - 16.05.2010

## நியூசிலாந்தை வீழ்த்தியது இங்கிலாந்து! அரையிறுதிக்குள் நுழைந்தது பாகிஸ்தான்!!

செென்லூசியா, மே 12

நியூசிலாந்துடனான போட்டியில் 3 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றது இங்கிலாந்து அணி. இவ்வெற்றியின் மூலம் தமது அரையிறுதி வாய்ப்பை உறுதி செய்ததுடன் பாகிஸ்தான் அணியின் அரையிறுதி வாய்ப்பையும் உறுதி செய்தது.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் ஐ.சி.சியனி ருவென்ரி-20 உலகக் கிண்ணப் போட்டியின் சுப்பர்-8 பிரிவில் நேற்று முன்தினம் நியூசிலாந்து அணிகள் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து.

இரு அணிகளிலும் மாற்றங்களாக இங்கிலாந்து, பீற்றர்சனுக்கு ஓய்வு கொடுத்து ரவி போராவைக் களமிறக்க நியூசிலாந்தில் குப்தில் நீக்கப்பட்டு ரெட்மண்ட் சேர்க்கப்பட்டார்.

நியூசிலாந்து அணியின் ஆட்டத்தை ரைடர் - பிரண்டன் மக்கலம் இணை ஆரம்பித்தது. ஆனால் இந்த ஜோடியை இங்கிலாந்து அணியின் பந்து வீச்சாளர் பிரித்தனர்.

ரைடர் 9 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்க, மக்கலம் 33 ஓட்டங்களுடனும் ரெட்மண்ட 176 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழந்தனர்.

பின்னர் வந்த ரெய்லர் - ஸ்ரைரிஸ் ஜோடி அதிரடி காட்டியது. இதனையடுத்து அணியின் ஓட்ட எண்ணிக்கை ஓரளவு உயர ஆரம்பித்தது. ஸ்ரைரிஸ் 31 ஓட்டங்களுடனும் தொடர்ந்து வந்த ஹொப்கின்ஸ் ஒரு ஓட்டத்துடனும் வெளியேறினர்.

ரெய்லர் 44 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்ப பின்னர் வந்த வீரர்கள் பெரிதளவில் சோபிக்காததால் நியூசிலாந்து அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.

150 என்ற இலகுவான இலக்கினைத் துரத்த ஆரம்பித்தது. இங்கிலாந்து ஆரம்ப வீரர்களாக லும்ப், கீஸ்வெற்றர் ஜோடி ஆரம்பித்தது.

கீஸ்வெற்றர் 15 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்க ரவிபோபரா 9 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினார். கொலிங்வூட் 3 ஓட்டங்களுடன் ஏறமாற்ற லும்ப் 32, ரைட் 24, மோர்கன் 40 என சிறப்பாக ஆட 19.1 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து, 153 ஓட் டங்களை சேர்த்தது.

இவ்வெற்றியுடன் சுப்பர்-8 இல் 3 வெற்றிகளைப் பெற்று இங்கிலாந்து அரையிறுதிக்குள் நுழைந்ததுடன் வெளியேறும் சந்தர்ப்பத்தில் இருந்த பாகிஸ்தானுக்கும் அரையிறுதி வாய்ப்பை வழங்கியது. (6)




Barnabas
இன் மலிவு விற்பனை
247, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)
உடன் விரையுங்கள் உங்கள் தெரிவுக்கு...
★ 40 % Special Offer, 40% கழிவுடன்...
★ 14" Wega Sony, 21" Wega Sony, 29" Wega Sony மற்றும் G 21 T.V. கள்
★ DVD Player, Amp, Box, Dish Antenna, Home தியேட்டர் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் மிகக்குறைந்த விலையில்
5 வருட உத்தரவாதம்
Life Time Free Service
மதன் எலக்ரோனிக்ஸ்
சுதுமலைச் சந்தி, மானிப்பாய்.
0217901574, 0777448668.
பர்ணபாஸ் எலக்ரோனிக்ஸ்
360/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0217900728, 0777448668

### பெண்கள் 'ருவெண்ரி-20' கிரிக்கெட் தொடர்:

## அரையிறுதிக்கு முன்னேறியது இந்திய அணி! தொடரைவிட்டு வெளியேறியது இலங்கை!!

பெண்கள் 'ருவெண்ரி-20' உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் அரையிறுதிக்குள் நுழையும் வாய்ப்பை இலங்கைப் பெண்கள் அணி, இந்திய அணியிடம் பறிகொடுத்து தொடரை விட்டு வெளியேறியது.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்றுவரும் 'ருவெண்ரி-20' உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிக்கு ஆஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், நியூஸிலாந்து ஆகிய அணிகள் ஏற்கனவே தகுதிபெற்றுவிட்டன.

நான்காவது அணியை முடிவு செய்யும் போட்டி ('பி' பிரிவு) நேற்றுமுன்தினம் இரவு நடந்தது.

இதில், இந்தியா-இலங்கை அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி, துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள்நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 144 ஓட்டங்களைச் சேர்த்தது.

அரைச்சதம் கடந்த மிதாலி ராஜ் (52) கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

பின்னர், வெற்றியிலக்கைத் துரத்திய இலங்கை அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது.

இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் ரசங்கியா (31-ஆட்டமிழக்காமல்), கௌசல்யா (10) இருவரையும் தவிர ஏனைய வீராங்கனைகள் எவரும் இரட்டை இலக்க ஓட்டங்களைத் தொடவில்லை.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு வெறும் 73 ஓட்டங்களையே பெற்றது. இதனால், இந்திய அணி 71 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று அரைறுதிக்குள் நுழைந்தது.

இந்தத் தோல்வி மூலம் இலங்கை அணி, அரையிறுதி வாய்ப்பைக் கோட்டைவிட்டு தொடரிலிருந்து வெளியேறியது.

**போட்டி இல.11**

**2010 ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு 'உதயன்' நடத்தும் பரிசுப்போட்டி**

★ அனுப்புபவர் பெயர் :........................................

★ முகவரி :........................................

★ தொ.பே.இல. :........................................

**கேள்வி:**

1. 3ஆவது உலகக்கிண்ண ருவன்ரி 20 கிரிக்கெட் போட்டியில் சுப்பர் - 8 சுற்றிலிருந்து முதலாவதாக வெளியேறிய அணி எது?
   ........................................
2. இம்முறை ருவன்ரி 20 போட்டியில் முதலாவதாக அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறிய அணி எது?
   ........................................
3. சர்வதேச ருவன்ரி 20 போட்டியில் ஒரு போட்டியில் அதிக ஆறு ஓட்டங்களை எடுத்த அணி எது?
   ........................................

போட்டி இலக்கம் 11 இல் வெற்றி பெறும் போட்டியாளருக்கு சுதுமலைச் சந்தி மானிப்பாய் எனும் முகவரியில் அமைந்திருக்கும் *Mathan Electronics* நிறுவனத்தின் சார்பாக ரூபா 2,000/- பெறுமதியான பரிசுப்பொதி வழங்கப்படும்.

★ பூர்த்தி செய்யப்பட்ட கூப்பனை 'உதயன் பணிமனை', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டி இலக்கத்துடன் T-20 உலகக் கிண்ணப் போட்டி எனக்குறிப்பிடப்பட வேண்டும்.

ABHI Computer
நவீன கணனி உலகின் நம்பகரமான ஸ்தாபனம்
புதிய கணனிகளையும் , சகல விதமான கணனி உதிரிப்பாகங்களை பொற்றுக்கொள்ளவும் , கணனி தொடர்பான அனைத்து தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஒரே நிறுவனம்
எமது சேவைகள்
Video & photo Editing ,VHS TO CD,DVD,CD,DVD Writing,Prinring, Scanning என்பன செய்து கொடுக்கப்படும்
பிறந்த நாள் , திருமண வைபவங்கள் , பூப்புனித நீராட்டுவிழா என்பவற்றிற்கான படப்பிடிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் (வீடியோ போட்டோ)
வீடியோ மற்றும் போட்டோ ஓடர்கள் எம்மூடாக மேற்கொண்டால் ஐசிங்கேக் இலவசமாக செய்து தரப்படும்.
Computer Sales & Repair,
Phone Sales & Repair,
Phone Unlocking & Flashing,
Video, Audio,Mp3,Games DVD ,CD Sales,
Video Editing Softwares ! வருட உத்தரவாதத்துடன் கணனியில் பதிவு செய்து கொடுக்கப்படும்
ABHI Computer
252,254,Navalar Road Iluppaiyady Junction jaffna.
T.P:0214900341,H.P:0777271220.

### மட்டக்களப்பிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து அவர் உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு:

மட்டக்களப்பு தனித்தமிழ் - தமிழ்பேசும் மக்களின் மாவட்டம். இங்கு சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்ட நடவடிக்கையை உள்ளாடும் கள்ளாடுமாகச் செய்துவருகிறது.

இந்த மாவட்டத்தின் அரச உயர் பதவிகளுக்கே பெரும்பான்மை இனத்தவரை நியமித்து சிங்களக் குடியேற்றத்தை மேற்கொள்வதற்கு பெரும் கபடத்தனமாகச் செயலாற்றி வருகிறது.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களுக்கு அரச அதிபர்களாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே உள்ளனர்.

அதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரை அரச அதிபராக நியமிப்பதற்கான முன்னோடிச் செயற்பாட்டே இந்த உதவித் தேர்தல் ஆணையாளரின் மாற்றம். மட்டக்களப்பு மாவட்டம் தனித் தமிழ்ப் பேசும் மக்கள் வாழும் பிரதேசம். இங்குள்ள அதிகாரிகள் அனைவரும் தமிழராகவே இருக்க வேண்டும்.

இன்னொரு விடயத்தையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். இங்குள்ள சகல அதிகாரிகளையும் பெரும்பான்மை இனத்திலிருந்து தெரிவுசெய்து சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ள அரசு திட்டமிட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு கடந்த ஏழு வருடங்களாக உதவித்தேர்தல் ஆணையாளராக தமிழரான கிருஷ்ணானந்த பிள்ளை என்பவ்ரே கடமையில் உள்ளார். அவர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் வேறு ஓர் இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவரின் வெற்றிடத்துக்கு தற்போது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட உள்ளார்.

''மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரை நியமிக்கும் அரசின் செயற்பாடானது சிங்களப் பிரதேசமாக மட்டக்களப்பு மாவட்டத்தை மாற்ற முயற்சிக்கும் செயலாகும்.''

எமது பிரதேசத்துக்கு தற்போதுள்ள உதவித் தேர்தல் ஆணையாளரைத்தான் நியமிக்க வேண்டும் என்று நாம் கோரவில்லை. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரை நியமிப்பதை நிறுத்தி தமிழர் ஒருவரை நியமிக்கவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் - என்றார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரையிறுதியில் இலங்கை

ஐ.சி.சியின் ருவென்ரி - 20 உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய அணியை 5 விக்கெட்டுக்களினால் வீழ்த்தியது இலங்கை. இதனால் அரையிறுதிக்கு செல்லும் வாய்ப்பு மேலும் அதிகரித்துள்ளது.

நேற்றைய போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களைப்பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 19.5 ஓவர்களில் 5 விக்கெட்டை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

இன்று அதிகாலை நடைபெற்ற அவுஸ்திரேலியா - மேற்கிந்தியத் தீவுகளுடனான போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றிபெறும் பட்சத்தில் இலங்கையின் அரையிறுதி வாய்ப்பு உறுதியாகும்.

## காயங்களுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் அச்சுவேலிப் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அந்த யுவதி வழங்கிய தகவலின்படி -

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையத்தில் வசித்துப் பின்னர் அங்கிருந்து வெளியேறி கரவெட்டிப் பகுதியில், தான் வசித்துவந்ததாகவும் - திங்கட்கிழமை காலையில் நான்குபேர் தன்னை வழிமறித்து வாகனத்தில் கடத்தியதாகவும் பின்னர் வல்லைவெளிப் பற்றைக்குள் செவ்வாய்க்கிழமை காலையில் கண்விழித்தபோது கிடப்பதை உணர்ந்ததாகவும் தெரிவித்தார்.

தலைப்பகுதி, கழுத்து பிடரிப்பகுதிகளில் சிறிய கத்தியால் கீறப்பட்ட காயங்கள் காணப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது.

பெண்மணியின் உடலில் ஏற்பட்ட சிறுகாயங்கள் மற்றும் உபாதைகளினால் அவர் இயல்புநிலையில் காணப்படவில்லை என்றும், ஆனால் ஆபத்து ஏதுமில்லை என்றும் அச்சுவேலிப் பிரதேச வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அச்சுவேலிப் பிரதேச வைத்தியசாலையில் பெண்மணி கொடுத்த முறைப்பாட்டின் பிரகாரம் அவரின் பெயர் வி. லங்கா தேவி (வயது 37) எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-11)

புதிய பிரிவுகள் ஆரம்பம் !!
Canada, Australia,
New Zealand , UK
போன்ற நாடுகளுக்கு
செல்வோருக்கான
IELST வகுப்புக்கள் பிரிவு -ii
ஆரம்பம்!!!
(4 Months)
அரசு, தனியார் மற்றும் NGO களில் தொழில் புரிவோருக்கும் மிகவும் பயனுள்ள கற்கைநெறி !!
பிரிவுகள் ஆரம்பம் :- 15/05/2010
விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

## நக்ஸலைட்டுக்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ நடவடிக்கை மூலம் நக்ஸலைட்டுக்களை அழிப்பதற்கு எம்மிடம் பலமிருக்கிறது.

ஆனால் அதில் பல்லினங்களின் விவகாரங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் எங்களால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது என்றும் அமைச்சர் சிதம்பரம் கூறினார்.

எமக்கு மூன்று முனைகளில் அச்சுறுத்தல் உள்ளது. ஆனால் அவற்றை இந்தியா முறியடித்து விடும் என்று நம்புகிறோம் -

ஜிகாத் இயக்கத்தினரின் பாகிஸ்தானின் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தினாலும் எழுந்துள்ளது. ஆனால் அந்த வகைப் பயங்கரவாதத்துக்கு மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும் ஊக்குவிப்புக் கிடைக்கின்றது. ஆகையால் எல்லைதாண்டிய பயங்கரவாதம் என்றால் என்ன என்பதை மீள அர்த்தப்படுத்த வேண்டிய தேவை உண்டு - என்றார்.

தீவிரவாதத்தை ஒழிப்பதற்காக அரசு ஆராய்ந்து எடுக்கப்பட்டுள்ள முடிவுகளை சரியான பாதையில் முன்னெடுத்தால் நிச்சயம் அமைதியைக் கொண்டு வரமுடியும் - என்று அவர் கூறினார். (அ-1)

## இனப்பிரச்சினைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(ORF) என்ற சுயாதீன ஆய்வு நிறுவனம் ஒழுங்கு செய்திருந்த புலமையாளர்களின் மகாநாடே நேற்று ஆரம்பமானது. அதனை இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமாராவ் தொடக்கி வைத்து உரையாற்றினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:

இலங்கையில் போர் முடிந்துவிட்டது, ஆனாலும் அதற்கு இன்னும் நிறையவே சவால்கள் உண்டு. போரினால் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை அங்கு பூதாகரமாகியுள்ளது. அவர்களை மீளக் குடியமர்த்துவதற்கும் அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கவும் இலங்கைக்கு பெரும் உதவிகள் தேவைப்படுகின்றன.

ஆனால் அந்தப் பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்க்க வேண்டுமனால், முதலில் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் நிரந்தர தீர்வு காணப்படுவது அவசியம்.

இலங்கையில் இராணுவ மோதல்கள் முடிவடைந்துள்ளமை புதிய பல சவால்களை உருவாக்கியுள்ளது. இந்தச் சவால்கள் எவற்றையும் நாம் குறைத்து மதிப்பிட முடியாது.

இதில் முக்கியமானது, பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமையாகும். அவர்கள் பல தசாப்த மோதலின் போது காணப்பட்ட நாளாந்த வன்முறைகள், அச்சத்தின் பிடியிலிருந்து மீண்டு வந்துள்ளனர்.

கடந்த வருடம் இலங்கையின் வடபகுதியில் மீளக் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் 500 கோடி ரூபா உதவியை வழங்குவதாக அறிவித்தார்.

இது தவிர வடபகுதியில் புகையிரத சேவையை ஏற்படுத்துவதற்கும் உட்கட்டுமானத் திட்டங்களுக்கும் 41 கோடி டொலர் கடனுதவியை மீண்டும் வழங்கியுள்ளார்.

இலங்கைக்கு மூன்றாவது தடவையாகவும் 382 மில்லியன் டொலர் உதவி விரைவில் வழங்கப்படவுள்ளதாக வெளியுறவுச் செயலர் நேற்றைய மாநாட்டில் வைத்து தகவல் வெளியிட்டார். (அ)

## ஊடக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 23ஆம் திகதி பிரதி ஊடக அமைச்சராக மேர்வின் சில்வா நியமிக்கப்பட்டபோதிலும், கடந்த 5ஆம் திகதி புதிய அமைச்சர்களுக்கான நியமனங்களின்போது ஊடகத்துறை அமைச்சராக கெஹலிய ரம்புக்வெல நியமிக்கப்பட்டார்.

இதன் பின்னர் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா பதவி விலகி பெருந்தெருக்கள் பிரதி அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-சி)

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கவேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

ஐ.நாவுக்கான அமெரிக்க நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சுசன் இ. ரைஸ் விடுத்துள்ள அறிக்கையிலேயே இதுகுறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஆணைக்குழுக்களைப் பொருத்தமான முறையில் அமைக்கும் போது, அவற்றுக்குப் பரந்துபட்ட மக்கள் ஆதரவு இருக்கும். இவ்வகையான ஆணைக்குழுக்களால் பெறுமதி வாய்ந்த பங்களிப்பை ஆற்றமுடியும் என்பதை உலக நாடுகளின் அனுபவங்கள் புலப்படுத்தியுள்ளன.

ஆணைக்குழு உறுப்பினர்கள் சுயாதீனமானவர்களாக, பக்கச்சார்பற்றவர்களாக, திறமை வாய்ந்தவர்களாகக் கருதப்படுகின்றமை தேசிய நல்லிணக்கத்தை முன்னேற்றும் விடயத்தில் பயனுள்ளவையாக அமையும் என்பதைப் பரந்துபட்ட அனுபவங்கள் புலப்படுத்தியுள்ளன.

மிக மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்வதற்கான முழுமையான அதிகாரம் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும் சாட்சிகளுக்கும் போதியளவு பாதுகாப்பு வழங்கப்படவேண்டும்.

மேலும் போதியளவு வளங்களை ஆணைக்குழுவுக்கு அரசு வழங்குவதுடன் அது முன்வைக்கும் பரிந்துரைகளைத் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும்.

இலங்கை ஜனாதிபதியால் உருவாக்கப்படவுள்ள இந்த ஆணைக்குழு இலங்கையில் மோதலில் பிரதானமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகள் மற்றும் விருப்பங்களைப் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும்.

அவர்களுடைய தேவைகளைப் பிரதிபலிப்பது ஆணைக்குழுவின் வெற்றிக்குப் பிரதான்மானதாக அமையும்.

இவ்வாறான பொதுவான கொள்கைகளின் பின்னணியில், இலங்கையின் மோதலின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றவை எனத் தெரிவிக்கப்படும் சர்வதேச மரபுகளை மீறும் நடவடிக்கைகள் குறித்து விசாரிப்பதற்காக ஆணைக்குழுவை அமைக்கும் முடிவை வரவேற்கிறோம். - எனத் தெரிவித்துள்ளார். (அ-சி)

## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, மே 12

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2239ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "P" என்ற ஆங்கில எழுத்தும் 4/0/1/1/1/5 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. 4/0/1/1/1/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இரண்டு பேருக்கு முதலாம் பரிசாக தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

0/1/1/1/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கும்.

1/1/1/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 144 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

1/1/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,216 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

1/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12,196 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

5 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,20,879 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 4/0/1/1/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

4/0/1/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 121 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

4/0/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,193 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

4/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12,152 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"P" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 48,391 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஒ-10)

## வானில் ஏற்றிச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவியான சண்முகராஜா அனுஷியா (வயது 18) என்பவரே தாக்கப்பட்டு அடிகாயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று மாலை 5 மணியளவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த விவகாரம் தனிப்பட்ட பிரச்சினையா அல்லது கடத்தல் சம்பவமா என்பது குறித்து உடனடியாகத் தெரியவரவில்லை. (ஒ-11-236)

## மரண அறிவித்தல்

### அம்பிகைபாகன் கணேசலிங்கம்



கைதடியைப் பிறப்பிடமாகவும் கல்வயல் சாவகச்சேரியைப் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பிகைபாகன் கணேசலிங்கம் 10.05.2010 திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகன் - தங்கரட்ணம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் சுந்தரலிங்கம், தையல்நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் நந்தகுமார், காலஞ்சென்ற சுபாசினி மற்றும் நந்தினி, காலஞ்சென்ற பாமினி மற்றும் ஜெயக்குமார் (லண்டன்), உதயகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுயாதாவின் சிறிய தந்தையாரும் கோமதி, சிவராஜா, இரத்தினசிங்கம், விநோஜா (லண்டன்), தனராஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும் ராஜலட்சுமி, சந்தானலட்சுமி, தவமணி, சிவராஜா (லண்டன்), சிவானந்தம் ஆகியோரின் மைத்துனரும் பிரதீபன், பிரசாந்தினி, பகிரதன், தர்சிகா, விஜிந்தன், அஸ்மிதா (லண்டன்), தரணிகா, சுந்தர்பவன், கஜித்திரன், மகினன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2010) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

பெருங்குளம் மட்டுவில் வீதி,
கல்வயல், சாவகச்சேரி. (98058)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

R.K. & SONS - ELECTRONICS
Main Street, Nelliady
திருத்தவேலை காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டு இருந்த எமது நிறுவனம் இன்று (12.05.2010) புதன்கிழமை முதல் புதுப்பொலிவுடன் மீண்டும் தனது சேவையை ஆரம்பித்துள்ளது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
0775029034, 0776660699,
0779385356, 0775137255
உரிமையாளர்.

TOYOTA HIACE வான் விற்பனைக்குண்டு.
மிகவும் நல்ல நிலையில் உள்ள 53- XXXX தொடரிலக்கமுடைய
17 இருக்கைகளைக் கொண்ட TOYOTA HIACE
வான் விற்பனைக்குண்டு.
0774528818


THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
2011 A/L ENGLISH MEDIUM
CHEMISTRY INORGANIC / TUE, THU 3.15 - 4.15
COMMENCE ON - 13.05.2010
By: ANPU

மாபெரும் ③மாத தொடர் கருத்தரங்கும் பரீட்சையும்
பொருளியல் A/L 2010
ஆரம்பம்:13.05.2010 வியாழன் 9 மணி
ஒவ்வொரு வியாழன் காலை 9 மணி - 12 மணி வரை
கருத்துரை வழங்குபவர்....
திரு.R.அருணன் (B.Com)
* வெளி மாவட்ட மாணவர்கள் பங்குபற்றலாம்.
* கொழும்பு மாவட்ட வினாத்தாள்களினை உள்ளடக்கியது.
* ⑧அலகுகளும் முழுமையாக செய்து விடப்படும்.
* "A" தரச் சித்திக்கு உத்தரவாதம்
இவை யாவும் ஒரேயொரு கட்டணம் ரூபா 300
BEACON - யாழ்.நகர்
(வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயில் அருகில்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org